விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 08 வெள்ளிக்கிழமை (22.05.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 154

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே


# வவுனியாவில் கடையடைப்பு

## போக்குவரத்துக்கள் நிறுத்தம் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவியின் படுகொலைக்கு காரண மானவர்களை உடனடியாக தண்டிக்கக்கோரி வவுனியாவில் நேற்று கடையடைப்பு நடைபெற்றது. அதே சமயம் இதே கோரிக்கைக்காக முழுமையான கடை யடைப்பும் ஆர்ப்பாட்டங்களும் வன்முறைகளும் நிலவிய யாழ்.குடாநாடு நேற்று வழமைக்குத் திரும்பி யுள்ளது.

(23ஆம் பக்கம் பார்க்க)



## சட்டத்தரணிகள் இன்று பணிப்புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதிமன்றக் கட்டத் தொகுதியினை முற்றுகையிட்ட கும்பல் வன்முறையில் ஈடுபட்ட சம்பவத்தினைக் கண்டித்து வட மாகாண சட்டத்தரணிகள் சமூகம் இன்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளது.

இவ் அறிவிப்பினை யாழ்.மாவட்ட சட்டத்தரணிகள் சமூகம் விடுத்துள்ளது. நேற்று யாழ்.நீதிமன்றக் கட்டத் தொகுதி 23ஆம் பக்கம் பார்க்க....

## வன்முறையை தடுக்க முயற்சிக்காத பொலிஸார் யாழ்.நீதிபதி குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதிமன்ற வளாகம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வன்முறை சம்பவம் இடம்பெறும் வரை பொலிஸார் அதனை தடுக்க முயற்சிக்கவில்லை என யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி பொ.சிவகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்.நீதிமன்றில் இடம்பெற்ற வன்முறையில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப் 23ஆம் பக்கம் பார்க்க....

## சுவிஸ் குமாருக்கு விளக்கமறியல்



(யாழ்ப்பாணம்)

சுவிஸ் நாட்டிற்கு தப்பிச் செல்லவிருந்தபோது வெள்ளவத்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சுவிஸ் குமார் என அழைக்கப்படும் மகாலிங்கம் சசிக்குமாரை எதிர் வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் பொ.சிவகுமார் உத்தரவிட்டார்.

புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவி சி.வித்தியாவின் படுகொலைக்குச 23ஆம் பக்கம் பார்க்க....

## சமாதானத்தை ஏற்படுத்தவே பொய்யான வாக்குறுதியளித்தேன்

### பிரதிப் பொலிஸ் மா அதிபர் பதில்

(யாழ்பாணம்)

அசாதாரண சூழ்நிலையில் சமாதானத்தை ஏற்படுத்தவே தான் புங்குடுதீவு மக்களுக்கு பொய்யாக எழுத்துமூலம் உறுதியளித்ததாக தெரிவித்த வடக்கு மாகாண சபையின் சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்க சமாதானத்தை நிலை நாட்ட தேவையான இவ்வாறான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.



யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் நேற்று காலை பத்து மணியளவில் ஊடகவியலாளர் சந்திப்பொன்று நடைபெற்றது.

இச்சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவரினால் கேட்கப்பட்ட கேள்வக்கு பதிலளிக் 23ஆம் பக்கம் பார்க்க....

## வழமைக்குத் திரும்பும் யாழ்ப்பாணக் குடாநாடு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மகாவித்தியாலய மாணவி சி.வித்தியாவின் கொலையைக் கண்டித்து கலவரமடைந்திருந்த யாழ்ப்பாணக்குடாநாடு நேற்று முதல் இயல்பு நிலைக்குத் திரும்பி வருகிறது. கடந்த 15ஆம் திகதி மாணவியின் கொலையைக் கண்டித்து ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் விஸ்வரூபம் 23ஆம் பக்கம் பார்க்க....

## வித்தியா கொலை வழக்கு

## 3 சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு



(புங்குடுதீவு)

புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவி சி.வித்தியா படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் ஆரம்பத்தில் கைது செய்யப்பட்ட சகோதரர்களான மூன்று சந்தேக நபர்களையும் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ. நீதவான் 02ஆம் பக்கம் பார்க்க....

## கைதான 127 பேருக்கு விளக்கமறியல் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதிமன்ற கட்டடத் தொகுதி மற்றும் பொலிஸார் மீது கற்களால் எறிந்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை மற்றும் யாழ்.நகரப் பகுதிகளில் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 129 பேரில் 127 நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் இவர்களை அனுராதபுரம் சிறையில் தடுத்து வைக்குமாறும் உத் 24ஆம் பக்கம் பார்க்க....

### அநுராதபுரம் சிறைக்கு மாற்றம்



நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## இராசேந்திரம் ஜெயச்சந்திரன்



தொண்டைமானாறைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் ஜெயச்சந்திரன் அவர்கள் 20.05.2015 புதன்கிழமையன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசேந்திரம் இராஜேஸ்வரியின் மகனும், காலஞ்சென்ற தங்கலீலாவதியின் அன்புக் கணவரும், ஜீவமலர் (கீதா), உதயச்சந்திரன், தர்மினி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயசிறி, தீபாஞ்சலி, ரஞ்சனன் ஆகியோரின் மாமனாரும், ஹரிஷாந்த், றஜீவினி, ஹரிகரன், எழிலன், சானுஜன், பிரீத்தி ஆகியோரின் பேரனும், விமலேஸ்வரி, கெங்காதேவி ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.05.2015 புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஓடை ஒழுங்கை,
சவனாய், பருத்தித்துறை.

தகவல்:-இ.ஜெயசிறி (மருமகன்)
குடும்பத்தினர்.

(சி-1030)

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

### அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை.
வட்டாரம்:02
ஆதன இலக்கம்:58/21, சுதுமலை வீதி

வட்டாரம் 02 சுதுமலை வீதி, ஆதன இலக்கம் 58/21 இல் அமைந்துள்ள (உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவில்பற்று சுதுமலை இறை "குருதாவில்" என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு குளி 17 1/4 கொண்ட இவ்வாதனமானது சுதுமலையைச் சேர்ந்த சூசைப்பிள்ளை அன்ரன் கெப்பிறலும், சூசைப்பிள்ளை அன்ரனி பெர்ணான்டோ திருமதி அனற்றேசிய கருணாநிதி, சூசைப்பிள்ளை கிறிஸ்ரி பிலிக்ஸ் உம் ஆகிய இவர்களால் நன்கொடை உறுதிமூலம் சுதுமலையை சேர்ந்த இமல்டாக் கிறேஸ் மகாதேவன் என்பவருக்கு குறித்த ஆதன மானது பிரசித்த நொத்தாரிஸ் திரு.சி.இளங்கீரன் முகதாவில் நிறைவேறிய 1988ஆம் இலக்க 2013.08.21ஆம் திகதிய நன்கொடை உறுதிமூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். "குருதாவில்" நிலப்பரப்பு குளி 17 1/4 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் இமல்டாக் கிறேஸ் மகாதேவன் என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்..

தவிசாளர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

(537)

## 3 சந்தேக...

நீதிமன்ற நீதவான் பொ.சிவகுமார். உத்தரவிட்டுள்ளார்.

இந்த மூன்று பேர் தொடர்பான வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் அங்கு அவர்களைக் கொண்டு செல்வதில் இருந்த பாதுகாப்பு பிரச்சினை தொடர்பில் சிறை அதிகாரிகள் ஊர்காவற்றுறை நீதிவானுக்கு தெரியப்படுத்தினர்.

இதனை ஏற்றுக்கொண்ட ஊர்காவற்றுறை நீதவான் இது தொடர்பில் யாழ்.நீதவான் நீதிமன்றத்துக்கு அறிவித்தல் அனுப்பியதையடுத்து யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே நீதவானால் சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். கடந்த 13ஆம் திகதி பாடசாலைக்குச் சென்ற மாணவி படுகொலை செய்யப்பட்டார். இதனைத் தொடர்ந்து சகோதரர்களான 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு. ஊர்காவற்றுறை நீதிமன்றத்தால் நேற்றைய தினம் வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்த படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் 5 சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டு. எதிர்வரும் ஜூன் மாதம் 1 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## மாணவர் உள்வாங்குகை : கல்வியாண்டு "2015 June" செப்டம்பர்
## BCAS Campus - Jaffna

தனியார் உயர் கல்வித்துறையில் 16 வருட அனுபவத்தையும் நம்பிக்கையும் கொண்ட **BCAS Campus** யாழ் வளாகத்தில் புதிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

### உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிகள் (BTEC Pearson edexcel HNDs)



கற்கை நெறிகள்

- **Civil Engineering**
- **Biomedical Science**
- **Quantity Surveying**
- **Computing & System Development**
- **Business Management**
- **Business Marketing**
- **HR Management**

| | |
|---|---|
| காலம் | : நான்கு கல்வி அரையாண்டுகள் (1வருடம் 6 மாத கற்கை காலம் +6 மாதகால தொழில்சார் பயிற்சி) |
| கட்டணம் | : கற்கை நெறிக்கேற்ப வேறுபடும் |
| மொழிமூலம் | : ஆங்கிலம் |
| அனுமதி | : க.பொ.த உயர் தரம் (பெறுபேறுகளை எதிர்பார்த்து நிற்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்) |

மேற்கூறப்பட்ட கற்கைநெறிகள் நான்கு கல்வி அரையாண்டுகள் கொண்டதாகவும், இக்கற்கை நெறிகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினாலும் (UGC) சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட இளமாணி பட்டப்படிப்பை பூர்த்தி செய்வதற்கு மேலதிக ஒருவருட / இறுதியாண்டு (Top-Up) கற்கையை 105 க்கு மேற்பட்ட சர்வதேச பல்கலைக்கழகங்களிலோ அல்லது எமது நிறுவனத்தின் கொழும்பு வளாகத்திலோ தொடர்ந்து பட்டத்தை பெற முடியும்.

### டிப்ளோமா கற்கை (Diploma)



கற்கை நெறிகள்

- **CAD & BS**

க.பொ.த சாதாரண தரம் அல்லது முழுமையற்ற க.பொ.த உயர் தரத்துடன் கட்டிட நிர்மாணத் துறையில் 6 மாதகால படவரைஞர் பயிற்சி நெறியின் இறுதியில் UK edexcel அங்கீகாரம் பெற்ற டிப்ளோமா சான்றிதழை பெற்றுக்கொள்ள முடியும்.

- **BTEC edexcel National Diploma in Engineering (IEF)**

Engineering துறையில் க.பொ.த சாதாரண தரம் அல்லது முழுமையற்ற கா.பொ.த உயர் தரத்துடன் சர்வதேச இளமாணி பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்கான 1 வருட (2 கல்வி அரையாண்டுகள்) அடிப்படை கற்கை நெறி UK edexcel அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழை பெற்றுக் கொடுக்கும்.

### கணனி மற்றும் ஆங்கில பயிற்சி பாடநெறிகள் (UK edexcel)

கற்கை நெறிகள்

- **English**

நான்கு மாத காலம் கொண்ட ஆங்கில பாடநெறி ஆங்கிலத்தில் பேச எழுத வாசிப்பதற்குரிய முழுமையான பயிற்சி அளிக்கப்படுவதுடன் சர்வதேச சான்றிதழையும் பெற்றுக்கொடுக்கிறது.

- **Information Technology (IT)**

Concept of Information Technology, Computer Maintenance & File Management, Microsoft Office, Information & Communication, Website Development, Computer Programming & Hardware & Networking போன்ற பிரிவுகளில் முழுமையாக பயிற்சியளிப்பதுடன் சர்வதேச அங்கீகாரம் கொண்ட சான்றிதழையும் பெற்றுக்கொடுக்கிறது.

- **IELTS**

சர்வதேச ஆங்கில மொழித் தகைமைகளை உத்தரவாதப்படுத்தும் இப்பாட நெறியில் Speaking, Listening, Reading and Writing போன்ற பிரிவுகளில் முழுமையானதும் தனிப்பட்ட கவனமும் செலுத்தப்படுகிறது.

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
JAFFNA

மேலதிக தகவல்களுக்கு:
077 710 2131
16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.
T: 021 2219910

15 YEARS of Trust & Excellence in Higher Education

Design@www.MacroAdz.com

(சி-1035)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

கப்பலில், விமான நிலையத்தில் வேலை செய்ய விருப்பமா? ஆண்/பெண் இருபாலாருக்கும் உயர்ந்த சம்பளத்துடன் உடனடி வேலை. 35000 (பின்னர் வெளிநாட்டு துறைமுகம்/விமான நிலையங்களில் வேலை)

இப்போதே தொடர்பு கொள்ளுங்கள்:-
071 647 6000

## தேவை

எட்னா சொக்லட், கொக்கர்கோலா, மலிபன், அங்கர், எலிபன், சொக் ஐஸ்கிறீம், தொழிற்சாலைக்கு ஆண்/பெண் 60 பேர் தேவை. உற்பத்தி/பொதியிடல்/ லேபர் பிரிவுகளுக்கு உதவியாளர்கள் தேவை. மாதச் சம்பளம்:- 35000

இப்போதே தொடர்பு கொள்ளுங்கள்: 075 921 9223


# இளந்தலைமுறையினரைப் பாதுகாப்பதற்கு ஒரு பரந்த திட்டம் வகுக்கப்படல் வேண்டும்

## புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சி

நாட்டில் பெண்கள், யுவதிகள், மாணவிகள், சிறுமிகள் என்போர் மீதான பாலியல் வக்கிர செயற்பாடுகளும் சித்திரவதைகளும் வன்புணர்வுக் கொலைகளும் ஏனைய ஒடுக்குமுறைகளும் சமூகக் கொடுமைகளாகத் தொடர்கின்றன.

இவற்றில் ஒன்றாக அண்மைய கொடூரச் சம்பவமாக வடபுலத்தின் புங்குடுதீவு வித்தியாலய மாணவி சி.வித்தியா (வயது-18) மீதான வன்புணர்வுப்படுகொலை இடம்பெற்றிருக்கின்றது. இவ் ஈனச் செயலில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக மக்கள் மத்தியில் கண்டனங்களும் எதிர்ப்புகளும் கவனயீர்ப்புப் போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவற்றில் மக்களால் வெளிக்காட்டப்பட்டு வரும் கோபமும் எதிர்ப்பும் நியாயமானவையாகும். அதேவேளை சமூகச் சிதைவுகளுக்கும் சீரழிவுகளுக்கும் பாலியல் வக்கிரங்களுக்கும் காரணமாக அமைந்துள்ளவற்றைக் அடையாளம் கண்டறியவும் அவற்றிலிருந்து பெண்களையும் இளந்தலைமுறையினரையும் பாதுகாப்பதற்கான ஒரு பரந்த திட்டம் வகுக்கப்பட வேண்டும். அதற்குச் சகல அரசியல் கட்சிகளும் சிவில் சமூக பொது அமைப்புகளும் சமூக அக்கறையுள்ள அனைவரும் ஒன்றுகூடிச் செயலாற்ற முன்வரல் வேண்டும்.

குறிப்பாக அனைத்து அரசியல் கட்சிகளும் தத்தமது அரசியல் நிலைப்பாடுகள் நோக்கங்களுக்கு அப்பால் சமூக அக்கறைசார்ந்த பொதுவெளியில் ஒன்றிணைந்து சமூக கலாசார விழிப்புணர்வுக்கான பொதுத்திட்டத்தை வரைந்து முன்னெடுக்கத் தமது பங்களிப்பை வழங்க முன்வரல் வேண்டும் என்னும் அழைப்பை எமது புதிய ஜனநாயக மார்க்சிச-லெனினிச கட்சி விடுக்கின்றது.

இவ்வாறு புதிய-ஜனநாயக மார்க்சிச-லெனினிசக் கட்சியின் அரசியல் குழு சார்பாக அதன் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும் அவ் அறிக்கையில், போரின் விளைவான இழப்புகளும் அழிவுகளும் ஒரு புறத்தில் மக்களை வாட்டி வதைத்து நிற்கின்றன. மறுபுறத்தில் வன்முறைச் சிந்தனைகளும் பழிவாங்கும் மனோபாவமும் பாலியல் வக்கிரப் போக்குகளும் சமூகக் கலாசார சீரழிவுகளாக் காணப்படுகின்றன.

குறிப்பாக இளந்தலைமுறையினர் கலாசாரத் திணிப்புகளுக்கு ஆளாகி சமூக நோக்கும் அக்கறையும் இன்றி சமூகச் சிதைவுகளுக்கு உள்ளாகி வருகின்ற சூழலே இருந்து வருகிறது. மதுக்கடைகளின் பெருக்கமும் போதைவஸ்துப் பாவனையின் திட்டமிட்ட திணிப்பும் வணிக சினிமாவின் சீரழிந்த ஊடுருவல்களும்நவீன தொழில்நுட்பத்தின்பாதக விளைவுகளும் சமூகத்தை நச்சுப்படுத்தி மனித விழுமியங்களைச் சாகடித்து வருகின்றன என்றும அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)


# சமூக சேவைகள் திணைக்களம், வடமாகாணம்.

## பெறுகைகளுக்கான அழைப்பு

கைதடி அரச முதியோர் இல்லத்திற்கான புதிய உலர் உணவு, மரக்கறிகளும்,பழங்களும், மாமிச உணவு, பொதியிடப்பட்ட உணவுப் பொருட்கள், வெதுப்பக உணவு, பால் மற்றும் தொற்று நீக்கிப் பொருட்கள் விநியோகம் -2015/16

1. வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான, தகைமை வாய்ந்த புதிய உலர் உணவு,மரக்கறிகளும்,பழங்களும், மாமிச உணவு, பொதியிடப்பட்ட உணவுப் பொருட்கள், வெதுப்பக உணவு, பால்மற்றும் தொற்றுநீக்கிப் பொருட்கள் விநியோகத்தர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

2.விலைக்கேள்விதாரர் உலர் உணவு விநியோகம் தொடர்பில் வியாபார பெயர் பதிவினையுடைய ஒரு நபராக அல்லது நிறுவனமாக இருத்தல் வேண்டும்.

3.யாழ்ப்பாண மாவட்டத்தில் தலைமை அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4.விலைமனுதாரர் கேள்வி கோரப்படும் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட அரச நிறுவனங்களுக்கான உணவு வழங்கல் சேவையில் மூன்று (03) வருடத்திற்கு குறையாத முன் அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5.பொருத்தமான கேள்வி வைப்பு பணம் செலுத்தப்பட்டமை பெறுகைகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

6.கேள்வி சமர்ப்பிப்பில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர் இத் திணைக்களத்தில் கிடைக்கும் **"Application for Bid Documents"** என்றபடிவத்தினைபூர்த்திசெய்து பெறுகைக்கு மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா 1000 காசாக செலுத்தி தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 22.05.2015 இன்று தொடக்கம் 12.06.2015 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 3.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். மேலும் 03.06.2015 காலை 10.00 மணிக்கு திணைக்களத்தில் இடம்பெறும் விலைக் கேள்விகள் தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டத்திலும் கலந்து கொள்ளலாம்.

7.**"Diet Supply - 2015/16, Elders Home Kaithady, Reference No NP/ 24/2/3/03/2015-16"** என்ற விபரம் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்படாத விபரம் குறிக்கப்படாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

8.விலைக்கேள்விகள் 15.06.2015ஆம் திகதி 1.30 மணிக்கு முன்பதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாக இத் திணைக்கள பணிப்பாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் இடுவதன் மூலம் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக்கேள்விகள் 15.06.2015 ஆம் திகதி 2.00 மணிக்கு திறக்கப்படும்.

9. விலைமனுதாரர்கள் அல்லது எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட அவர்களின் பிரதிநிதிகள் மட்டுமே பெறுகைகள் திறக்கப்படும் போது அனுமதிக்கப்படுவர்.

10. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கு அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவுக்கு அதிகாரமுள்ளது.

ந.இன்பராஜ்,
தலைவர், திணைக்கள பெறுகைகள் குழு,
சமூக சேவைகள் திணைக்களம் வ.மா
கண்டி வீதி, கைதடி.
தொலைபேசி : 021 320 2464 தொலைநகல் : 0217539145
மின்னஞ்சல் : socialnp@sltnet.lk

(சி-1019)



# 7 ஆம் ஆண்டு நினைவினில்

## விஜயரட்ணம் கௌரீசன் [கௌசி]

பிறப்பு: 1985.05.12

இறப்பு: 2008.05.22



ஆண்டுகள் ஏழு ஆனாலும் அழியாது உன் நினைவுகள்
ஆயிரம் ஜென்மம் எடுத்தாலும் மாறாது உன் நினைவுகள்
பாசமான உறவுகளை பரிதவிக்க விட்டுச் சென்றது ஏனோ
நீ வாழ்ந்த எம் இல்லம் ஒளி இழந்து போனதையா
கௌரீசா

எம் வாழ்வில் எத்தனை இன்பம் வந்தாலும்
அவையெல்லாம் உனக்கு ஈடாகுமா?

என்றும் உன் நினைவுகளுடன் உன் ஆத்ம சாந்திக்காக வேண்டும்...

(சி-1025)

வாட்டுவாகல், முல்லைத்தீவு.

அம்மா, அப்பா, தங்கை, மகள், உடன்பிறவா சகோதரன், பெறாமகன்


# இராசி பலன்

22.05.2015
(வைகாசி 08, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
சதுர்த்தி முற்பகல் 8.06 மணிவரை
புனர்பூசம் பின்னிரவு 12.40 மணிவரை
இராகுகாலம் 10.22-11.52 மணிவரை
சுபநேரம் 5.52-7.22 மணிவரை

வளவன்

**மீனம்:** ரோக பயமுண்டு, சுபகாரிய செலவுகள் அதிகரிக்கும் நாள் மனச்சஞ்சலங்கள் கூடும் நாள் செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு

**மேடம்:** மனோ தைரியம் கூடும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், மதிப்பும் மரியாதையும் உயர்வடையும் நாள், இஷ்ட சித்திபுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**இடபம்:** போசன சுகக்குறைவான நாள், செலவுகள் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மிதுனம்:** வெகுமானங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சயன சுகமுண்டு, பெரியோரின் ஆதரவு கிடைக்கும் நாள், சிந்தனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**கும்பம்:** அஜீரணம் சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், பணக்குறைவுகள் உண்டு, சஞ்சலங்களை தவிர்ப்பது நல்லது, தாழ்ந்த சுபாவமுண்டு முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.

**கடகம்:** சேமிப்பை விலக்குவது நல்லது, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**மகரம்:** ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், பகைவர்கள் விலகுவர், தேகநலனில் புத்துணர்வு ஏற்படும் நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**சிம்மம்:** புதிய பொருட் சேர்க்கையுண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொதுவாழ்வில் புகழ்கூடும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு:** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், மனோ தைரியமுண்டு,வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.


**விருச்சிகம்:** ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு, உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், வேலைச்சுமை கூடும்.

**துலாம்:** சரீரப் பிரயாசை காட்டுவீர்கள், அஜீரணம் சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், பயணங்களால் பலனுண்டு, எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம், ரோக பயமுண்டு.

**கன்னி:** பெரியோரால் மதிக்கப்படுவீர்கள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், வருமானம் உழைக்கும் முயற்சியில் புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை



பிறப்பு : 1935.05.11
இறப்பு : 2015.05.20

"தியாகச் செம்மல்"

## அமரர் கந்தையா பரமலிங்கம்

யாழ்ப்பாணம் தென்மராட்சி வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவிலடி மீசாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு 13,கோட்டாஞ் சேனை, இல.41 சீ, 2/1, பாபர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்டவரும் பல வேறுபட்ட சமூக நிறுவனங்களின் ஆர்வலரும் விவசாயத்தில் மிகுந்த ஈடுபாடுடையவருமான அமரர் கந்தையா பரமலிங்கம் அவர்கள் 20.05.2015 அன்று புதன்கிழமை இறைபதமடைந்தார்.

"தியாகச் செம்மல்" அமரர் கந்தையா பரமலிங்கம் அவர்கள் நலிவுற்ற குழந்தைகளின் வாழ்வியல் முன்னேற்றத்தை நோக்காகக் கொண்டு உணவூட்டி கல்விவளர்த்து எதிர்காலத்தில் சமூகத்தில் நற் பிரஜைகளாக மிளிரவேண்டும் என்னும் ஆழ்மன விருப்பை நோக்காக கொண்டு பூநகரிப் பகுதியில் அமைந்துள்ள தனது சொந்த நிலவளத்தில் நீர்ப்பாசனவசதியுடன் கூடிய 198 1/2 ஏக்கர் விவசாய நிலத்தினை மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லத்திற்கு நன்கொடையாக தந்த கொடைவள்ளல் மட்டுமன்றி குழந்தைகளைச் சந்திக்கும் நேரங்களில் அறிவுரைகள் பல கூறி அவர்களை நல்வழிப் படுத்தும் உத்தமனுமாவார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்
மண்ணுலகை விட்டுப் பிரிந்தாலும்
காலங்கள் பல கடந்து சென்றாலும்
கொண்ட கோலங்கள் நிலைமாறிப்போனாலும்
காலத்தால் அழியாதது உங்கள் ஞாபகங்கள்
பிறப்போடு இறப்பு இணைந்தது
எனினும் உங்கள் இழப்பைநெஞ்சம் ஏற்பதில்லை


விதியின் கணக்கை மாற்றிட எம்மால் முடியாதே அதனால் இவர்தம் பிரிவால்வாடும் குடும்பத்தினர் உறவினருக்கும் எங்கள் இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரது ஆத்ம சாந்திக்காக இறை வனை வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி !!!

**தலைவர் தி.இராசநாயகம்**
**பணியாளர்கள், பணிப்பாளர்கள், இல்லக்குழந்தைகள்**
**மகாதேவா ஆச்சிரமசிறுவர் இல்லம்.**

(C-1033)

---



## மட்டக்களப்பு - இருதயபுரம் மேற்கு

# ஸ்ரீ பால முருகன் தேவஸ்தானம்

புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ பிரதிஷ்டா

# மஹா கும்பாபிஷேகம்

| கர்மாரம்பம் | மஹா யாகாரம்பம் | திருவிளக்குப்பூஜை | பக்தர்கள் எண்ணெய்க்காப்பு |
|---|---|---|---|
| மங்கள மன்மத வருடம் வைகாசி 21 | மங்கள மன்மத வருடம் வைகாசி 22 | மங்கள மன்மத வருடம் வைகாசி 22 | மங்கள மன்மத வருடம் வைகாசி 23 |
| 04.06.2015 வியாழன் | 05.06.2015 வெள்ளி | 05.06.2015 வெள்ளி | 06.06.2015 சனிக்கிழமை |
| பகல் 12.00 மணிக்கு | மாலை 6.00 மணிக்கு | மாலை 7.00 மணிக்கு | காலை 9.00 - 4.00மணிவரை |

மங்கள மன்மத வருடம் வைகாசி 24 07.06.2015 ஞாயிற்றுக்கிழமை
காலை 10.00 மணிக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

இலங்கையின் முதலாவது இந்துமத குருபீடாதிபதி சிவாகமஞானி
அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்

சங்கானை ஸ்ரீ முருகமூர்த்தி தேவஸ்தான ஆதீன குருமுதல்வர் சிவாகமஞானி
சிவப்பிரம்மஸ்ரீ. சிவா. நித்தியானந்த சிவாச்சாரியார்

ஆகியோரின் ஆசியுடன்

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சபரிமலைக் குருமுதல்வர்
பிரதிஷ்டா சிரோமணி - சிவாகம கலாநிதி ஆன்மீக அருள்ஜோதி
**ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சார்யார்**
அவர்கள் தலைமையில் கும்பாபிஷேகம் நடைபெறும்.



ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ இ. திருக்கேதீஸ்வரசாமி (களவாஞ்சிக்குடி)

மேற்படி ஆலய கும்பாபிஷேகத்திற்கு நன்கொடை வழங்க விரும்புவோர் கீழ்க்காணும் வங்கிக்கணக்கு இலக்கத்துக்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.
ஸ்ரீ பாலமுருகன் ஆலயம் - A/C No 76744178, இலங்கை வங்கி, நகர கிளை, மட்டக்களப்பு.

**அனைவரும் வருக !**

ஸ்ரீ பால முருகன் ஆலய பரிபாலன சபை
இருதயபுரம் மேற்கு, மட்டக்களப்பு

**பாலமுருகன் அருள் பெறுக!!**

(539)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புதுக்குடியிருப்பு பிரதேச சபை, புதுக்குடியிருப்பு

## ஒட்டுசுட்டான் சந்தைக் கட்டடத்தின் கடைகளுக்கான வைப்புப்பண கேள்வி அறிவித்தல்

புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் ஒட்டுசுட்டான், ஒலுமடு உப அலுவலக எல்லைக்குட்பட்ட நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட மக்களிடமிருந்து 2015 ஜூன் முதலாம் திகதி தொடக்கம் முதலாம் வருடம் (31.12.2015 வரை) மாதம் ரூபா 1,750.00 (ரூபா ஓராயிரத்து எழுநூற்று ஐம்பது மட்டும்.) வீதம் கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு ஏதுவாக கடைகளுக்கான திறப்புப்பண கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 25.05.2015 - 08.06.2015 வரை

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:- 09.06.2015 முற்பகல் 10.00 மணி வரை

கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :- 09.06.2015 பிற்பகல் 02.30 மணி

கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை செயலாளர், புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் 09.06.2015 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென புதுக்குடியிருப்பு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். மறு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு 09.06.2015 முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

1. கேள்விப்பத்திரங்களைப்பெற விரும்புபவர்கள் புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் ஒட்டுசுட்டான், ஒலுமடு உப அலுவலக எல்லைக்குள் நிரந்தரமாக வதியும் இடத்தின் வதிவிடச் சான்றிதழ் மற்றும் கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைப்பிரதியுடன் நேரடியாக புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

2. கேள்விப்பத்திரங்கள் கீழ் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணங்கள், மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமும் செலுத்தி மேற் குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

3. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநரர்க்கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்பட மாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்படமாட்டாது.

4. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

5. கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

6. கேள்வி நிபந்தனைகள் , அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்வி கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ செயலாளருக்கு பூரண அதிகாரமுண்டு.

7. வாடகை வருடா வருடம் சபையால் நிர்ணயிக்கப்படும்கால ஒழுங்கில் வாடகையின் அடிப்படையில் 10% அதிகரிக்கப்படும்.

8. கடையை வாடகைக்கு எடுப்பவராலேயே நடத்தப்பட வேண்டும். பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடத்த அனுமதிக்கப்படமாட்டார். இருந்தும் அவரது வாரிசு நடத்த அனுமதிக்கப்படுவார்.(உதாரணம் :- மகன், மகள்)

9. சபையின் அனுமதியின்றி எதுவித புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ள முடியாது.

10. நிராகரிக்கப்பட்ட கேள்விதாரரின் பிணைப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கப்படும்.

11. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் அல்லது சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் முழுத்தொகையையும் முழுமையாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

12. வாடகைப்பணம் மாதாந்தம் இறுதி வேலை நாளுக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும். தவறின் 10% தண்டமும் சேர்த்து அறவிடப்படும் என்பதுடன் வாடகைப்பணம் இரு மாதங்கள் தொடர்ந்து கட்டத்தவறின் முன்னறிவித்தலின்றி வாடகை ஒப்பந்தம் தானாகவே இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்படும்.

13. சபையின் செயலாளரின் இந்த ஒப்பந்தம் தொடர்பாக எவ்வித முடிவையும் ஏற்க வேண்டும். இது தொடர்பாகச் சபைக்கெதிராகவோ/ செயலாளருக்கு எதிராகவோ நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க முடியாது.

14. கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (VAT.NBT) நீங்கலாக | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக் கொள்ளககூடியஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1 | கடை இலக்கம் 01 | 1000.00 | 11,000.00 | 105,000.00 |
| 2 | கடை இலக்கம் 02 | 1000.00 | 11,000.00 | 105,000.00 |
| 3 | கடை இலக்கம் 03 | 1000.00 | 11,000.00 | 105,000.00 |
| 4 | கடை இலக்கம் 04 | 1000.00 | 11,000.00 | 105,000.00 |
| 5 | கடை இலக்கம் 05 | 1000.00 | 11,000.00 | 105,000.00 |
| 6 | கடை இலக்கம் 06 | 1000.00 | 11,000.00 | 105,000.00 |
| 7 | கடை இலக்கம் 07 | 1000.00 | 11,000.00 | 105,000.00 |
| 8 | கடை இலக்கம் 08 | 1000.00 | 11,000.00 | 105,000.00 |
| 9 | கடை இலக்கம் 09 | 1000.00 | 11,000.00 | 105,000.00 |
| 10 | கடை இலக்கம் 10 | 1000.00 | 11,000.00 | 105,000.00 |
| 11 | கடை இலக்கம் 11 | 1000.00 | 11,000.00 | 105,000.00 |
| 12 | கடை இலக்கம் 12 | 1000.00 | 11,000.00 | 105,000.00 |

புதுக்குடியிருப்பு பிரதேசசபை,
புதுக்குடியிருப்பு.

திரு.கு.மிதிலைநாதன்,
செயலாளர்,
பிரதேசசபை,
புதுக்குடியிருப்பு

# எதிர்வரும் பொதுத் தேர்தலில் நிச்சயமாக போட்டியிடுவேன்

## திஸ்ஸ அத்தநாயக்க சபதம்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் நிச்சயமாக களமிறங்குவேன் என ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அஸ்கிரிய பீடத்தில் இடம்பெற்ற சமய வழிபாடுகளில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொது தேர்தலுக்காக நான் கண்டி மாவட்டத்தை தெரிவு செய்யவுள்ளேன். எப்படியென்றாலும் நான் எந்த கட்சியில் போட்டியிடுவேன் என்பதனை மாத்திரம் தற்போது கூறமாட்டேன்.

எந்தக் கட்சி சார்பில் நான் போட்டியிட்டாலும் கண்டி மாவட்ட மக்களின் ஆதரவை என்னால் முழுமையாக பெற்றுக் கொள்ள முடியும் என்பது எனக்குத் தெரியும்.

அரசியல் தலைவராக எதிர்வரும் பொதுத் தேர்தலில் நான் போட்டியிடுவது உறுதி. ஐக்கிய தேசிய கட்சியில் போட்டியிடுவது குறித்து தெளிவான தீர்மானம் இல்லை.

அரசியல் ரீதியில் ஐக்கிய தேசிய கட்சி என்னை குறித்து எவ்வாறானதொரு நிலைப்பாட்டை கொண்டிருக்கும் என்பதை தெரிந்து கொள்ள நான் எதிர்பார்த்துக் கொண்டுள்ளேன்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைவர்கள் பலர் தொடர்ந்தும் என்னுடன் கதைத்துக்கொண்டு தான் உள்ளார்கள்.இதேவேளை சாதாரணமானவர்கள், எங்கள் தொழிற்சங்க உறுப்பினர்கள், எங்கள் அதிகாரிகள் தங்கள் கருத்துக்களை தொடர்ந்து எங்களுடன் பகிர்ந்து கொள்கின்றனர். எப்படியிருப்பினும் இந்நாட்களில் காணப்படுகின்ற அரசியல் சூழ்நிலையைக் கொண்டே அரசியல் தீர்மானத்தை மேற்கொள்வேன். ஐக்கிய தேசிய கட்சியுடன் எவ்வித வைராக்கியங்களோ கோபங்களோ எனக்கு கிடையாது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (3-5)


## விற்பனையாகின்றது

கலாநிதி பண்டிதர் செ. திருநாவுக்கரசு அவர்களின் சொற்குற்றம் பொருட்குற்றம் அற்ற 2015 புதிய பாடத்திட்டத்திற்கு அமைவான

**சைவநெறி தரம் 10**

சகல புத்தகக் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம.



சீரடி பாபா விநியோகஸ்தர்கள்
077 390 1877

இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1988 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 1ம்<br>கி.பா:63 செவ் 1இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L/ அரச தொழில்<br>தொ.இ: B/4526 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்:புனர்பூசம் 1ம்<br>கி.பா: 15 1/4 சூரி செவ் 3இல்<br>உயரம்: 5' 2"<br>தகைமை/தொழில் : IAB,CIMA தனியார் தொழில்<br>தொ.இ: G/4555 |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 59 செவ் 4 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/4528 | பிறப்பு: 1970 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 3ம்<br>கி.பா: 107 சூரி செவ் 7 இல்<br>தகைமை/தொழில்: பட்டதாரி ஆசிரியர்<br>தொ.இ: G/4561 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 15 செவ் 5 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSC, MSC/ சிவில் பொறியியலாளர்<br>தொ.இ: B/4530 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 4ம்<br>கி.பா: 79 செவ் 7இல்<br>உயரம்:5'<br>தகைமை/தொழில்: தனியார் தொழில்<br>தொ.இ: G/4562 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம் மகம்<br>கி.பா: 13 செவ் 4 இல்<br>உயரம்: 178cm<br>தகைமை/தொழில்: O/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/4531 | பிறப்பு:1989 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 3ம்<br>கி.பா: 28 செவ் இல்<br>உயரம்:5' 3"<br>தகைமை/தொழில்: B.B.M தனியார்<br>தொ.இ: G/4564 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail: kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டங்கள் விசாரணைகளுக்கு இடையூறாக அமைந்துவிடக்கூடாது

## தண்டனையை விரைவுபடுத்தவும் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

**புங்குடுதீவு மாணவியின் படுகொலையில் ஈடுபட்ட பாதகர்களை கடவுள்கூட மன்னிக்கமாட்டார். இந்த கொடூரமான ஈனச் செயலில் ஈடுபட்டவர்களுடைய தண்டனையை விரைவுபடுத்தக்கோரி நடத்தப்படும் போராட்டங்கள் விசாரணைகளை காலதாமதப்படுத்தவும் விசாரணைகளுக்கு இடையூறு விளைவிப்பதாகவும் அமையாது அமைதியாகவும் ஒற்றுமைப்பட்டதாகவும் அமைவதை மக்கள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.**



இவ்வாறு சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது. ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளாவது.

மன அமைதியிழந்து நிற்கும் இவ்வேளையில் அமைதியை குலைத்து அசாதாரண சூழலை ஏற்படுத்தி தமக்குச் சாதகமாக பயன்படுத்த முற்படுபவர்களும் உள்ள வேளையில் மக்கள் தமது போராட்டங்களை சாத்வீகமான முறையில் காத்திரமாக முன்னெடுத்து போராடுதல் அவசியமாகும். கல்வியாலும் ஒழுக்கத்தினாலும் தலைநிமிர்ந்து நிற்கும் எமது மண் கலாசாரத்தினை சிதைவடையச் செய்யும் வகையில் ஈடுபட்ட கொடூர வாதிகளுக்குரிய தண்டனையை சட்டம் விரைவுபடுத்துவதன் மூலம் மக்களை மனஅமைதியடையச் செய்யவும் ஆறுதல்படுத்தவும் முடியும்.

எனவே சட்டம் சிறிதேனும் காலதாமதம் இல்லாமல் விரைவாக தண்டனையை அறிவித்து தர்மத்தினை நிலைநாட்டி அமரத்துவமான மாணவியின் ஆத்மா சாந்தியடையச் செய்வதோடு பெண்களுக்கான பாதுகாப்பினையும் உறுதிப்படுத்தவும் நீதி தேவதையை வேண்டுகின்றோம்.

ஆலயங்களில் மக்கள் தொடர் பிரார்த்தனைகளிலும் ஈடுபடுமாறு வேண்டுகின்றோம் என்று அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-5)




# வடமராட்சியில் 21 பேர் கைது

வடமராட்சிப்பகுதியில்ரயர்கொளுத்தி பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்ததாகத் தெரிவித்து 21 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணிக்கு பின்னர் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் 18 பேர் பருத்தித்துறையிலும் 3 பேர் நெல்லியடியிலும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது குறித்து நெல்லிடிய மற்றும் பருத்தித்துறைப் பொலிஸ் பொறுப்பதிகாரிகள் தெரிவிக்கையில், பிற்பகல் ஒரு மணிவரை அமைதியான முறையில் போராட்டம் நடத்துவதற்கு அனுமதியளித்தோம்.

எனினும் அதன்பின்னர் ரயர்களை வீதியில் போட்டு எரித்து மக்களுக்கு இடையூறு விளைவித்துள்ளனர் என்று தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நேற்றைய தினம் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்ட 18 பேரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதுடன் நெல்லியடியில் கைதானவர்கள் நேற்று முன்தினமே பொலிஸாரினால் எச்சரிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (3-60)

# மாணவியின் படுகொலையினை கண்டித்து சுழிபுரத்தில் பேரணி



(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவில் மாணவி ஒருவர் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட நிகழ்வுக்கு எதிராகத் தெரிவித்தும் கொலைக் குற்றத்தோடு சம்பந்தப்பட்ட அனைவரையும் மரண தண்டனைக்கு உட்படுத்துமாறு கோரி இளைஞர் பேரணி இடம்பெற்றது.

இப் பேரணியானது சுழிபுரம் சந்தியில் ஆரம்பமாகி வழுக்கம்பறை சித்தன்கேணி சந்தி ஊடாக சங்கானை பிரதேச செயலகத்தினை அடைந்தது.

முடிவில் குறித்த பேரணிக்கு தலைமை ஏற்ற எஸ்.ஆனந்தராஜா உதவிப் பிரதேச செயலரிடம் கொலைக் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்க வேண்டும் என்றும் பெண்களதும் சிறுவர்களதும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி மகஜர் ஒன்றை வழங்கினார்.

இப்பேரணியின் போது பெண்களுக்கு பாதுகாப்பு வேண்டும், கொலைக் குற்றவாளிகள் மரண தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டும், தழிழ்மாறன் தேசத் துரோகி போன்ற கோசங்களை எழுப்பினர். நேற்றைய பேரணியில் சுமார் 500 இற்கு மேற்பட்ட இளைஞர்கள் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (3-5)

## சடலத்தை பொறுப்பேற்கவும்

யாழ். போதனா வைத்தியசாலையில் யாரும் உரிமை கோராத நிலையில் உயிரிழந்த வயோதிபர் ஒருவரின் சடலம் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

ஆவரங்கால் புத்தூரைச்சேர்ந்த ஐ.கனகலிங்கம் (வயது-61) என்பவரே கடந்த 10 ஆம் திகதி சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் உயிரிழந்துள்ளார்.

உரித்துடையோர் சடலத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு வைத்திய சாலைப்பணிப்பாளர்கேட்டுள்ளார். (3)

# மஹோற்சவம்

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயிலில்நாற்பதாவது ஆண்டு வைகாசி மஹோற்சவ பெருவிழா - 2015 இன்று 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப.10மணியளவில்கொடியேற்றம் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் 2ஆம்திகதிசெவ்வாய்க்கிழமைதீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளது.(3-7)

• • • • • • • • • • • • • • •

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10தினங்கள் நடைபெறவுள்ளது.

இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் 28ஆம் திகதி இரவு 7மணிக்கு மஞ்சத்திருவிழாவும் 31ஆம் திகதி பிற்பகல் 2மணிக்கு வேட்டைத் திருவிழாவும் இரவு 7மணிக்கு சப்பறத் திருவிழாவும் ஜூன் மாதம் முதலாம் திகதி காலை 9மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் முற்பகல் 10மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (3-7)

• • • • • • • • • • • • • • •

சுன்னாகம் மயிலணி திருக்குடவாயில் விசாலாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ விஸ்வநாத சுவாமி கோயிலின் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெற வுள்ளது.

எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளன.(3-7)

# வைகாசிப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் வருடாந்த வைகாசிப் பெருவிழா-2015 இன்று 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10மணியளவில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், வாழ்த்துரையை உருத்திரபுரம் மகாதேவா ஆச்சிரமம் சிவத்திரு கணேசானந்தா சுவாமிகள், சிறப்புரையை கிளிநொச்சி சின்மயாமிஷன் ஸ்ரீமத் சுவேந்திரா சைதன்யா சுவாமிகள் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

இதில் வழமைபோல் ஸ்ரீ செல்வச் சந்நிதிமுருகன் ஆலயத்தில்விசேடபூஜைகளும் இடம்பெறவுள்ளன. (3-5)

# புங்குடுதீவு மாணவியின் படுகொலையானது ஆன்மாவை உறையவைத்த துன்பியல் நிகழ்வு

## அரச மருத்துவர் சங்கம் கண்டனம்

புங்குடுதீவு மாணவி படுகொலைச் சம்பவமானது அண்மையில் நிகழ்ந்த மிகவும் துன்பகரமானதும் அருவருக்கத்தக்கதுமான ஒரு செயலாகும். இது மனிதநேயம் உள்ளவர்களின் ஆன்மாவை உறைய வைத்த ஒரு துன்பியல் நிகழ்வாகும்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்டவர்களை விரைவாக சட்டத்தின் முன் நிறுத்தி தகுந்த தண்டனை பெற்றுத்தருமாறு [illegible] பட்ட தரப்பினரை [illegible] துடன் இவ்வகையான சம்பவமொன்று மீண்டும் இடம்பெறாமல் தடுக்க ஆவன செய்யுமாறு வலியுறுத்துகிறோம்.

இளைய தலைமுறையினரின் ஒரு சிலருடைய இந்த மனிதாபிமானதுக்கு புறம்பான செயலானது அவமானத்திற்கு உரியதாக இருந்தாலும் பெரும்பாலான இளைய சமுதாயம் விழிப்புடன் இருப்பது [illegible] மதுபாவனை, சமுதாயத்திற்கு எதிரான வன்முறைகளில் ஈடுபடுவர்களுக்கு எதிராக இதே விவேகத்துடன் இளந்தலைமுறையினர் செயற்பட வேண்டும்.

மருத்துவர்களாகிய நாம் இச்செயலை வன்மையாக கண்டிப்பதோடு இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களின் நடவடிக்கைகளை உன்னிப்பாக அவதானிப்போம் என்பதையும் அறியத்தருகிறோம் என அந்தக் கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறையிலிருந்தேன் என்னை பார்க்க வரவில்லை

## மகிந்த மீது கோபம் கொள்கிறார் நகரமுதல்வர்


கட்சியின் நலனுக்காக தான் விளக்கமறியலில் இருந்த போது தனது நலம் விசாரிப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வராமையினால் அம்பாந்தோட்டை நகர முதல்வர் எரான் ரவீந்திர பெர்னாண்டோ அதிருப்தி அடைந்துள்ளார்.

நகர முதல்வரின் நலம் விசாரிக்க சென்ற நண்பர்களிடம் மகிந்த ராஜபக்ஷ மீதான எதிர்ப்பை வெளியிட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

விளக்கமறியலில் உள்ள திருடர்களின் நலம் விசாரிப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பலமுறை சென்ற போதிலும், கட்சிக்காக விளக்கமறியலில் இருந்த என்னை பார்ப்பதற்கு ஒரு முறையேனும் வரவில்லை என தனது அதிருப்தியை பலரிடம் அவர் வெளிப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவரை பலவந்தமாக கடத்திச் சென்ற சம்பவம் தொடர்பில் இவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

சம்பவம் தொடர்பிலான வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் 1 மில்லியன் ரூபாய் ரொக்க பிணையிலும், இரண்டு சரீர பிணையிலும் இவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (3-5)



# சிங்களக் கொடியே நாட்டின் முதலாவது சட்டபூர்வமான கொடி

## ஸ்வர்ன அமைப்பின் தலைவர் தெரிவிப்பு

**(கொழும்பு) இலங்கையின் தேசியக்கொடி பாராளுமன்றத்தினால் உருவாக்கப்பட்டது. அதேநேரம் சிங்கள கொடி இராஜாக்களின் காலம் முதல் சுதந்திரம் கிடைக்கப் பெற்ற பின்னரான முன்னாள்பிரதமர் டி.எஸ சேனாநாயக்கவின் காலம் வரை பயன்படுத்தப்பட்டு வருவதாக ஸ்வர்ன ஹங்ஸ அமைப்பு தெரிவித்துள்ளது.**

அந்த அமைப்பின் தலைவர் கால்லகே புண்ணியவர்தன இது தொடர்பில் தெரிவித்துள்ளதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிற்கு முன்பாக கடந்த ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.



இதன் போது தமிழ், முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் நீக்கப்பட்ட சிங்கள கொடி பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலுரைக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிங்கள கொடி நாட்டின் முதலாவது சட்டபூர்வமான கொடியாகும். இந்தக்கொடி தேவநம்பியதிஸ்ஸ மன்னன் காலத்திலிருந்து கண்டியின் கடைசி மன்னரான ஸ்ரீ விக்ரம இராஜசிங்க வரை பயன்பாட்டில் இருந்தது.

ஆர்ப்பாட்டமொன்றின் போது இலங்கை தேசிய கொடிக்கு மாற்றீடாக சிங்கள கொடி காணப்பட்டது. எப்படியான தேசிய கொடியை பயன்படுத்தலாம் என அரசாங்கம் சட்டமொன்றை கொண்டுவரும்.

அத்துடன் அரசியலமைப்பில் தேசிய கொடியின் நீளம் மற்றும் அகலம் உட்பட என்னென்ன விடயங்கள் காணப்பட வேண்டும் என்பது தொடர்பில் விரிவுபடுத்தியிருக்கலாம என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டை பிளவுபடுத்துபவர்களே சிங்கள கொடிக்கு எதிர்ப்பை வெளியிடுவார்கள்.

அஸ்கிரிய பீடத்தின் முன்னாள் அருநாயக்கே வாரியபொல ஸ்ரீ சுமங்கல தேரரினால் சிங்கள கொடி பயனபடுத்தப்பட்டது.

சிங்கள கொடி சமூகத்தில் விட்டமையின் காரணமாக இது தேசியக கொடிக்கான விலகலாக கருதிவிட முடியாது என ஸ்வர்ன ஹங்ஸ அமைப்பின் தலைவர் கால்லகே புண்ணியவர்தன மேலும் தெரிவித்துள்ளார். (3-5)

# புங்குடுதீவில் மாணவி கொலையைக் கண்டித்து கிழக்கு மாகாணத்திலும் போராட்டம் தொடர்கிறது



யாழ்ப்பாணம் -புங்குடுதீவு பாடசாலை மாணவி சிவலோகநாதன் வித்யா படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பாரிய ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.

மட்டக்களப்பு-வந்தாறு மூலை வளாகத்திற்கு முன்பாக நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் சகல பீடங்களையும் சேர்ந்த மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக ஊழியர்களும் கலந்துகொண்டனர்.



வித்யாவின் படுகொலையைக் கண்டிக்கும் பல்வேறு வாசகங்களைக் கொண்ட சுலோகங்களையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தி நின்று கோஷமெழுப்பினர்.

கொலையாளிகளுக்கு உயர்ந்தபட்ச தண்டனை வழங்கப்பட வேணடும், கொலையாளிகள் சார்பில் சட்டத்தரணிகள் எவரும் ஆஜராகக் கூடாது என்பன இவர்களது பிரதான கோரிக்கைகளாகும். (இ-5)

# மகிந்தவை கைது செய்க

## அசாத் சாலி விடாப்பிடி

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை உடனடியாக கைது செய்ய வேண்டும் என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்துள்ளார். கொழும் பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய தியாளர் சந்திப்பில் அசாத் சாலி இவ்வாறு கருத்து தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக தொடர்ந்து இனவாதத்தை குறித்து பேசி நாட்டு மக்களை குழப்பும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை உடனடியாக கைது செய்ய வேண்டும். முன்னாள் ஜனாதிபதி நாட்டில் பல பிரதேசங்களில் புலி கொடிகள் ஏறறப்பட்டுள்ளதாக தெரிவித் துள் ளார்.

அப்படி ஏற்றப்பட்டிருந்தால் பாதுகாபபு பிரிவினர் உடனடியாக அதனை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லை என்றால் இது குறிதது மகிந்த ராஜபக்ஷ அறிக்கை ஒன்று வழங்க வேண்டும்.

அண்மையில் எனது அரசியல் அலுவலகம் கண்டியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் திறந்து வைக்கப்பட்டது. இதனையடுத்து அலுவலகத்திற்கு முன்னால் கூடிய சில விசமிகள் என்னை கண்டிக்குள் வரவேண்டாம என கோசம் எழுப்பியிருந்தனர்.

இது ஒரு திட்டமிட்ட சதி செயலாகும். சில பிரதேச அரசியல்வாதிகள் காசு கொடுத்து இதனை செய்துள்ளனர். இது தொடர்பில் நான் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளேன்.

அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் எனக்கு எதிராக சிங்கள மக்கள் ஆர்ப்பாட்டம்செய்தார்கள்என்ற பொய்யான பிரசாரமும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறான கருத்துக்கள முற்றிலும்பொய்யானது. இதேவேளை தற்போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சுயநினைவின்றி அலைந்து திரிகின்றார். மகிந்த ராஜபக்ஷ அதிகாரத்தில் இருந்தபோது கட்சிகளை பிளவடைய செய்தார். தற்போது இராணுவத்தினையும் இரண்டாகப் பிளவடைய செய்யப் பார்க்கிறார்.

மேலும் இனவாத கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்பி மக்களை குழப்பி விட முற்படுகின்றார். தற்போதைய அரசாங்கத்தின் கீழ் மக்கள் ஒற்றுமையாக வாழ்கின்றார்கள். அதனை இல்லாமல் செய்வதற்காகவே அவர் முயற்சிக்கின்றார். எனவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை உடனடியாக கைது செய்து சட்டத்தின் முன்னிறுத்த வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபாலவிடமும் பாதுகாப்பு பிரிவினரிடமும் கோரிக்கை விடுகின்றோம் என அசாத் சாலி மேலும் தெரிவித்துள்ளார். (3-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாவின் கொலையுடன்

# தொடர்புடையவர்களுக்கு அதியுச்ச தண்டனை வழங்கப்படவேண்டும்




(பூநகரி)

புங்குடுதீவு மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவி கொடூரமாக கூட்டுவன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் வடக்கில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் கிளி/பூநகரி மத்திய கல்லூரி, பூநகரி வாடியடி வர்த்தக சங்கத்தினர் இணைந்து வித்தியாவின் படுகொலையுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு உச்சபட்ச தண்டனை வழங்கவேண்டும் எனக்கோரியும் இவ்வாறான குற்ற செயல்கள் இனிவரும் காலங்களில் நடைபெறாமல் இருப்பதற்கு மாணவ சமூகத்தின் பாதுகாப்பையும் உறுதிப்படுமாறும் வலியுறுத்தி நேற்று முன்தினம் காலை கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் பூநகரி பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரியிடம் மாணவர்கள் இணைந்து மகஜர் ஒன்றை கையளித்தனர். (2)



நீதிச் சமூகமே

# மாணவியின் கொலை சந்தேக நபர்களுக்கு விரைவில் உச்ச தண்டனை வழங்குங்கள்



(அக்கராயன்)

புங்குடுதீவு மாணவி ஒருவர் கூட்டு வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து தொடர்ச்சியாக பல பாடசாலைகளில் நீதிகோரி போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் மு/அக்கராயன் கோட்டை கட்டிய குளம் அ.த.க.பாடசாலை மாணவர்கள், நேற்று முன்தினம் முற் பகல் 11 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை கண்டனப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது மாணவர்கள், "வித்தியாவின் கொலையாளிக்கு விரைவில் கொடு தண்டனை, இல்லை, இல்லை பாதுகாப்பு இந்நாட்டில் பெண்ணுக்கு, கயவஞ்சகர்களே! பாடசாலை மாணவர்கள் உங்களுக்கு இரையா! நீதிச் சமூகமே எம்மைக் காப்பாற்று" ஆகிய வாசகங்கள் அடங்கிய பதாகைகளை தாங்கிப் பிடித்தவாறு கோசங்களை எழுப்பியவாறு ஈடுபட்டிருந்தனர். (2)



வன்னி வலம்

## 'கைதானவர்களுக்கு விடுதலை கிடைக்காத வகையில் கடுமையான தண்டனை கொடு'

மு/ஒட்டுசுட்டான் மாணவர்கள் பெரும் ஆர்ப்பாட்டம்



(முல்லைத்தீவு)

புங்குடுதீவில் கூட்டு வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட மாணவியான சிவலோகநாதன் வித்தியாவிற்கு நீதிகோரியும் படு கொலைக்கு காரணமானவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்க வேண்டும் என வலியுறுத்தியும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு விடுதலை கிடைக்காத வகையில் கடுமையான தண்டனை வழங்க வேண்டும் என முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மாணவர்கள் நேற்று முன்தினம் முற்பகல் 11மணியளவில் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர், பெற்றோர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது முத்தென முளைத்தவித்தாம்வித்தியாவை வித்தியாலயம் செல்லும் வழியில் சிதைத்து விட்டாரே; சிறுவர் உரிமை எங்கே; எங்களை தீண்டாதே; நாங்கள் சிங்கங்கள்; விளையும் பயிரை முளையிலே சிதைக்காதே; மாணவர்களுக்கு எதிரான குற்றச்செயல்களை உடன் நிறுத்து ஆகிய வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளுடன் அவர்கள் தம்முடன் ஏந்திச்சென்றனர். (2)

# 'பயமின்றி பாடசாலை செல்ல வழி இல்லையா?'

(முல்லைத்தீவு)

புங்குடுதீவில் கூட்டுவன்புணர்வின் பின் படுகொலை செய்யப்பட்ட மாணவியான வித்தியாவின் கொலையைக் கண்டித்தும் குற்றவாளிகளுக்கு தூக்குத் தண்டனை வழங்க வலியுறுத்தியும் நீதி வேண்டும் என்ற கோஷங்களை எழுப்பியும் நேற்று முன்தினம் மு/செம்மலை மகா வித்தியாலய மாணவர்கள் கண்டன ஆர்ப்பாட்ட பேரணியொன்றை நடத்தினர்.



நேற்று முன்தினம் முற்பகல் 11மணியளவில் பாடசாலைக்கு அருகிலுள்ள வீதியில் இறங்கி கண்டன ஆர்ப்பாட்ட பேரணியில் ஈடுபட்டதோடு;

"தூக்கிலிடு காமுகனை தூக்கிலிடு; சிறுவர் உரிமை பேச்சளவில் மட்டுமா?; சாலையில் சிறந்த சாலை பாடசாலை; அதைத் தீண்டியவர்களை அனுப்பு சிறைச்சாலை; பயமின்றி பாடசாலை செல்ல வழியில்லையா?" ஆகிய வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி கறுப்புப் பட்டியணிந்தும் பேரணியில் ஈடுபட்டிருந்தனர்.

மாணவர்களின் எதிர்ப்பு நடவடிக்கையினால் போக்குவரத்து சிறிது நேரம் தடைப்பட்டிருந்தது. தகவலறிந்த பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து நிலைமையை மாணவர்கள் மூலமாக கேட்டறிந்து இச்சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகள் சட்டத்தின் முன் தண்டிக்கப்படுவார்கள்; சட்டம் சரியான தண்டனையை அவர்களுக்கு வழங்கும் என்று தெரிவித்திருந்தனர்.


அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணியளவில் தமது ஆர்ப்பாட்டத்தை நிறைவு செய்து தமது வழமையான கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர். (2)



# வவு.தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

வவுனியா நெளுக்குளம் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களின் ஏற்பாட்டில் மாணவியின் படுகொலைக்கு நீதிகோரி நேற்று முன்தினம் மதியம் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.






வவுனியா-மன்னார் பிரதான வீதியில் அமைந்துள்ள தொழில்நுட்ப கல்லூரியின் முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் விரிவுரையாளாகள, அதிபர், மாணவர்களென ஒன்று திரண்டு கலந்து கொண்டனா.

இதன போது, குற்றவாளிகளை மக்களிடம் ஒப்படைந்து மக்களால் தண்டனை வழங்கப்பட வேண்டும், குற்றவாளிகளை பாதுகாக்காதே, பெண்களின் சுதந்திரத்தை பாதுகாப்பது யார்?, மாணவிகளின் பாதுகாப்புக்கு யார்பொறுப்பு, குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும, சட்டத்தரணிகளே குற்றவாளிகளுக்காக ஆஜராகாதே, வி.ரி.தமிழ்மாறனே குற்றவாளியை காப்பாற்றாதே உள்ளிட்ட பல பதாகைகளை ஏந்தி கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (2-250)

# 'நீதி வேண்டும் எம் சகோதரிக்கு'



(குருமன்காடு)

புங்குடுதீவு மாணவியின் படுகொலைக்கு நீதிகோரி வவுனியா தபாலக உத்தியோகத்தர்கள் நேற்றுக்காலை கண்டன ஆர்ப்பாட்டத்தைநடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டம் வவுனியா தபாலகம் முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது "பாலியல் படுகொலைக்கு மக்கள் முன் மரண தண்டனை வழங்கு, நீதிவேண்டும்எம்சகோதரிக்கு" ஆகிய வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை தாங்கியவாறு கண்டன ஆர்ப்பாட்டத்தில் அவர்கள் ஈடுபட்டிருந்தனர். (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவியின் கொலையைக்கண்டித்து

# வவுனியா நகரப்பகுதியின் அனைத்து செயற்பாடுகளும் நேற்று ஸ்தம்பிதம்

(குருமன்காடு)

**புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவி சிவலோகநாதன் வித்தியா கூட்டு வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்டதை கண்டித்து நேற்றையதினம் வவுனியாவில் அனைத்து செயற்பாடுகளும் நிறுத்தப்பட்டு சோபை இழந்து காணப்பட்டது.**

அத்துடன் பூரண கதவடைப்பு நடைபெற்று போக்குவரத்து இடைநிறுத்தப்பட்டதில் பரவலாக பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

நகர பகுதியில் ஒன்று கூடியவர்களை பொலிஸார் விரட்டியதுடன் சிலர் மீது தடியடிகளையும் மேற்கொண்டுள்ளனர்.

நகருக்கு வரும் சில வீதிகளில் ரயர்கள் போட்டு எரியூட்டப்பட்டது. வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் நகரப் பகுதியில் அமைதியான முறையில் நடைபெறவிருந்த போராட்டத்தினையும் நடத்துவதற்கு பொலிஸார் அனுமதி வழங்கவில்லை.

இதேவேளை, பாடசாலைகள், வங்கிகள், அரச திணைக்களங்கள் அனைத்தும் மூடப்பட்டதுடன் முச்சக்கர வண்டிகளும் தனியார் பேருந்துகளும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டன.

இதேவேளை வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயம் வழமை போன்று நடைபெற்றது. அங்கு கற்பிக்கும் தமிழ் ஆசிரியர்கள் பாடசாலைக்கு வெளியே புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதேவேளை வவுனியாவில் இடம் பெற்ற இந் நடவடிக்கையை புகைப்படம் பிடித்த ஊடகவியலாளர் உள்ளிட்ட நால்வர் வவுனியா பொலிசாரால் கைதாகி இரு மணித் தியாலயத்தின் பின் விடுதலை செய்யபப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது.

திருநாவற்குளம் பகுதியில் உள்ள பிரதான வீதியில் சிலர் ரயர்களைப் போட்டு எரித்து போக்குவரத்துக்கு தடையை ஏற்படுத்தினர். இதனை அப் பகுதிக்கு சென்ற பத்திரிகை ஒன்றின் பிராந்திய ஊடகவியலாளர் ஒருவர் மற்றும் அப் பகுதியால் சென்ற மூன்று இளைஞர்கள் புகைப்படம் பிடித்ததாக தெரிவித்து அவர்கள் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இதனையடுத்து வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் வன்னி எம்.பி வினோநோதராதலிங்கம் ஆகியோர் பொலிஸாருடன் தொடர்ந்து கதைத்ததையடுத்து இரு மணித்தியாலயத்தின் பின் அவர்கள் நால்வரும் விடுதலை செய்யப்பட்டனர்.





வவுனியா நீதிமன்றம்



வவுனியா நகரப்பகுதி



வவுனியா பேருந்து நிலையம்



வவுனியா ஆட்டோ சங்கம்



வவுனியா பேருந்து நிலையம்

இதேவேளை வவுனியா வர்த்தக சங்கத்தலைவர் ரி.கே. இராசலிங்கம் மேற்படி நிகழ்வு தொடர்பில் ஒலிபெருக்கியில் விளம்பரப்படுத்தியமைக்கு பொலிஸாரிடம் அனுமதி பெறப்படவில்லை என தெரிவித்து அவரையும் ஏனைய இருவரையும் நேற்று பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தியிருந்தனர்.

இதன் போது வர்த்தகர் சாங்க தலைவர் ரி.கே.இராசலிங்கம் மற்றும் வர்த்தக சாங்க அலுவலக உத்தி யோகத்தர் விக்டர், ஒலி பெருக்கி பொருத்தப்பட்ட முச்சக் கர வண்டியின் ஓட்டுனர் ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட போது சட்டத்தரணிகள் அனைவரும் வர்த்தக சாங்க தலைவர் மற்றும் ஏனையோருக்கும் சார்பாக தமது வாதங்களை முன்வைத்திருந்தனர்.

இதனை விசா ரித்த நீதிபதி மூவரையும் பிணையில் செல்ல அனுமதித்திருந்தார். அத்துடன் முள்ளியவளை பிரதேச வர்த்தக சங்கத்தினர் நேற்றையதினம்மேற்கொண்ட கதவடைப்ப போராட்டம் முழுமையாக வெற்றி யளித்துள்ளது. வீதிகளில் ஆங்காங்கே கண்டனத்தை வெளிப்படுத்தும்முகமாக டயாகளை போட்டு எரித்தனர். (2-250-302-281)





## மாணவியின் படுகொலைக்கு

# சட்டநடவடிக்கை எடுக்கக்கோரி மாபெரும் கண்டனப் பேரணி



(மல்லாவி)

புங்குடுதீவு மாணவி கூட்டுவன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்டதை கண்டித்தும் வவு/கனகராயன் குளம்மகாவித்தியாலயமாணவி செல்வராஜா சரண்ஜா கூட்டு வன்புணர்வின் பின்னர் உயிரிழந்தமையையும் கண்டித்து, சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தியும் நேற்று முற்பகல் 10 மணியளவில் மாந்தை கிழக்கு கல்வி கோட்ட மாணவர்கள் துணுக்காய் கல்வி கோட்ட மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் மல்லாவி வர்த்தகர்கள், துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பொது அமைப்புக்கள், பிரதிநிதிகள், பொது மக்கள் உட்பட த.தே.கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர் எனப்பல தரப்பினரும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நடத்தினர்.

இக்கண்டனப்பேரணியானது மு/அனிஞ்சியன் குளம் தமிழ் கலவன்வித்தியாலயத்திற்கு முன்பாக ஆரம்பமாகி சுமார் 3 கிலோமீற்றர் தூரம் வரை நகர்ந்து மு/மல்லாவி மத்திய கல்லூரியை சென்றடைந்தது. அங்கு வைத்து துணுக்காய் பிரதேச செயலாளர் எஸ். குணபாலனிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப் பட்டது. (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சிறுவர் அரங்கம்

1146



# உயர்ந்த பண்பு

மன்னர் மகுடேஸ்வரன் அரண்மனைத தோட்டத்தில் ஓர் அழகான வெண்புறா வசித்து வந்தது. எல்லோருக்கும் நன்மையே செய்ய வேண்டும் என்ற உயர்ந்த பண்பு அதனிடம் இருந்தது.

ஒரு நாள் மகுடேஸ்வரன் தன் மந்திரியிடம், 'புவனகிரி மன்னன் நம்மீது படையெடுக்க ஆயத்தம் செய்வதாக அறிந்தேன். நாம் போரில் ஜெயிக்க ஏற்பாடுகளைச் செய்யுங்கள்' என்றார்.

இதைக் கேட்ட புறாவின் மனம் வருந்தியது. மனிதர்கள் பாஷை தனக்குப் பேச வந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நினைத்தது.

தவ வலிமை மிக்க முனிவர் ஒருவரைச் சந்தித்து தன் விருப்பத்தைக் கூறியது.

'புறாவே! மனித பாஷையில் பேச விரும்பும் காரணம் என்ன?" என்று முனிவர் கேட்டார்.

'முனிவரே! இந்த நாட்டு மன்னரும் புவனகிரி மன்னரும் சண்டையிடப் போகிறார்கள்.

போரில் ஆயிரக்கணக்கான உயிர்கள் மடிவதை நான் விருமபவில்லை. மன்னர்களிடம் பேசி இதைத் தடுக்க நினைக்கிறேன்" என்றது.

ஒரு நொடி யோசித்த முனிவர். 'புறாவே. உனக்கு மூன்று நாட் களுக்கு மட்டும் பேசும் சக்தியை வழங்கு கிறேன். உன் உயர்ந்த எண்ணம் நிறைவேற என் ஆசிகள்' என்றார்.

புறாவுக்கு பேசும் சக்தி வந்துவிட்டது. முனிவரை வணங்கி நன்றி தெரிவித்துவிட்டு அரண்மனைக்குத் திரும்பியது. 'அறிவுரை சொன்னால், மன்னர் ஏற்றுக் கொள்ளமாட்டார். பொய் சொல்லித்தான் மனதை மாற்ற வேண்டும்' என்று நினைத்தது.

மறுநாள், மன்னர் அரண்மனைத் தோட்டத்துக்கு வந்ததும் அவரை நெருங்கியது. 'மன்னா வணக்கம். புவனகிரி நாட்டுடன் சண்டை போட்டால், போரில் நீங்கள் தோற்று விடுவீர்கள்.

உங்கள் அருமை மகளின் வாழ்க்கையும் பாழாகிவிடும். அதற்கு மாறாக, உங்கள் மகளை புவனகிரி இளவரசனுக்குத் திருமணம் செய்துகொடுங்கள். இதனால் உங்களுக்கு நன்மையே கிடைக்கும' என்றது.

மகுடேஸ்வரன் உடனே மந்திரியை வரவழைத்து, புறா கூறியதைத் தெரிவித்தார்.

'அரசரே, புறா நம் மொழியில் பேசியது வியப்பாக இருக்கிறது. அது கூறியபடியே நடப்போம். இந்தத் திருமணத்தின் மூலம் இரண்டு நாடுகளும் நட்போடு வாழும். இந்தச செய்தியைப் புறாவின் காலில் கட்டி அனுப்புவோம்' என்றார்.

மந்திரி கூறியபடி மன்னர் செய்தார். புறா ஓலையுடன் விண்ணில் பறந்தது. அப்போது ஒரு பெரிய பருந்து புறாவின் அருகில் வந்து அதைப் பிடித்தது. 'என் பசிக்கு உன்னை இரையாக்கிக் கொள்ளப் போகிறேன்' என்றது.

"பருந்தாரே. ஒரு முக்கியமான வேலையாக நான் புவனகிரி நாட்டுக்குச் செல்கிறேன். அந்த வேலை முடிந்து இதே வழியில்தான் வருவேன். அப்போது என்னை நீ தின்னலாம்' என்று புறா உறுதி மொழி கொடுக்கவே, பருந்தும் சம்மதித்தது.

புறா தன் பயணத்தைத தொடர்ந்தது. சில மணி நேரங்களில் புவனகிரியை அடைந்தது. அங்கே உலைககளங்களில் கொல்லர்கள் ஆயுதங்கள் செய்வதையும், படை வீரர்கள் மும்முரமாகப் பயிற்சியில் ஈடுபடுவதையும் பார்த்தது.

'மன்னர் மகுடேஸ்வரன் கொடுத்த ஓலையின்படி இந்த நாட்டு மன்னர் நடக்காமல் சண்டைக்குக் கிளம்பினால் என்ன செய்வது?' என்று வருந்திய புறா, ஓலையைப் பத்திரமான இடத்தில் ஒளித்து வைத்தது.

அங்கே இருந்த சாம்பலில் விழுந்து புரண்டது. பார்ப்பதற்கு சாம்பல் வண்ணப் புறா மாதிரி தன் தோற்றத்தை மாற்றிக் கொண்டு அரண்மனைக் குச் சென்றது.

அரண்மனைத் தோட்டத்தில் மன்னரும் அவர் மந்திரியும் இருந்தனர்.

'புவனகிரி மன்னருக்கு வணக்கம்' என்று கூற, மனிதர் பாஷையைப் பேசும் புறாவைப் பார்த்துத் திடுக்கிட்டார். 'என்ன திகைக்கிறீர்கள்? ஆண்டவன் அருளால் பேசும் சக்தியைப் பெற்றிருக்கிறேன். மன்னர் மகுடேஸ்வரனோடு நீங்கள் போர் செய்தால், கட்டாயம் தோற்றுவிடுவீர்கள்.

உங்கள் அருமை மகனின் உயிருக்கும் ஆபத்து ஏற்படும். கூடிய விரைவில் அந்த மன்னரிடமிருந்து ஓலை வரும். அதில் கூறியபடி நடந்தால், இரண்டு நாடுகளும் முன்னேறும்' என்று கூறிவிட்டுப் பறந்து சென்றது.

மறுநாள், புறா தன் இயற்கையான தோற்றத்தில் ஓலையோடு அரண்மனைக்கு வந்தது. செய்தியைப் படித்த மன்னர் புவனேந்திரன், பேசும் புறா கூறியது முற்றிலும் உண்மைதான் என்று உணர்ந்தார்.

தன் மகனின் எதிர்காலம் ஒளிமயமாக அமையும் என்ற நம்பிக்கை உண்டாயிற்று. உடனே மந்திரியிடம், "என் மகனுக்கு மகுடேஸ்வரன் மகளைத் திருமணம் செய்து கொள்வதாக வீரர் மூலம் செய்தி அனுப்புங்கள்" என்றார்.

இதைக் கேட்ட புறாவும் மகிழ்ச்சியோடு வா்னில் பறந்தது. தொலைவில் தன் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்த பருந்தைப் பார்த்துவிட்ட புறா, அதன் அருகில் சென்றது.

'பருந்து அண்ணே, நான் சென்ற வேலை வெற்றிகரமாக முடிந்தது. இனி நீ என்னைச் சாப்பிடலாம்' என்று விடயத்தைச் சொன்னது. 'புறாவே, உன் செயலை நான் மிகவும் பாராட்டுகிறேன். வாக்குக் கொடுத்தபடி நீ நடந்துகொண் டது என் மனதைத் தொட்டுவிட்டது. உன்னை இரையாக்கிக்கொள்ள நான் விரும்பவில்லை' என்றபடி பருந்து பறந்து சென்றுவிட்டது.

பிறகு, புறா முனிவரைச் சந்தித்து நடந்ததைக் கூறியது. 'புறாவே, உன் உயிரையே பணயம் வைத்து நீ ஆற்றிய சேவையைப் பாராட்டுகிறேன். இன்று முதல் உங்கள் இனத்தைச் சமாதானச் சின்னமாக மக்கள் ஏற்றுக்கொள்ளும்படி ஆசீர்வதிக்கிறேன் என்றார்.

புறாவின் உள்ளம் மகிழ்ந்தது.

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆



05.2015
22

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- கி.மு 334 - மகா அலெக்சாண்டர் தலைமையில் கிரேக்க இராணுவம் பேர்சியாவின் மூன்றாம் டாரியஸ் மன்னனைத் தோற்கடித்தனர்.
- 1809 - வியெட்னாவுக்கு அருகில் நெப்போலியன் பொனபார்ட்டின் படைகள் முதற்தடவையாக தோற்கடிக்கப்பட்டன.
- 1834 - இலங்கையில் சட்டசபையின் முதலாவது கூட்டம் கொழும்பில் இடம்பெற்றது.
- 1840 - நியூ சவுத் வேல்சுக்கு பிரித்தானியக் குற்றவாளிகளை நாடுகடத்துதல் நிறுத்தப்பட்டது.
- 1844 - பாரசீக மதகுரு பாப் பாபிசம் என்ற தனது மதக்கொள்கையை வெளியிட்டார். இவரே பஹாய சமயத்தைத் தோற்றுவித்த பகாவுல்லாவின் முன்னோடி எனக் கருதப்படுகிறது.
- 1906 - ரைட் சகோதரர்கள் தமது பறக்கும் கருவிக்கான காப்புரிமத்தைப் பெற்றனர்.
- 1915 - ஐக்கிய அமெரிக்காவில் லாசன் முனை வெடித்தது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: மெக்சிக்கோ நேச நாடுகள் தரப்பில் போரில் குதித்தது.
- 1958- இலங்கை இனக்கலவரம் - இலங்கையில் ஏற்பட்ட கலவரங்களில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் சிங்களவர்களால் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1960 - தெற்கு சிலியில் நிகழ்ந்த 9.5 அளவு நிலநடுக்கம் மற்றும் ஆழிப்பேரலையினால் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். இதுவே இதுவரையில் பதியப்பட்ட அதிசக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஆகும்.
- 1972 - இலங்கையில் புதிய அரசியலமைப்புச் சட்டம் அமுலுக்கு வந்து குடியரசு ஆகியது. . சிலோன், ஸ்ரீலங்கா எனப் பெயர் மாற்றம் பெற்றது. பொதுநலவாய நாடுகள் அமைப்பில் அங்கத்துவம் பெற்றது.
- 1990 - வடக்கு ஜேர்மன் மற்றும் தெற்கு ஜேர்மன் ஆகியன இணைந்து ஜேர்மன் குடியரசு ஆகியது.
- 1990 - விண்டோஸ் 3.0 வெளியிடப்பட்டது.
- 2004 - நெப்ராஸ்காவில் இடம்பெற்ற சூறாவளியினால் ஹலாம் நகரம் முற்றிலும் அழிந்தது.

### பிறப்புகள்

- 1859 - சேர் ஆர்தர் கொனன் டொயில், துப்பறியும் எழுத்தாளர் (இ. 1930)
- 1867 - உமையாள்புரம் சுவாமிநாத ஐயர், கர்நாடக இசைக் கலைஞர் (இ. 1946)
- 1944 - வை.கோபாலசாமி மறுமலர்ச்சி திராவிட முன் னேற்ற கழகத்தலைவர்.
- 1926 - தமிழ்வாணன் தமிழக எழுத்தாளர், இதழாசிரியர் (இ.1977)

### இறப்புகள்

- 1885 - விக்டர் ஹியூகோ, பிரெஞ்சு எழுத்தாளர் (பி. 1802)

### சிறப்பு நாள்

- சர்வதேச பல்லுயிர் பெருக்க தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

**8 பேருக்கு உதவ ரஜினி தயாரித்த 'அருணாச்சலம்' இலாபத்தை பங்கிட்டுக் கொடுத்தார்**

பட உலகைச் சேர்ந்த 8 பேர்களுக்கு உதவ நினைத்தார் ரஜினிகாந்த். உடனே. ஒரு படக்கம்பெனி தொடங்கி 8 பேர்களையும் பட அதிபர்களாக்கி 'அருணாச்சலம்' படத்தை தயாரித்தார். அதில் கிடைத்த இலாபத்தை 8 பேர்களுக்கும் பகிர் ந்து கொடுத்தார்.

**உதவியவர்களுக்கு உதவி**

தான் வளரும் நேரத்தில் தன்னை வளர்த்துவிட்டவர்கள் மீது ரஜினி தனி பிரியம் வைத்திருந்தார். இவர்களுக்கு எந்த விதத்திலாவது உதவ வேண்டுமே என்பது அவர் உள்ளத்துக்குள் பதிந்து போய் இருந்திருக்கிறது.

இப்படித்தான் தன்னை அதிக படங்களில் இயக்கிய டைரக்டர் எஸ்.பி.முத்து ராமனுக்கு ஏதாவது செய்ய விரும்பினார். அதன் விளைவாகவே எஸ்.பி.முத்து ராமனின் மொத்த யூனிட்டுக்காக 'பாண்டி யன்' என்ற படத்தில் நடித்துக் கொடுத்தார்.

ஆரம்ப காலத்திலிருந்தே தனக்கு பக்கத்துணையாக இருந்த நண்பர்களையும் மறக்கவில்லை. அவர்களுக்காக 'வள்ளி' என்ற படத்தில் நடித்துக் கொடுத்து உதவினார்.

இப்படியாக அவரது உதவும் நோக்கம் வளர்ந்து கொண்டிருந்த காலகட்டத்தில். நடிப்பிலும் இமயமாய் உயர்ந்தார். ரசிகர்களின் உச்ச நட்சத்திரமானார். இப்போதும் அவரது உதவும் குணம் அவரை விட்டுப் போய்விடவில்லை.



**அருணாச்சலம்**

தன் நண்பர்களில் சிலருக்கு உதவிடும் நோக்கில் ஒரு படத்தை நடித்துக் கொடுக்க முடிவு செய்தார். அந்தப் படத்துக்கு 'அருணாச்சலம்' என்று பெயரும் சூட்டினார்.

ரஜினியின் ஜோடியாக ரம்பா. சவுந்தர்யா நடித்தனர். குஷ்புவின் கணவரும். டைரக்டருமான சுந்தர் சி. இந்தப் படத்தை இயக்கினார். தேவா இசை அமைக்க. வசனத்தை கிரேசி மோகன் எழுதினார்.

1997 ஏப்ரல் 10 ஆம் திகதி வெளிவந்த இந்தப்படம். 37 தியேட்டர்களில் 100 நாட்களைக் கடந்து ஓடியது. சென்னையிலும், மதுரையிலும் 200 நாள் ஓடி யது.

கலைப் பயணத்தில் தன க்கு உதவியாக இருந்த 8 பேர்களை இந்தப் படத்தின் தயாரிப்பாளர்களாக உயர்த்தி னார் ரஜினி.

1. கே.பாலசந்தர் இயக்கத் தில் ரஜினியின் முதல் படத்தை தயாரித்த 'கலாகேந்திரா' பட நிறுவனத்தின் தயாரிப்பாளர் பி.ஆர்.கோவிந்தராஜ் - துரை ஆகியோர் இருவரும் ஒரு பங்குதாரர்கள்.

2. தயாரிப்பு நிர்வாகி கே.எஸ். நாகராஜன் ராஜா இன் னொரு பங்குதாரர். இவர் ரஜினியின் சில படங்களில் தயாரிப்பு நிர்வாகியாக பணியாற்றினார். நேரம் காலம் பார்க்காத இவரது கடின உழைப்புக்காக இந்தப் பரிசு.

3. கே.முரளி பிரசாத்ராவ். இவர் ஏற்கனவே 'வள்ளி' படத்தில் ரஜினியின் உதவிபெற்ற கே.விட்டல்ராவின் சகோதரர். சகோதரர்கள் இருவரும் தங்கள் தாயாருடன் ஆந்திராவில் இருந்து சென்னை வந்தவர்கள். சென்னை புதுப் பேட்டையில் இவர்கள் இருந்த வீட்டில்தான் ரஜினியும், தனது நடிப்பின் ஆரம்ப காலத்தில் தங்கியிருந்தார். இவர்களின் தாயார் ரஜினியையும் தன் மகனாகவே எண்ணி அன்பு செலுத்தினார்.

(தொடரும்)

# கருவாச்சி காவியம்

**வைரமுத்து-145**



...அவன் கால் ரெண்டையும் கட்டிப்புடிச்சுக் காயத்த அழுத்தாம அவ அழுது பொலம்பவும் அழகுசிங்கத்துக்கே அழுக வந்திருச்சு.

சரி சரி எந்திரி... கால விடு.

நீ சின்னத்தான்னு சொல்ற வரைக்கும் புடிச்சபுடி விட மாட்டண்டா மகனே.

கொஞ்ச நேரம் யோசிச்சான்.

சரி எந்திரி சின்னாத்தா.

எந்திரிச்சுக் கண்ணத் தொடச்சு முந்தானைய அவுத்து முழுரூவா ஒரு ரூவா குடுத்தா. மொதல்ல வெறுப்பா வெறிச்சு வெறிச்சுப் பாத்த பய கடைசியாக் கை நீட்டிட்டான்.

நாம நெனச்சது தப்பு. நல்லவதான் போலிருக்கே.

அவன் நொண்டி நொண்டிப் போறதையே வச்ச கண் வாங்காமப் பாத்து நிக்கிறா திம்சு.

இப்படி...

நெந்நியில சாச்சுட்டா கெழவன;

தண்ணியில சாச்சுட்டா புருசன;

கண்ணீர்ல சாச்சுட்டா மகன.

இன்பம் துன்பங்கிற ரெண்டும் துண்டு துண்டாவா இருக்கு?

கெடையாது; அடுத்தடுத்த வீடு.

இன்பத்தைப் பெரட்டிப் போட்டாத் துன்பம்;

துன்பத்தப் பெரட்டிப் போட்டா இன்பம்.

பூமி இன்பம்; பூகம்பம் துன்பம்.

காத்து இன்பம்; புயல் துன்பம்.

மழை இன்பம்; வெள்ளம் துன்பம்.

தீபம் இன்பம்; தீப்புடிச்சாத் துன்பம்.

ஆகாயம் இன்பம்; இடி துன்பம்.

ஒடம்பு இன்பம்; நோய் துன்பம்.

சொல்லப்போனா சீவராசிகளும் மனுசப் பயகளும் உண்டான காலத்துலயிருந்து துன்பங்கிறதுதான் இயற்கை இன்பங்கிறது ஏற்பாடு; மனுசனாப் பாத்து உண்டாக்கிக்கிட்டது.

இயற்கைக்கு எதிரா மனுசனால உண்டாக்கப்பட்டது நிக்குமா? அதான் பொட் பொட் பொட்டுன்னு விழுந்திருது.



துன்பங்கிற நெருப்ப எடுத்துக் கையில வச்சுக்கிட்டே அலையுது காலம். தட்டுப் [illegible] படுற அவுக தலையிலயெல்லாம் வச்சு வச்சுப் பாக்குது.

நீ சருகாயிருந்தாக் கருகிக் காணாமப்போயிருவ. தங்கமாயிருந்தா மெருகா [illegible] போயிருவ. நீ சருகா தங்கமான்னு சோதிக்கிறேன்.

தீயவச்சிட்டுக் கண்ணச் சிமிட்டிச் சிமிட்டிச் சிரிக்குது காலம்.

கல்லு மேலயே நடந்து பாதம் கெட்டிப் பட்டுப்போற மாதிரி, சள்ளப்பட்டு மொள்ளப்பட்டே மனசும் மரத்துப் போச்சு கருவாச்சிக்கு.

சாமி! எம்மேல கல்லெறியிறதே ஒனக்கொரு வெளையாட்டாப்போச்சு. இன்னம் எத்தன கல்லு எறியப் போறயோ எறி. கடைசியில கணக்குப் பாப்பம்; ஒடையறது என் எலும்பா நீ எறிஞ்ச கல்லான்னு.

கருவாச்சி சொன் னது சாமிக்குக் காது கேட்டிருச்சு போல ருக்கு. இதுவரைக் கும் சல்லிக்கல்ல எறிஞ்ச சாமி, இப்ப ஒரு பாறையவே உருட்டிவிடுது.

பொழைச்ச பொழப்புக்கு ஒரே மிச்சம்ன்னு எந்த மகன நெனச்சாளோ–

செஞ்ச சத்தியத்த செயிச்சுக்காட்ட மலபோல வந்துட்டான்னு எந்த மகன நம்புனாளோ–

அந்த மகனுக்குப் புத்தி கோணிப் போச்சு; போக்கு மாறிப் போச்சு.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# நிலாவரையா? நிலாவரை...!

தலையங்கமே தலைசுற்ற வைக்கிறதே என்னவாயிருக்கும்? சற்றுப் பொறுங்கள். யாழ்ப்பாணத்தின் பாரிய நீர் வளங்களில் ஒன்றாகக் காணப்படும் இயற்கையாகத் தோன்றிய தரைக்கீழ் நீர்க்கிணறு பற்றிய சில விஞ்ஞான ரீதியான ஆய்வு முடிவுகளை கூறப்போகின்றேன்.

நிலாவரை பற்றிய சில ஐதீக கதைகளின்படி இதிகாச காலங்களின்போது சீதாதேவிக்கு தாகமெடுத்த போது இராமபிரானால் எய்யப்பட்ட அம்பினால் தோற்றுவிக்கப்பட்டதென்றும் இங்கு போடப்படும் தேசிக்காய் கீரிமலைக் கடலில் மிதக்கும் என்றும் நம்பப்படுகின்றது. எனினும் விஞ்ஞான ரீதியான ஆய்வுகளின் முடிவுகளின்படி நிலாவரைக் கிணறானது அடையாளங் காணக் கூடிய ஆழத்தைக் கொண்டுள்ளது.




படம் - 01: நிலாவரைக் கிணற்றின் அமைவிடமும் அதனுடைய புற அமைப்பும்
(A – 12.15 m, B – 16.15 m, C – 0.48 m, D – Sampling point)


நிலாவரை என்பது காரணப் பெயராக அமைந்திருக்கலாம். அதாவது முன்னோர்கள் அக்கிணற்றின் ஆழத்தை நிலா (சந்திரன்) வரையான தூரத்திற்கு ஒப்பீடு செய்திருக்கலாம். எவ்வாறாயினும் அவ் இயற்கையாக அமைந்த தரைக்கீழ் கிணற்றினுடைய ஆழம் அறியப்பட்டுள்ளது.

நிலாவரைக் கிணறானது யாழ்ப்பாணக் குடாநாட்டின் வலிகாமம் கிழக்குப் பகுதியான புத்தூர் கிராமத்தில் அமைந்துள்ளது.

1890 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அளவீடுகளின்படி வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு மற்றும் மத்திய பகுதியில் அதனுடைய ஆழங்கள் முறையே 145, 120, 136, 121 மற்றும் 130 அடிகள் (Mahadeva 1938) மேலும் 1972/73 காலப்பகுதியில் செக்கோசுலோவாக்கியாவைச் சேர்ந்த ஆழ் நீர்ப்பரப்பு சுழியோடிகள் அதனுடைய ஆழத்தை 192 அடிகள் எனவும் அக்கிணற்றின் அடிப்பகுதியானது ஒரு சப்பாத்து வடிவில் காணப்படுகின்றது எனவும் கூறியுள்ளார்கள் (Nadanasabapathy, Personnel Communication)

கீழே காட்டப்பட்டுள்ள படமானது யாழ்ப்பாணத்தின் தரைக்கீழான புவியியல் மற்றும் நிலத்தடி நீரின் நிலைப்பாடுகளை காட்டுகின்றது. அதன்படி நிலாவரை கிணறானது இல.2 ஆல் சுட்டிக் காட்டப்படுகின்றது. யாழ்ப்பாணத்தின் தரைக்கீழ் நீரானது சுண்ணாம்புக் கற்களின் குழிகளிலும் வெடிப்புக்களிலும் பாய்ந்து செல்கிறது.

(a) Red Earth, (b) Jaffna Limestone, (c) Granitic genesis, (MSL) mean sea level, (GWT) groundwater level, (FWZ) zone of fresh – water saturation, (BWZ) probable zone of brackish water; (1) dry well, (2) well of Puttur type (Nilawarai), (3) ordinary successful well, (4) spring of Keerimalai type, (5) solution cavern.




படம் - 02: யாழ்ப்பாணத்தின் தரைக்கீழ் அமைப்பு

பல்வேறு ஆய்வு முடிவுகளின்படி நிலாவரைக் கிணற்றில் நன்னீர் மற்றும் உவர்நீர் படைகள் அடர்த்தி வேறுபாடு காரணமாக பிரிந்து காணப்படுகின்றன. 1946 ஆம் ஆண்டு நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் அடிப்படையில் உவர்நீர் படையானது நிலையற்று காணப்படுவதுடன் அது நீர் வெளியேற்றல் மற்றும் நீர் உள்வருகை போன்ற காரணிகளால் ஊசலாடிக் கொண்டிருக்கிறது Sirimanne, 1952 இல் உவர்நீர் படை ஆரம்பமாகும் ஆழம் 80 அடிகள் வரையும் காணப்படுகின்றது என்கின்றார்.

மீண்டும் 2008 இல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி மேற்பரப்பிலிருந்து கிட்டத்தட்ட 25 மீற்றர்கள் (75 அடிகள்) வரையான ஆழம் படுகின்றது (Mahadeva, 1938)


நிலாவரைக் கிணற்றில் கிடைக்கக்கூடிய நன்னீரின் பிரமாணத்தை அறிதல் எனும் எண்ணக்கருவின் அடிப்படையில் 2012 இல் வெளியிடப்பட்ட ஆய்வு முடிவுகளின் படி அங்கு நன்னீரினது மின் கடத்துதிறன் 600 - 2500 µS /cm என்ற அளவுகளில் வேறுபடுகின்றது. மேலும் மேற்பரப்பிலிருந்து கிட்டத்தட்ட 23m வரை அந்நீரினது மின்கடத்து திறனாது 600 - 900 µS /cm வரையே வேறுபடுகின்றது. இது இலங்கையின் நியம குடிநீர் தரத்திற்கு உட்பட்ட அளவிற்கு காணப்படுகின்றது. (படம் 2) (Gunaalan et al., 2012)

இந் நன்னீர் படையானது குடிநீர் மற்றும் நீர்ப்பாசனத்திற்கு உகந்தாக காணப்படுகின்றது. தற்பொழுது விநியோகம் செய்யப்படுகிறது.

2013 இல் காலியிலுள்ள சமுத்திர தொல்லியல் பிரிவின் W.M. சந்திரத்ன தலைமையிலான நீரடி நீச்சற் பிரிவு ஆராய்ச்சிக் குழுவினர் மேற்கொண்ட ஆய்வுகளின்படி மேற்பரப்பிலிருந்து ஏறத்தாழ 10m வரையிலான ஆழத்துக்கு நீரானது தெளிவானதாகவும், அதன்பிற்பாடு கிட்டத்தட்ட 20m வரை நீரின் தெளிவுத்தன்மை குறைந்து சென்று மீண்டும் 23 - 25 மீற்றருக்கு அப்பால் தெளிவான நீராக காணப்படுகின்றது.

மேலும் நிலாவரைக் கிணற்றின் நடுப்பகுதியின் ஆழமானது ஏறத்தாழ 40 மீற்றராக காணப்படுவதுடன் அங்கு அதிகளவான அடையற் குவியலகள் (Sediments) காணப்படுகின்றன எனவும் குறிப்பிடுகின்றார்.

எப்படியாயினும் இவ் இயற்கையாக அமைந்த பெறுமதிமிக்க நீர் வளமானது நிலைத்து நீடித்து நிற்கக்கூடிய முறையில் அப்பகுதியில் வாழும் மக்களுக்கான குடிநீர் மற்றும் நீர்ப்பாசனத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் பாதுகாப்பது அனைவரதும் கடமையாகும்.




படம் - 03: நிலாவரைக் கிணற்றின் ஆழத்துடனான மின்கடத்து திறனின் மாற்றம்.

வரை நன்னீர்ப்படை காணப்படுகின்றது. (Mikunthan et al., 2008) மேலும், மேற்பரப்பிலிருந்து 130 அடி ஆழத்தில் நீரானது உப்புத் தன்மை அதிகமாகவும் அதி செறிவான ஐதரசன் சல்பைட்டும் காணப்படுகின்றது (Mahadeva, 1938)

நிலாவரைக் கிணற்றை மிக அண்மித்து காணப்படும் குழாய்க் கிணற்றின் மூலமாக யாழ்ப்பாணம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் புத்தூர் மற்றும் வாதரவத்தை பகுதிகளுக்கு நீர்


கு.குணாளன்,
விரிவுரையாளர் (தகுதி காண்)
மீன்பிடிவிஞ்ஞானத்துறை
விஞ்ஞானபீடம்
யாழ்.பல்கலைக்கழகம்


## வாரத்திற்கு ஒரு புதிர்! 135

SCUBA என்றால் என்ன?

புதிர் 135 இற்கான விடைகளை 01.06.2015 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

திரு.க.கஜபதி
ஆசிரியர் பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
விரிவுரையாளர், விலங்கியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.
P.D.BOX 57, திருநெல்வேலி.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.

இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக தாவரவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.A.C.தவரஞ்சித்திடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:
யாழ். பல்கலைக்கழகம்.

**புதிர் 134 க்கான 250/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

கே. இராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம்,
கந்தசாமி கோவிலடி,
வட்டுக்கோட்டை

புதிர் 134 க்கான கேள்வியும் விடையும்:

BTEX என்றால் என்ன?

benzene, toluene, ethybenzene and xylenes

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 135

சரியான விடை:-......................................

முழுப்பெயர்:-......................................

முகவரி:-......................................

தொ.பே. இல:......................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயாதீன ஆணைக்குழுக்கள் தேர்தலுக்கு முன் வேண்டும்

## விஜித ஹேரத் வலியுறுத்து

(கொழும்பு)

**சுயாதீன ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டதன் பின் னரே எதிர்வரும் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என மக்கள் விடு தலை முன்னணியின் ஊடகப் பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.**

பெலவத்தை மக்கள் விடு தலை முன்னணியின் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண் ட வாறு தெரிவித்தார். அவர் தொட ர்ந்தும் உரையாற்றுகையில்,

எதிர்வரும் செப்டெம்பர் மாதத்திற்கு முன்பாக தேர் தல் நடத்தப்பட வேண்டும் என்பதில் பிரதமர், ஜனாதி பதி ஆகியோர் உறுதியாக இருப்பதாக தெரிகிறது. அத னால் செப்டெம்பர் மாதத்தி ற்கு முதல் தேர்தல் நடத்தப்படு மாயின் அது சுயாதீன ஆணை க்குழு உருவாக்கப்பட்டதன் பின்பே இடம்பெற வேண் டும் என்பதே எமது நிலைப் பாடு. 19 ஆவது திருத்தம் எதிர்பார்த்த பலனை தரா விடினும் சிறிது நன்மை பயக் கும் காரணிகளுடன் நிறை வேற்றப்பட்டுள்ளது.

அதனால் தேர்தல் முறை யிலும் விரைவில் மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. தற்போதுள்ள தேர்தல் முறைமைக்கு மக் கள் விடுதலை முன்னணி ஒருபோதும் ஆதரவு வழங் காது. மாறாக புதிய முறை உருவாக்கப்படுமாயின் அது ஜனநாயகப் பாதிக்கா வண் ணம் உருவாக்கப்படவேண்டும்.

புதிய முறையில் கட் சிக்கு ஒரு வாக்குச் சீட்டு வேட் பாளருக்கு வாக்கு சீட்டு என்ற வகையில் இருக்குமாயின் புதிய தேர்தல் முறைமை சிறந்ததாக அமையும் என எதிர்பார்க்கிறோம்.

எவ்வாறாயினும் ஜனாதி பதி தலைமையில் நேற்று முன்தினம் தேர்தல் முறை தொடர்பிலான கலந்துரை யாடல் ஒன்று இடம்பெற்றுள் ளது. இதனால் தேர்தல் முறை குறித்த சரியான முடிவொ ன்று இது வரையில் எடுக்கப் படவில்லைஎனஅறியமுடிகிறது.

சிறு கட்சிகளிடையேயும் தேர்தல் முறை தொடர்பி லான இறுதி முடிவொன்று எட்டப்படவில்லை. முள்ளி வாய்ககால் பகுதியில் இறுதிக் கட்ட யுத்தத்தின் போது உயிரி ழநத தமது உறவுகளுக்கு அஞ சலி செலுத்தியமை தொடர் பில் அஞ்சத்தேவையில்லை. முள்ளிவாய்க்கால் பகுதியில் உயிரிழந்த சொந்தங்களுக் காகவே அப்பிரதேச மக்க ளால் அஞ்சலி செலுத்தப்பட் டது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (3-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 60 | 60 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 120 | 100-120 | 120 |
| பச்சைமிளகாய் | 80 | 40 | 100 | 40 | 40 |
| தக்காளி | 100 | 80 | 80 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 60 | 50 | 40 |
| கோவா | 80 | 70 | 80 | 100-140 | 60 |
| கரட் | 150 | 110 | 160 | 80 | 100 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 | 40 |
| புடோல் | 80 | 60 | 100 | 80-120 | 70 |
| வாழைக்காய் | 60 | 50 | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 120 | 50-100 | 100 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 120 | 140 | 130 |
| பாகற்காய் | 100 | 120 | 100 | 140 | 100 |
| வெண்டிக்காய் | 140 | 70 | 80 | 80-160 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 120 | 120 | 70 |
| பயற்றங்காய் | 160 | 120 | 100 | 160-200 | 160 |
| லீக்ஸ் | 200 | 160 | 200 | 160 | 160 |
| பீற்றூட் | 60 | 70 | 80 | 60 | 50 |
| கறிமிளகாய் | 80 | 90 | 120 | 50 | 80 |
| முருங்கைக்காய் | 350 | 380 | 400 | 500-600 | 400 |
| போஞ்சி | 200 | 200 | 200 | 140 | 160 |
| கத்தரிதும்புள்ள | 60 | 60 | 40 | – | 60 |
| கீரை - 1 பிடி | 30 | 40 | 40 | 30-50 | 40 |
| தேசிக்காய் | 160 | 150 | 120 | 200 | 180 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45 | 50-60 | 60 | 60 |
| இராசவள்ளி | 130 | 140 | 140 | 140 | 120 |
| வெங்காயப்பூ | – | – | – | – | – |
| முள்ளங்கி | 70 | 70 | 80 | 50 | 50 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 10 | 20 |

# தகவல் அறியும் சட்டமூலத்தை விரைவில் சமர்ப்பிக்கவேண்டும்

## எம்.பி. திலங்க சுமதிபால வலியுறுத்தல்

தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டமூலத்தை விரைவில் பாராளுமன்றத்து க்கு கொண்டுவருமாறு ஸ்ரீல ங்கா சுதந்திரக் கட்சி கோரி க்கை விடுத்துள்ளது. இந்த சட்டமூலத்துக்கு சுதந்திரக் கட்சி முழுமையான ஆதர வினை வழங்கும் என்றும் எனவே உடனடியாக அதனை பாராளுமன்றத்துக்கு கொண்டு வருமாறு வலியுறுத்துவதா கவும் அக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட் டில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில்,

தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டமூலத்தை விரைவில் பாராளுமன்றத்து க்கு கொண்டுவருமாறு கோரி க்கை விடுக்கின்றோம். அந்த சட்டமூலத்துக்கு ஆதரவு வழ ங்க நாங்கள் தயாராக இருக் கின்றோம். எனவே அதனை விரைவாக பாராளுமன்றத் துக்கு கொண்டுவர அரசாங் கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேவேளை எமது கட் சியின் பாராளுமன்ற உறுப்பி னர்களுக்கு எதிராக மேற் கொள்ளப்படும் செயற்பாடு கள் தொடர்பில் சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்திடம் நாங்கள் முறைப்பாடு செய்வ தல் எந்த மாற்றமும் இல்லை. அதனை நாங்கள் விரை வில் செய்யவுள்ளோம் என்று தெரிவித்துள்ளார். (3-5)

# (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 378


அஜந் குலசிங்கம்

**வாழ்க்கையில் எந்த ஒரு பிரச்சினைக்கும் தீர்வு உண்டு. முயற்சி செய்து தேடி கண்டுபிடிப்பவன் வெற்றி பெறுகிறான். முயற்சியின்றி சோம்பலாய் இருப்பவன் தொடர் தோல்வி நிலையில் இருக்கிறான்...**

பெருமாள் வேந்தன்




விதுஷா ரட்ணம்





ரவி ராஜா




ஜெயராசா டிலக்சன்




சந்தூரி தங்கதுரை




**நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய தேர்தல் முறைக்கு அவசரப்படக்கூடாது!



தற்போது நாடாளுமன்றத்தில் குழப்ப நிலை நிளலவி வருகிறது. நாடாளுமன்றத தில் மிகப் பெரிய கட்சி எதிர்க்கட்சியிலும் சிறிய தோர் கட்சி ஆளும் கட்சியாகவும் இருக்கிறது. எனவே, நாடாளுமன்றத்தை கலைத்து புதி தாக பொதுத் தேர்தலை நடத்த வேணடும் என பல அரசியல் கட்சிகள் கூறுகின்றன. ஆனால், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அதைப் பற்றி அக்கறையே இல்லாததைப்போல் இருக்கிறது. அதேபோல் தேர்தல் முறையை மாற்றியமைப்பதற்கான அரசிய லமைப்பின் 20 ஆவது திருத்தத்தைப் பற்றி பல அரசியல் கட்சிகள் கருத்து வெளியிட்டு வருகின்றன.

சில கட்சிகள் அந்த விடயத்தில் அரசாங் கத்துக்கு சவால் விட்டுக் கொண்டும் இருக்கி றன்றன. சில சிறுபான்மை கட்சிகள் அந்த விடயத்தில் பதறிப் போய் இருப்பதாகவும் தெரி கிறது. ஆனால், அதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அலட்டிக் கொள்ளவில்லை.

நாடாளுமன்றத்தை கலைக்குமாறு பல அரசியல் கட்சிகள் கூறி வந்த போதிலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதற்கு இப்போதே தயாராக இல்லை போல்தான் தெரிகிறது. அதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. ஜனாதிபதியின் பிரதான இரண்டு தேர்தல் வாக்குறுதிகளில் ஒன் றான, தேர்தல் முறையை மாற்றியமைப்பத ற்கு அவரது அரசாங்கத்துக்கு இன்னமும் முடி யாமல் போனமையே ஒரு காரணமாகும்.

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் நிறைவேறிய போதிலும் அதன்கீழ் அடுத்த தேர்தலுக்கான நிர்வாக ஒழுங்குகள் இன்னமும் தயாராக இல்லாமையே அடு த்த காரணமாகும்.

20 ஆவது திருத்தமானது அரசாங்கத் தின் 100 நாட்கள் வேலைத் திட்டத்தின் முக்கிய வாக்குறுதியாக இருந்தது. ஆனால், அந்த வேலைத் திட்டத்துக்கான காலக்கெடு கடந்த ஏப்ரல் 23 ஆம் திகதி முடிவடைந்த போதிலும் அந்த காலப் பகுதியில் அந்த திருத்தத்தை நிறைவேற்றிக் கொள்வது ஒரு புறமிருக்க, அதைப்பற்றி அரசியல் கட்சிகளி டையே இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள வாவது முடியவில்லை. குறிப்பாக இந்த விடயத்தில் சிறு மற்றும் சிறுபான்மை கட்சி கள பெரும் அச்சத்துடனேயே இருக்கின்றன.

தற்போதைய விகிதாசார தேர்தல் முறை யையும் 1978 ஆம் ஆண்டுக்கு முன்னர் நாட்டில் அமுலிலிருந்த தொகுதிவாரி தேர் தல் முறையையும் உள்ளடக்கிய கலப்பு முறையொன்று இருக்க வேண்டும் என்பதே பொதுவாக தற்போது ஏற்பட்டிருக்கும் இண க்கப்பாடாகும். ஆனால், நாடாளுமன்றத்தி லுள்ள ஆசனங்களுக்கு எத்தனை சதவீதம் விகிதாசார முறையில் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் எத்தனை சத வீதம் தொகுதிவாரி முறையில் தேர்ந்தெடு க்க வேண்டும் என்பதில் இப்போதும் இழுபறி நிலை இருந்து வருகிறது.

மக்கள் விடுதலை முன்னணி போன்ற சிறு கட்சிகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்-பைத் தவிர்ந்த ஏனைய சிறுபான்மைக் கட்சிகளும் தற்போது அரசாங்கம் முன்வை க்கப் போகும் அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்பதில் அக்கறை காட்டவில்லை. எனவே, அக்கட்சிகள் அத்திருத்தத்தை நிறை வேற்றாமலேயே நாடாளுமன்றம் கலை க்கப்பட வேண்டும் எனக் கூறுகின்றன.

சிறு கட்சிகள் சில 20 ஆவது திருத்தத்து க்கு எதிர்ப்பு தெரிவிக்காத போதிலும் எதிர் வரும் பொதுத் தேர்தலை தற்போதைய முறை யின் கீழேயே நடத்த வேண்டும் என்று கூறு கின்றன. 20 ஆவது திருத்தம் நிறைவேறி னாலும் அதன்கீழ் தேர்தல் தொகுதிகளின் எல்லைகளை நிர்ணயிப்பதற்கு நீண்டகாலம் எடுக்கும் என்றும் அதுவரை குழப்ப நிலையி லுள்ள தற்போதைய நாடாளுமன்றத்தை கலைக்காதிருக்க முடியாது என்றும் அக்கட்சி கள் வாதிடுகின்றன.

அதில் ஓரளவு உண்மை இருந்த போதி லும் தற்போதைய முறையின் கீழேயே எதிர் வரும் தேர்தலையும் நடத்த வேண்டும் என அவர்கள் வாதிடுவதற்கான உண்மையான காரணம் அதுவல்ல. தொகுதிவாரி தேர்தல் முறை தமக்கு சாதகமாக அமையாது என்ப தால் இந்தத் தடவை மட்டுமாவது தமக்கு சாதக மான விகிதாசார முறையிலேயே தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற நோக்கிலேயே அவர்கள் இவ்வாறு வாதிடுகிறார்கள்.

மக்கள் விடுதலை முன்னணி, கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது மஹிந்த ராஜ பக்ஷவைத் தோல்வியுறச் செய்ய பெரும்பங்கை ஆற்றியது. அந்த தேர்தல் பிரசார காலத்தில் அக்கட்சியினர் மக்கள் மனதை வெகுவாக வென்றனர். அதன் பின்னர் மஹி ந்தவின் அரசாங்கத்தின் கீழ் இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பாகவும் அக்கட்சியினர் குரல் எழுப்பினர்.

அக்கட்சியினர் புதிய அரசாங்கத்தின் அமைச்சுப் பதவிகளை ஏற்காததனாலும் அவர்கள் பெருமை தேடிக் கொண்டனர். தமிழ் மக்கள் விடயத்திலும் அவர்களது நிலைப்பாட்டில் நல்ல முன்னேற்றத்தை காணக்கூடியதாக இருக்கிறது. எனவே, எதிர் வரும் பொதுத் தேர்தலில் அக்கட்சி முன்ன ரைவிட கூடுதலான ஆசனங்களை வெல்லும் என்றதோர் பொது அபிப்பிராயம் நிலவி வருகி றது. காலப்போக்கில் இந்த நிலைமை மாறலாம்.

தொகுதிவாரி தேர்தல் முறையை விரும் பாததற்குப் புறம்பாக இதுவும் விரைவில் பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் என்று அக்கட்சியினர் குரல் எழுப்புவதற்கான கரணமாக இருக்கலாம்.

தேசிய சுதந்திர முன்னணி, மக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் ஹெல உறுமய போன்ற கட்சிகள் எந்த முறையில் தேர்தல் நடந்தாலும் தனியே போட்டியிட்டால் முழு நாட்டிலும் ஓரிரு ஆசனங்களுக்கு மேல் பெறமாட்டா. அக்கட்சிகளும் விரைவில் பொது த்தேர்தலை நடத்துவதை விரும்புகின்றன.

அதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின் றன. சிறு கட்சிகள் என்ற வகையில் அக்கட்சி களும் விகிதாசார முறையை விரும்புவதே முதலாவது காரணமாகும். ஸ்ரீலங்கா சுதந்தி ரக் கட்சி பிளவுபட்டு இருப்பதனால் அதன் மூலம் பயனடைவதே அவர்களது இரண்டா வது நோக்கமாகும்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுத ந்திர முன்னணியில் அங்கம் வகித்த கட்சி களைச் சேர்ந்தவர்கள் மஹிந்தவுக்கு ஆதர வான குழுக்கள் எவ்வளவுதான் கோஷமிட் டாலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்வரும் அரசாங்கத்தில் பிரதமர் பதவியை ராஜபக்ஷவுக்கு வழங்குவது ஒருபுறமிருக்க, அவருக்கு ஸ்ரீ.ல.சு.க.வின் கீழ் போட்டியிட வாவது சந்தர்ப்பம் வழங்குவாரா என நம்ப முடியாது.

தமக்கு சவால் விடுத்த சகலரினதும் வாழ் க்கையையே ராஜபக்ஷ பாழாக்க முற்பட்டார். பத்து பதினைந்து ஆண்டுகளுக்கு பின்னரா வது அவருக்கு மீண்டும் அதிகாரத்தை கை யிலெடுக்க இடமளித்தால் தமக்கு என்ன நடக் கும் என்பது மைத்திரிபாலவுக்குத் தெரியும். எனவே. அரசியல் ரீதியாக அவரை சற்றே னும் பலப்படுத்த மைத்திரிபால முற்பட மாட் டார் என்றே ஊகிக்க முடிகிறது. அதற்காக அவருக்கு இன்னமும் நிறைவேற்று ஜனா திபதி அதிகாரங்கள் இருக்கின்றன.

மஹிந்தவுக்கு ஸ்ரீ.ல.சு.க.வில் இடம் கிடைக்காது போனால் அதனால் விரக்திய டையும் அவரது ஆதரவாளர்கள் மஹிந்த வின் பெயரை வைத்து அரசியல் நடத்தும் விமல் வீரவன்ச மற்றும் தினேஷ் குணவர்தன போன்றோர்களின் கட்சிகளை நாடலாம்.

ராஜபக்ஷவும் அந்தக் கட்சிகளின் கீழ் தேர்தலில் போட்டியிட்டால் அக்கட்சிகள் பலம் பெறுவது நிச்சயம். இந்த தைரியத்தில்தான் விமல் மற்றும் தினேஷ் ஆகியோர் நாடாளு மன்றத்தை கலைக்குமாறு அரசாங்கத்துக்கு சவால் விடுக்கின்றனர்.

நாட்டிலுள்ள இரு பிரதான கட்சிகளில் ஒன்றான ஐக்கிய தேசிய கட்சியும் இன்றைய நிலையில் விகிதாசார தேர்தல் முறையையே விரும்புகின்றது போலும். நீண்ட காலமாக எதிர்க்கட்சியில் இருந்ததனால் ஐ.தே.க.வின் மாவட்ட மட்ட அமைப்புக்கள் இன்னமும் முறையாக சீரமைக்கப்படவில்லை.

எனவே தொகுதிவாரியாக தமக்கு சாதக மான நிலைமை இன்னமும் தோன்றவி ல்லை என அக்கட்சி நினைக்கிறது போலும் எனவேதான் அக்கட்சி நாடாளுமன்றத்தை கலைக்க அவசரப்படுகிறது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே எங் கும் பாரியளவில் சிறுபான்மை மக்கள் செறி வாக வாழ்வதில்லை.

எனவே, வடக்கு மற்றும் கிழக்கு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் வாழும் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிகள் தொகுதிவாரி தேர்தல் முறையினால் தமது பிரதிநிதித்துவம் குறை யும் என அஞ்சுகிறார்கள். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வடக்கில் எந்தத் தேர்தல் முறையும் சாதகமாகவே அமையும். எனவே, அக்கட்சி அமைதியாக இருக் கிறது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கும் கிழக்கில் எந்தத் தேர்தல் முறையும் ஒன்றுதான் ஆனால், அக்கட்சி வடக்கு, கிழக்குக்கு வெளியே போட்டியிடுவதால் தேர்தல் முறை மாற்றம் சம்பந்தமாக சற்று குழப்பமடை ந்துள்ளது.

நீண்டகாலமாக ஆளும் கட்சியாக இருந்த தனால் ஸ்ரீ.ல.சு.க.வுக்கு மாவட்ட மட்ட அமைப்புக்கள் இருக்கின்றன. எனவே, தொகுதிவாரி முறை தமக்கு சாதகமானது என அக் கட்சி நினைக்கிறது. எனவே தான் அக்கட்சி கலப்பு தேர்தல் முறை தொடர்பான அரசியல மைப்புத் திருத்தத்தை நிறை வேற்றிக்கொண்டே பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் என அடம்பிடிக்கிறது.

ஆனால், தற்போதைய கள நிலைமையைப் பொறுத்தவரை தேர்தல் முறையைப் பார்க்கி லும் உட்கட்சிப் போராட்டமே ஸ்ரீ.ல.சு.க.வின் தலைவிதியை நிர்ணயிக்கும்.

இவ்வாறு பார்க்கும்போது தமிழ் கட்சி யாக இருந்தாலும் முஸ்லிம் கட்சி யாக இருந் தாலும் சிங்கள தலை மையுள்ள கட்சியாக இருந்தாலும் பெரிய கட்சியாக இருந்தாலும் சிறிய கட்சியாக இருந்தாலும் எந்த வொரு கட்சியும் நாட்டின் எதிர் காலத்தை கருத்திற் கொண்டு தேர்தல் முறையை மதிப்பிடுவதோ அல்லது குறிப் பிட்டதோர் தேர்தல் முறையை ஆதரிப்பதோ இல்லை.

சகல கட்சிகளும் குறிப்பிட்டதோர் தேர் தல் முறையினால் தமக்கு என்ன நடக்கப் போகிறது என்பதை அடிப்படையாக வைத்தே அத்தேர்தல் முறையை ஆதரிக்கவோ அல்லது எதிர்க்கவோ முடிவு செய்கின்றன. ஆனால், இதனால் அரசியல் கட்சிகளுக் கிடையே ஏற்படும் விவாதம் ஜனநாயகத்து க்கு உகந்ததாகும்.

ஆறுதலாக விவாதித்து சிறந்ததோர் தேர்தல் முறையை உருவாக்கிக் கொள்ள தற்போதைய நாடாளுமன்றத்தின் நிலைமை தடையாக இருக்கிறது. நாடாளுமன்றத்தில் மிகப் பெரும் கட்சி எதிர்க் கட்சியாக இருக் கிறது. அதைவிட சிறியதோர் கட்சி ஆளும் கடசியாக இருக்கிறது. மிகப் பெரும் கட்சியின தலைவரான ஜனாதிபதி இரண்டாவது பெரும் கட்சிக்கே நெருக்கமாக இருக்கிறார். அதேவேளை. "நல்லாட்சியின்" விளைவாக தமது தலைவர் நியமித்த பிரதமரை ஸ்ரீ.ல. சு.க எதிர்த்து போர் பிரகடனம் செய்கிறது.

இந்த குழப்ப நிலையின் காரணமாக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் மூலம் புதிய நாடாளுமன்றம் ஒன்றை தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற வாதம் நியாயமானதே. ஆனால், அந்த அவசரம் தேர்தல் முறை தொடர்பான ஆறுதலான விவா தத்துக்கு இடமளிக்குமா என்ற சந்தேகத்தை எழுப்புகிறது.

நாடாளுமன்றத்தை அவசரப்பட்டு கலை க்கக் கூடாது என்பதற்கு மற்றொரு காரண மும் இருக்கிறது. இப்போது அரசியலமைப் பின் 19 ஆவது திருத்தத்துக்கு சபாநாயகரி னால் கையொப்பம் இடப்பட்டுள்ளது. எனவே, இனி சம்பந்தப்பட்ட விடயங்களுக்கு அது தான் சட்டம். இனி தேர்தல்கள் நடத்தப் படுவதாக இருந்தால் தேர்தல் ஆணைக்குழு ஒன்றின் மூலமே நடத்தப்பட முடியும்.

தேர்தல் கமிஷன் உள்ளிட்ட "சுதந்திர" கமிஷன்களை நியமிக்க அரசியலமைப்புச் சபை ஒன்று இருக்க வேண்டும். அந்தச் சபையை நியமிக்க பல மாதங்கள் இல்லா விட்டால் பல வாரங்களாவது அவசியமா கும். அதற்கிடையே நாடாளுமன்றத்தை கலைத்தால் அரசியலமைப்புச் சபையை நியமிக்க முடியாமல் போய்விடும். ஏனெ னில், அச்சபையின் உறுப்பினர்களில் ஏழு பேர் நாடாளுமன்ற உறுப்பினர்களாவர். எனவே, அச் சபையை நிமிக்காது நாடாளு மன்றத்தை கலைத்தால் அது நாட்டை அராஜக நிலைக்கு இட்டுச் செல்லும்.

மறுபுறத்தில் நாடாளுமன்றத்தை கலை க்க வேண்டும் என்பதற்காக அவசரமாக அரசியலமைப்புச் சபைக்கு உறுப்பிர்கள் நியமிக்கப்பட்டால் பொருத்தமான சிறந்த உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படாது போகலாம். இது சுதந்திர ஆணைக்குழுக் களை நியமித்தலை பாதிக்கும் அது நீதித் துறை, பொலிஸ், அரச சேவை போன்ற நாட டின் சகல முக்கிய துறைகளையும் பாதிக் கும். எனவே, நாடாளுமன்றத்தை கூடிய விரைவில் கலைக்க வேண்டும் என்றிருந்த போதி லும் அதற்காக அவசரப்பட்டு நாட்டின் எதிர் காலத்தை பாதிப்படையச் செய்யவும் கூடாது.

-எம்.எஸ்.எம். ஐயூப்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் நிதிமோசடி பிரிவானது சட்டபூர்வமாகவே இயங்குகிறது

## ஜே.வி.பியின் பிரசார செயலாளர்

(கொழும்பு)

**பொலிஸ் மோசடி தவிர்ப்பு பிரிவு ஜனாதிபதியின் தலைமையில் கூடிய அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுள்ளது. எனவே அதனை எவரும் சட்ட விரோதமான அமைப்பு என்று கூற முடியாது என்று ஜே.வி.பி.தெரிவித்துள்ளது.**



இந்தப் பிரிவு. நிதி மோசடிகள் தொடர்பான விசாரணைகளை மாத்திரமே கையாண்டு வருகிறது என்று ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய அமைச்சரவையிலேயே இந்தப் பிரிவுக்கான அனுமதி கிடைத்துள்ளது.

இதேவேளை முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ. தாம் அப்பாவி என்று உணர்ந்தால் அவர் இந்த பிரிவின் விசாரணைகளுக்கு முகங்கொடுத்து தம்மை நிரபராதி என்று நிரூபிக்கவேண்டும்.

அதேநேரம் கோத்தபாய ராஜபக்ஷ கைதுசெய்யப்படக் கூடாது என்று உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பில் திருப்தியில்லையென்றால், பிரதமர் ஐந்து அல்லது ஏழு பேரைக் கொண்ட நீதியரசர்கள் குழுவின் முன்னால் இந்த விசாரணையை நடத்தக் கோரலாம்.

இதற்காக அவர் பொதுநலவாய நாடுகளின் உதவியை கோருவது பொருத்தமானதல்ல என்று விஜித ஹேரத் குறிப்பிட்டார்.

இதற்கிடையில் தேர்தல் சீர்திருத்தத்தின் போது வாக்காளர் ஒருவர் தனிப்பட்ட போட்டியாளர் ஒருவருக்கு வாக்களிக்கும் அதே நேரம், விரும்பிய கட்சி ஒன்றுக்கு வாக்களிக்க அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று தமது கட்சி கோரியுள்ளது.

இதற்காக இரண்டு வாக்குச் சீட்டுக்கள் பயன்படுத்தப்படலாம் என்றும் விஜித ஹேரத் மேலும் தெரிவித்துள்ளார். (3-5)

# பொதுபல சேனா அமைப்பின் தலைவர் பதவி விலகினார்

(கொழும்பு)



பௌத்த கடும் கோட்பாட்டு அமைப்பான பொதுபல சேனாவின் தலைவர் கிராம விமலஜோதி தேரர் தமது பதவியில் இருந்து விலகியுள்ளார். பொதுபலசேனாவின் பயணம் தமக்கு பிடிக்கவில்லை என்ற காரணத்தை கூறியே அவர் பதவியில் இருந்து விலகியுள்ளார்.

இது தொடர்பில் கடிதம் ஒன்றை அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு அவர் அனுப்பியுள்ளார்.

ஏற்கனவே சுகததாஸ உள்ளக ரங்கில், இடம்பெற்ற அமைப்பின் தேசிய மாநாட்டில். எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி அமைப்பு செயற்படவில்லை.

அதற்கு பதிலாக நிதி சேகரிப்பாளர்களும் ஏனையோருமே அமைப்பை வழிநடத்துவதாக விமலஜோதி தேரர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை அரசியலில் ஈடுபடும் எண்ணம் தமக்கு இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் இந்த பதவிவிலகல் குறித்து விமலஜோதி தேரர் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை என்று பொதுபலசேனா அமைப்பு அறிவித்துள்ளது. (3-5)

# தலைமைப் பதவி ஜனாதிபதிக்கு

(கொழும்பு)

இலங்கை சாரணர் இயக்கத்தின் தலைமைப் பதவிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் இலங்கை சாரணர் இயக்கத்தின் தலைவர் மற்றும் ஆலோசகர் பதவி ஜனாதிபதி மைத்திரிபாலவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில், இலங்கை சாரணர் சங்கம் ஜனாதிபதிக்கு இந்த பதவிகளை வழங்கியுள்ளது.

சாரணர் இயக்கத்தின் யாப்பிற்கு அமைய நாட்டுத் தலைவரே அந்த இயக்கத்தின் தலைவராகவும் கடமையாற்றுவார் என்பது குறிப்பிடத்தக்கது. (3-5)

# மகிந்த தேர்தலில் போட்டியிட்டால் விசேட சலுகைகள் வழங்கப்படும்

## அனுர யாப்பா தெரிவிப்பு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிட்டால விசேட சலுகைகள் வழங்கப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் பொதுச் செயலாளர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போட்டியிட்டால், நேர்முகத் தேர்வு நடத்தப்படமாட்டாது.

வேட்பு மனு வழங்குவதற்கான விசேட குழு முன்னிலையில்பிரசன்னமாகாது மகிந்தவிற்கு வேட்பு மனு வழங்கப்படும்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள அனைத்து வேட்பாளர்களும் நேர்முகத் தேர்விற்கு உட்படுத்தப்படுவர், வேட்பாளர்களாக போட்டியிட விரும்புவோர் வேட்பு மனுக்களை பரிசீலனை செய்யும் விசேட குழுவின் முன்னிலையில், நேர்முகத் தேர்விற்காக பிரசன்னமாக வேண்டும்.

மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிட விரும்பினால் அதற்கு எவ்வித தடையும் கிடையாது என ஏற்கனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இதுபற்றி கூறியுள்ளார் என அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார். (3-5)

# இன்று ஒரு தகவல்

## உபதேசங்களை உற்றுக் கவனியுங்கள்

தோரு என்ற சிந்தனையாளர் "இந்த உலகத்திலுள்ள தொளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது பேர்கள் ஒழுக்க போதனை செய்கிறவர்களாகவும் ஒரே ஒருவர் மட்டும் ஒழுக்கத்தோடு இருப்பவராகவும் உள்ளார்" என்று குறிப்பிடுகிறார். பெரும்பாலானோர் ஒழுக்கமுடையவர்களாக இருப்பதைவிட ஒழுக்கமுடையவர்களாகத் தங்களைக் காட்டிக் கொள்வதிலேயே அதிக கவனம் செலுகிறார்கள். எனவே ஒழுக்க போதனைகளுக்குச் செவி சாய்த்து நேரத்தை வீணாக்கிக் கொண்டிருப்பதில் அர்த்தம் ஏதும் இல்லை. உங்களுடைய மனச்சாட்சிக்கு எது சரி என்றுபடுகிறதோ அதைவிட வேறு சிறந்த ஒழுக்கம் இந்த உலகில் இருக்க வழியில்லை.

நமக்கு உபதேசம் செய்கிறவர்கள் அனைவரும் நம்முடைய நன்மைக்காகத்தான் உபதேசம் செய்கிறார்கள் என்று நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. உங்களுக்கு உபதேசிப்பதில்கூட அவர்களுக்கு ஒரு சுயநல நோக்கம் இருக்கக்கூடும். உங்கள் நலன் பாதிக்கப்பட்டால் யார் பாதிப்புக்கு உள்ளாகிறார்களோ அவர்கள் செய்யும் உபதேசம் வேண்டுமானால் கற்கக்கூடியதாக இருக்கலாம். பொதுவாக உபதேசிகளாக உள்ளவர்களும் ஏதோ ஒரு சுயநல நோக்கத்தோடுதான் தங்களுடைய உபதேசங்களைச் செய்கிறார்கள்.

உங்களை விமர்சிக்கிறவர்களும் குறை கூறுகின்றவர்களும் உங்களைச் சுற்றி நிறையப்பேர் இருப்பார்கள். அவர்கள் சொல்வதில் நியாயம் கூட இருக்கலாம். அதற்காக குற்றவாளியைப் போன்ற குற்ற உணர்வுடன் நீங்கள் செயற்பட வேண்டும் என்ற அவசியவமில்லை. உங்களது குற்றம் அல்லது குறையை உடனே ஏற்றுக்கொண்டு அதற்காக வருத்தமும் தெரிவித்து விட்டு உடனே அதை மறந்து விடுவதுதான் நல்லது. ஒருவேளை அவர்கள் குறை கூறுவது தவறாக இருந்தால் அடுத்த கணமே அதை அலட்சியப்படுத்தி நீங்கள் மறந்துவிடலாம்.

மற்றவர்கள் சொல்கிறார்கள் என்பதற்காக எந்தக் காரியத்தையும் நாம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் எந்தக் காரியத்தைச் செய்தாலும் நமக்கு அதில் ஈடுபாடு இருக்க வேண்டும். மற்றவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக ஒரு காரியத்தை நாம் செய்யும்போது அந்தக் காரியத்தில் மன ஈடுபாடு ஏற்படாமல் போவதோடுகூட நமது முன்னேற்றத்துக்கும் நாம் செய்ய வந்த காரியமே தடையாக இருந்துவிடவும் கூடும்.

**உங்களுக்காக மற்றவர்கள் சிந்திப்பது என்பது சாத்தியமில்லை. உங்களுக்காக நீங்கள்தான் சிந்திக்க வேண்டும். மற்றவர்களின் உபதேசமும் ஆலோசனையும் என்றென்றைக்கும் உங்களுக்கு வழிகாட்டிக் கொண்டிருக்க முடியாது.**

தமிழில் தாட்சண்யம் என்கிற சொல் ஒன்று உண்டு. மற்றவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக அல்லது அவர்கள் அதிருப்தி அடையக் கூடாது என்பதற்காக நாம் ஒரு காரியத்தைச் செய்தால் அவர்களின் தாட்சண்யத்துக்காக அந்தக் காரியத்தைச் செய்கிறோம் என்று பொருள்.

**வாழ்க்கையில் நாம் முதன்மைபெற விரும்பினால் முதலில் இந்த தாட்சண்ய மனோபாவத்தை விட்டொழிக்க வேண்டும். பிறரைத் திருப்திப்படுத்த நாம் செய்யும் காரியம் முதலில் நம்மைத் திருப்திப்படுத்துகிறதா என்று பார்க்கலாம்.**

தாட்சண்யப்படுகிறவர்கள் மற்றவர்கள் ஒன்றைச் சொல்லும் போது மறுத்துப்பேச முடியாதவர்களாக இருப்பார்கள். இது ஆபத்தான மனோபாவம். முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடும் மனோபாவம். உங்களுக்குப் பயன்படாது என்கிற போது முடியாது என்று அதை மறுத்துவிடுவதில் தவறில்லை. வேண்டுமானால் முகத்தில் அடித்ததைப்போல் அதைச் சொல்லாமல் நளினமாகவும் நாசுக்காகவும் ஆனால் அதே சமயம் உறுதியாகவும் அதைச் சொல்லப் பழகிக் கொள்ளலாம்.

இந்த விடயத்தை நான் இவ்வளவு வலியுறுத்திச் சொல்வதற்குக் காரணம் இருக்கிறது. இது ஒரு சாதாரண விடயம் போல் உங்களுக்குத் தோன்றலாம். ஆனால் உண்மை அதுவல்ல. நம்மைச் சுற்றியுள்ள மனிதர்களில் பெரும்பாலானோர் தங்கள் இஷ்டப்படியே மற்றவர்கள் செயற்பட வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். தங்களது ஆசையை மற்றவர்கள் மீது திணிக்கும் சுபாவம் கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் சொல்வதை நாம் கேட்க மறுக்கும் போது நம்மைப் பற்றி அவதூறு பேசுபவர்களாகவும் இருக்கிறார்கள். இம்மாதிரியான மனிதர்களை நிறையக்கொண்டதுதான் இந்தச் சமூகம். இவர்களை விரோதித்துக்கொள்ள வேண்டும் என்று நான் சொல்லவில்லை. அதற்காக இவர்கள் ஆட்டுவித்தபடி ஆட வேண்டும் என்கிற அவசியமும் இல்லை. ஒருவேளை நீங்கள் முடியாது என்று நளினமாகச் சொன்னாலும் இவர்கள் உங்களைப்பற்றி அவதூறு பேசக்கூடும். உங்களைப் பற்றிய தவறான வதந்திகளை பரப்பவும் அவர்கள் முயலக்கூடும்.

நாகரிகமாக அவர்களுடைய யோசனைகளை ஏற்க முடியாது என்று நீங்கள் சொன்னதோடு உங்களுடைய கடமை முடிந்து விட்டது. அதற்குப் பிறகு வரும் அவதூறுகளைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. அவற்றை அலட்சியப்படுத்த நீங்கள் கற்றுக்கொண்டு விட்டால் அந்த வதந்திகள் அல்லது அவதூறுகள் தோன்றிய வேகத்திலேயே மறைந்து போகும். உங்களைப் பற்றிய அவதூறுகளுக்ும் வதந்திகளுக்கும் உயிர் கொடுப்பதே நீங்கள்தான். அவற்றைப் பற்றி நீங்கள் விவாதிக்கத் தொடங்கும்போதும் மறுக்கத் தொடங்கும் போதும் அவை புத்துயிர் பெற்று விடுகின்றன. வதந்தியாளர்களின் நோக்கமே அதுதான். அவருடைய நோக்கம் சுலபத்தில் நிறைவேறி விடுகிறது. அதனால் அவர் உற்சாகம் பெறுகிறார். அந்த வதந்திக்கு மேலும் பலம் உண்டாக்க முயற்சிக்கிறார். அதற்கு நீங்களே காரணமாகிப் போகிறீர்கள்.

காலணா பெறாத விடயத்தைக்கூட சிலர் நீண்டநேரம் விவாதிக்கும் குணம் உடையவர்களாக இருப்பார்கள். அது அவர்களுடைய ஒரு பொழுதுபோக்கு. அம்மாதிரி விவாதங்களில் ஒருபோதும் நீங்கள் பங்கு பெறாதீர்கள். இந்தக் குணம் கொண்டவர்கள் உங்களை சும்மா இருக்க விடமாட்டார்கள். ஏதாவது பேச்சுக் கொடுத்து உங்களை இந்த விவாதத்தில் மாட்டி வைக்கவே முயற்சிப்பார்கள். இம்மாதிரி மனிதர்கள் உங்களை நெருங்கவும் நீங்கள் அனுமதிக் கக்கூடாது. நீங்கள் யாரை மதிக்கின்றீர்களோ அவர்களுடைய கருத்துகளுக்கு பயனுடையதாகவிருக்கும் என்று கருதினால்மட்டுமே நீங்கள் விவாத்தில் ஈடுபட வேண்டும். அப்படிப்பட்ட விவாதம் நிச்சயமாக ஒரு முடிவை உங்களுக்குத் தெளிவுபடுத்துவதாகவே இருக்கும்.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது சபதம் ஏற்கும் நாள்!







முள்ளிவாய்க்காலில் கொத்துக் கொத்தாகக் கொன்று குவிக்கப்பட்ட ஈழத்தமிழர்களின் உயிர அடங்கி ஆறு ஆண்டுகள் கடந்து விட்டன.

மே 17 இயக்கத்தின் சார்பில் உயிர் நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் கூட்டம் மே 17 ஆம் திகதி மெரீனா கடற்கரையில் நடந்து.

பாலச்சந்திரன் படத்துக்கு அருகே நினைவேந்தல் தீபம் ஏற்றப்பட்டது.

ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ, கவிஞர் காசி ஆனந்தன், ஓவியர் மருது, மே 17 இயக்கத்தின் திருமுருகன் காந்தி, நடிகர் நாசர் என்று பல்வேறு தரப்பில் இருந்தும் கூட்டத்துக்கு வந்திருந்தனர். அத்தனை பேர் கைகளிலும் மெழுகுவர்த்தி.

'தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கு... தமிழீழ விடுதலைக்கான பொது வாக்கெடுப்பை நடத்து... காங்கிரசும் பி.ஜே.பி-யும் ஒண்ணு... தமிழன் வாயில் மண்ணு!' என்ற வாசகங்களைத் தாங்கிய அட்டைகளைப் பிடித்தபடி நின்றனர்.

மே 17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி பேசும்போது, "ஈழத்தில் நடந்த இனப்படுகொலையை நினைவில் ஏந்தி, உயிர் நீத்த போராளிகளையும், பொது மக்களையும் போற்றும் வகையில் 6 ஆவது ஆண்டாக அவர்களுக்கு நினைவு அஞ்சலி செலுத்த இங்கே கூடியிருக்கிறோம்.

தமிழீழ மக்களிடையே, ஐக்கிய நாடுகள் சபையின் விதிகளில் குறிப்பிட்டுள்ளபடி சுதந்திரமான பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும். 1948 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை அங்கு நடைபெறும் இனப்படுகொலைகளுக்கு ஒரு சர்வதேச, சுதந்திரமான விசா ரணை நடத்தப்பட வேண்டும். 2009 ஆம் ஆண்டு நடந்த மாபெரும் இனப்படுகொலையில் சம்பந்தப்பட்ட இந்திய அரசு மீதும் இந்திய அதிகாரிகள் மீதும் அதுமட்டுமல்லாமல் குறிப்பாக அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா போன்ற நாடுகள் மீதும் விசாரணை வேண்டும் என்று தமிழர்கள் கோருகிறார்கள்.

ஈழத் தமிழர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். அதுதான் இந்த நினைவேந்தல் நிகழ்வின் கோரிக்கை.

உலகத் தலைவர்களின் சிலைகள் வைக்கப்பட்டுள்ள மெரீனா கடற்கரையான தமிழர் கடற்கரையில் முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னத்தை தமிழக அரசும் பொது மக்களும் சேர்ந்து வைக்க வேண்டும்" என்று சொன்னார்.

அடுத்ததாகப் பேசியவர் நடிகர் நாசர். "மனிதன், நாகரிகம் அடைந்தது முதல் ஒவ்வொரு இனமும் தன்னுடைய அடையாளங்களை, தன்னுடைய கலைகளை, தன்னுடைய சுதந்திரத்தை தக்க வைத்துக்கொள்ள பல கோடி பேர் உயிர்த் தியாகம் செய்திருக்கின்றனர்.

ஆனால், பல வகைகளில் வளர்ச்சி கண்ட இந்த நவயுகத்திலும் ஒரு இனம் கொடூரமாக அழித்தொழிக்கப்பட்டுள்ளது மிகவும் வேதனையானது.

ஆறு ஆண்டுகளுக்கு முன்பு முள்ளிவாய்க்காலில் நடந்த பெரும போரில் இனமானத்தைக் காப்பாற்றிக் கொள்ள தங்கள் இன்னுயிரை தியாகம் செய்தவர்களின் ஞாபகமாக தமிழர் கடலான மெரீனா கடற்கரை ஓரம் கூடியிருக்கிறோம்.

ஆறு ஆண்டுகள் என்ன? 60 ஆண்டுகள் ஆனாலும் அவர்களது ஈகை என்றென்றும் போற்றப்படும்" என்றார் அவர்.

ஓவியர் மருது தனது பேச்சில், "2009 ஆம் ஆண்டு மே 17, 18 ஆம் திகதிகளில் ஒன்றரை இலட்சம் தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

உலகம் முழுவதும் கடந்த காலங்களில் நடந்த இன அழிப்பை சர்வதேச சமூகம் ஒன்றிணைந்து கவனித்தாலும் இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்பட்ட இன்னல்களைப் போக்க சர்வதேச சமூகத்தின் ஒரு பகுதி, நமக்கு எதிரான காரியத்தை செய்து கொண்டிருக்கிறது. அவர்களையும் நம்மை கவனிக்க வைக்கவே இந்த நினைவேந்தல் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

தமிழ் ஈழம் என்ற ஒரே நோக்கத்துக்காக உயிர் தியாகம் செய்த அவர்களின் நோக்கத்தை நிறைவேற்ற நாம் அனைவரும் ஒன்றாக, தமிழர் என்ற நிலையில் கூடியிருக்கிறோம்.

தங்களது ஆசையைச் சொல்வதற்காக தங்களது உயிரை கொடையாகக் கொடுத்துள்ளனர்.

அவர்களது சொல்லையும் செயலையும் அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்ல ஒன்று கூடியிருக்கிறோம்" என்று குறிப்பிட்டார்.

ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ, "ஏழு அணு ஆயுத வல்லரசுகளோடு இணைந்து மன்னிக்க முடியாத குற்றத்தைச் செய்த இந்திய அரசு, இந்த இனத்தை அழிப்பதற்காக சிங்கள கொலைகார அரசுக்கு உதவி செய்தது.

உலகம் இதுவரை கண்டும் கேட்டும் இராத வீரச்சமர் புரிந்த, நான் நெஞ்சார துதிக்கின்ற தலைவர், தமிழ் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் தலைமையில் விடுதலைப் புலிகள், 8 அணு ஆயுத நாடுகளை எதிர்த்து தமிழ மண்ணின் விடுதலைக்காக நின்றார்கள். அவர்கள் சிந்திய ரத்தம் தமிழ் மண்ணை நனைத்திருக்கிறது. அதற்கான நீதி கேடகிறோம். இந்த அலைபாயும் கடலுக்கு அப்பாலே தொப்புள் கொடி உறவுகள் கொல்லப்பட்டார்களே... அந்தப் படுகொலைக்கு நீதி கேட்பதற்காக இனப்படு கொலை செய்தவர்களை கூண்டில்ஏற்றி தண்டிப்பதற்காக சூளுரை மேற் கொள்வதற்காக திரள்கிறோம். இது சபதம் ஏற்கிற நாள்.

சுதந் திர தமிழ் ஈழம் ஒன்று தான் தீர்வு" என்று பேசி முடிதார.

அமைதியாகக் கலைந்தது அந்தக் கூட்டம்.

-யூனியர் விகடன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவில் மாணவி கொலை நடந்தது என்ன?



புங்குடுதீவைச் சேர்ந்த ஆசிரியை நகுலா என்பவரைக் காணவில்லை என உறவினர்கள் தேடுகின்றனர்.

காணவில்லை என்று அவரின் புகைப்படம் பொறிக்கப்பட்டு யாழ்ப்பாணப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படுகிறது. கூடவே மனிதவுரிமைகள் ஆணைக்குழு, பொலிஸ் என முறைப்பாடுகள் செய்யப்படுகின்றன. எந்தப் பயனும் கிடைக்கவில்லை. சில வாரங்கள் கடந்து புங்குடுதீவில் சங்கத்தாகேணி என்ற குறிச்சியில் உள்ள கிணற்றொன்றில்



இருந்து நகுலாவின் உடல் மீட்கப்படுகிறது.

இளம் ஆசிரியை நகுலாவின் மரணம் அதற்கான காரணம் என்ன என்ற கேள்விக்கு இன்றுவரை விடைகிடைக்கவில்லை.

சாரதாம்பாள், தர்சினி, நகுலா என்ற இளம் பெண்களின் கொலைப் பட்டியலில் வித்தியாவும் சேர்ந்து கொண்ட போதுதான் மக்கள் விழிப்படைந்து கொண்டனர்.

13.05.2015 காலை 7.30 மணிக்கு வித்தியா தனது பாடசாலையான புங்குடுதீவு மகா வித்தியாலயத்திற்குச் செல்லத் தயாரானார்.

அண்ணன் நிசாந்தனின் உதவியோடு பாடசாலைக்குச் செல்வது வழமையாயினும் அண்ணனுக்கு அவசர வேலையாயின் வித்தியா துவிச்சக்கரவண்டியில் தனியாகச் சென்று விடுவார்.

துணிச்சலான அந்த மாணவி வித்தியா அன்றைய தினமும் தனியாக துவிச்சக்கரவண்டியில் செல்லவேண்டியதாயிற்று.

காலை 7.30 மணி தனது பெற்றோரிடம் விடைபெற்றுக் கொண்டு வித்தியா துவிச்சக்கரவண்டியில் செல்கிறார். வித்தியாவின் இறுதிவிடை அதுதான் என்பதை அந்தப் பெற்றோர்கள் அறிந்திருக்கவில்லை.

என்ன செய்வது 3 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள புங்குடுதீவு மகா வித்தியாலயத்திற்கு வித்தியா செல்ல வேண்டும். பற்றைகளும் பாழடைந்த வீடுகளும் வெட்டவெளிகளுமே வித்தியா செல்லும் பாதைகளின் அலங்கரிப்புகள்.

காலை 8 மணிக்கெல்லாம் பாடசாலை மாணவர்கள் காலைப் பிரார்த்தனைக்காகக் கூடிவிடுகின்றனர். உயர்தரத்தில் கலைத்துறையில் கல்வி கற்கும் வித்தியா அன்று வந்திருக்கவில்லை. வித்தியா ஏன் வரவில்லை என்ற கேள்விகள் எழுவதற்கு நியாயமில்லை. காலைப் பிரார்த்தனை, உடற்பயிற்சி என்ற கடமைப்பட்டியல்

## பாடசாலைக்குச் சென்ற மாணவி வித்தியா எங்கே?



களில் பாடசாலை சுறுசுறுப்படைந்திருந்தது. வரவு இடாப்பில் பதிவு செய்யும் போதுதான் வித்தியா அப்சன்ட் (Absent) என்ற பதில் ஏனைய மாணவர்களிடம் இருந்து வருகிறது.

இன்று வராத வித்தியா, நாளையல்ல இனி எந்தக் காலத்திலும் வரமாட்டார் என்பதை அந்த வகுப்பாசிரியரும் மாணவர்களும் அறிந்திருக்க நியாயமில்லை.

அன்றைய தினம் பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை நிறைவடைகிறது. பாடசாலைக்கீதம் இசைத்து முடிய மாணவர்கள் வீடு செல்லும் ஆர்வத்தோடு கலைகின்றனர். நாளைய விடியல் வித்தியாவின் இழப்புப் பற்றிய செய்தியாக இருக்கும் என்று எவரும் நினைத்திலர்.

பாடசாலை நிறைவடைந்ததும் வீட்டிற்கு நேராக வந்துவிடுகின்ற வித்தியாவைக் காணவில்லை. வித்தியாவின் வீட்டில் மெதுவாகப் பதற்றம் தொடர்கிறது. பிற்பகல் 3.30 மணி. இன்னமும் வித்தியா வீடு வரவில்லை. தேடுதல் தொடர்கிறது. வித்தியா சென்ற வீதியால் தேடுதல் தொடர்கிறது.

பாடசாலை சென்று விசாரிப்பதற்கு அங்கு எவரும் இல்லை. மாலை 6 மணி தாண்டிவிட்டது. இனிப் பொலிஸில் முறையிடுவதே ஒரே வழி என்ற முடிவோடு வித்தியாவின் பெற்றோர் குறிகட்டுவானில் உள்ள பொலிஸ் நிலையத்திற்குச் செல்கின்றனர்.

இந்தச் சம்பவங்கள் எதையும் நாங்கள் எடுப்பதில்லை. நீங்கள் ஊர்காவற்றுறைப் பொலிஸில் சென்று முறையிடுங்கள் என்று குறிகட்டுவானில் உள்ள பொலிஸ் கூறிவிட வித்தியாவின் உறவுகள் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்திற்குச் செல்கின்றனர்.

ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையம் தீவகம் செய்த பாவத்திற்கு வாய்த்த ஒன்று என்பது பலரின் நினைப்பு. எந்தப் பணியையும் அங்கு ஒழுங்காகச் செய்துவிடமுடியாது.

தீவகத்தின் பெரும் பிரதேசத்தை அந்தப் பொலிஸ் நிலையம் பொறுப்பெடுத்துக் கொண்டதும் இதற்கு ஒரு காரணம் எனலாம்.

பாடசாலைக்குச் சென்ற மாணவி வித்தியாவைக் காணவில்லை என்று பெற்றோர் கூறியபோதும் ஊர்காவற்றுறைப் பொலிஸார் கூறிய பதில் அந்தப் பெற்றோரின் ஏக்கத்தில் விளையாடுவது போல இருந்தது. வித்தியா தனக்குப் பிடித்த பெடியனோடு போயிருப்பார். விடிய வந்து விடுவார். இதுவே அந்தப் பொலிஸாரின் பதில்.

பிள்ளையைக் காணாமல் ஏங்கித் தவித்து நிற்கும் அந்தத் தாய்க்கு இந்த வார்த்தைகள் எப்படி இருந்திருக்கும்.

(தொடரும்)

புருசோத்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்ப்பை வெளிப்படுத்துவது ஜனநாயக உரிமையாகும்

## வடக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

**புங்குடுதீவு மாணவி வித்யாவின் வன்புணர்வுக்கும் படுகொலைக்கும் எதிராக எமது மக்கள் தமது விசனத்தையும் கண்டனத்தையும் வெளிக்காட்டுவது எமது ஜனநாயக உரிமையாகும். நான் கூட என் எண்ணங்களை அறிக்கையாக ஏறகனவே வெளியிட்டுள்ளேன். ஆனால் அமைதியாக நடைபெறும் எமது பேரணிகளையும் கண்டன நிகழவுகளையும் சாட்டாக வைத்துப் பொதுமக்களின ஆதனங்களை அழித்து நொறுக்கிச் சேதம் விளைவிப்பதும் டயர்களை எரிப்பதும் பாரிய குற்றச் செயல்கள் ஆவன என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

மாணவி கொலை குறித்த சோகச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி யார் யார் இந்த ஈனச் செயல்களில் ஈடுபடுகின்றார்கள் என்பதை மக்கள் விழிப்பாய் இருந்து கண்டுபிடிக்க வேண்டும். பல காரணங்களின் நிமித்தம் அன்றும் இன்றும் பொலிஸாருடன் ஒத்துழைப்பது எமது மக்களுக்கு சற்றுச் சிரமமாகவே இருக்கின்றது. வித்தியாவின் வருகை தாமதம் அடைவது பற்றி பொலிஸாரிடம் தாய் தந்தையர் கூறியதும் உடன் நடவடிக்கை எடுத்திருந்தால் இன்றைய இந்தத் துர்ப்பாக்கிய நிலை எழுந்திராது. அதன் பின்னரும் குற்றவாளிகளை கைது செய்வது சம்பந்தமாகத் தாமதத்தையும் அசட்டைத் தன்மையையுங் காட்டுகின்றார்களோ பொலிஸார் என்பதிலும் எமது மக்கள் கோபம் அடைந்துள்ளார்கள்.

ஆனால் இத்தருணத்தில் நாங்கள் பொலஸாருக்கு அனுசரணையாகச் செயற்பட வேண்டுமே ஒழிய அவர்களை எதிரிகள் போன்று கணித்து நடந்து கொள்ளக் கூடாது. பொலிஸாருக்கும் எமக்கும் இடையில் மனஸ்தாபங்களை ஏற்படுத்தி நிலைமையைச் சீர்குலைக்க சில விஷமிகள் கங்கணங் கட்டிக்கொண்டு நிற்கின்றார்கள் என்பது நன்றாகப் புரிகின்றது. அவர்களின் சாகசங்களுக்கு நாங்கள் அடிமையாகப்படாது. சட்டமும் ஒழுங்கும் ஏற்படுத்தப்பட நாங்கள் உறுதுணையாக இருக்க வேண்டுமே ஒளிய உபத்திரவமாய் இருக்கக் கூடாது. இது பற்றி சிரேஷ்ட பொலிஸ் உப அதிபருடன் தொடர்பு கொண்டுள்ளோம். பொலிஸாருடன் எமது மாகாண சபை உறுப்பினர்களையுஞ் சேர்த்து விழிப்புக் குழுக்களில் இருதரப்பாரையும் சம்பந்தப்படுத்தி பங்கேற்க வைக்க நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். மீண்டும் ஒரு அறிக்கையை நாம் வெளியிடுவோம்.

அதே நேரம் நடைபெறும் கண்டனப் பேரணிகள் மக்களால் நடத்தப்படுபவையே ஒழிய எந்த ஒரு கட்சியினாலோ, தொழிற்சங்கத்தினாலோ, நிறுவனத்தினாலோ அல்ல என்பதை நாங்கள் நினைவுறுத்த வேண்டும். அவ்வாறு குறிப்பிட்ட சில அலகுகள், நிறுவனங்கள் போன்றவை தமக்கு இதனூடாகச் சில தனித்துவமான நன்மைகளைப் பெற முயற்சித்தால் அது இறந்த அந்த அபலைப் பெண்ணுக்கு நாம் செய்யுந் துரோகமாகவே கணிக்கப்படும்.

ஆகவே சந்தர்ப்பத்தைப் பாவித்து கட்சி நலம், காடையர் நலம், கரவான நலங் காண விளைபவர்களுக்கு நாங்கள் எச்சரிக்கின்றோம். மனவருத்தத்தில் வாடும் எம்மக்களின் முதுகில் ஏறிச் சவாரி செய்ய எத்தனிக்காதீர்கள். நீங்கள் அடையாளம் காணப்பட்டால் மிகவும் பாரதூரமான விளைவுகளை நீங்கள் எதிர்நோக்க நேரிடும்.

மக்கள் தமது கண்டனங்களையும் எதிர்பார்ப்புக்களையும் அமைதியுடன் இன்று தெரியப்படுத்தி விட்டு நாளைய தினம் எமது நிலைமை வழமைக்குத் திரும்ப உதவ வேண்டும். மக்கள் அமைதிகாக்க வேண்டும். இல்லையேல் எம்மை இராணுவத்தால்தான் கட்டுப்படுத்த முடியும் பொலிசாரால் கூட முடியாது என்று அரசியல் ரீதியாகப் பேசப்படும். இதற்கு எம்மக்கள் இடமளிக்கக் கூடாது.

மிகவும் நிதானத்துடன் எம்மக்கள் நடந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். கடத்தலிலும் வன்புணர்விலும் கொலையிலும் ஈடுபட்ட அனைவருஞ் சட்டத்தின் முன் கொண்டு செலலப்படுவர் என்று நாங்கள் உறுதி அளிக்கின்றோம். அச்செயற்பாடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதையும் கூறிவைக்கின்றோம். (இ-5)

## வன்முறை சம்பவங்களை தூண்டி விடுவதில் சில சக்திகள் முனைப்புடன் செயற்படுகின்றன

### மாவை எம்.பி.கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவிக்கு நீதி கோரி நடைபெற்று வந்த அமைதிப் போராட்டங்களைக் களங்கப்படுத்தும் வகையில் வன்முறைகளைத் தூண்டி விடுவதில் சில சக்திகள் ஈடுபட்டுள்ளமையை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை யாழ்.மாவட்டச் செயலகத்திற்கு முன்னால் புங்குடுதீவு மாணவிக்கு நீதி கோரி அமைதி வழிப் போராட்டத்திற்கு அணிதிரளுமாறு தமிழர் ஆசிரியர் சங்கம், யாழ் வணிகர் கழகம் மற்றும் பல்கலைக்கழக சமூகம், மாணவர், இளைஞர் அமைப்புக்கள் அழைப்பு விடுத்திருந்தன.

பெருமளவில் பலதுறைகளையும் சேர்ந்த அறிஞர்கள் மதகுருமார், ஆசிரியர்கள், மாணவர்கள், பெண்கள் அணிதிரண்டிருந்தனர். முற்பகல் 11 மணியளவில் ஊர்வலங்கள வந்து சேர்ந்தன. அந்த வேளைகளில் அந்த பெருந்திரளான கூட்டத்தின் முன்னால் பலபேர் மோட்டார் சைக்கிள்களில் தீவிரவிசையுடன் சென்றதை அவதானித்து அச்சமடைந்தோம்.

உடன் தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் மற்றும் யாழ். வர்த்தக சங்கத் தலைவரிடம் ஏற்படக்கூடிய விபரீதம் பற்றிக் கலந்துரையாடினோம். இந்த நீதிக்கான போராட்டத்தை முதல்நாளிலும் வன்முறைக் களமாக்க முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தமையையும் ஆராய்ந்தோம். பின் பொறுப்பானவர்களை ஒழுங்கைக் கடைப்பிடிக்கும்படி கோரிக்கை விடுக்கப்பட்டது.

வன்முறை நிகழ்வுகள் இடம்பெறாமல் தடுக்கும் நோக்கிலும் கட்டுப்பாடற்ற நடவடிக்கைகளில் சில சக்திகள் நடந்து கொள்வதை கட்டுப்படுத்தும வகையிலும் அமைதியான போராட்டம் நல்லெண்ணத்துடன் நடைபெற்ற பொழுதும் விரைவாக முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

நீதி கோரி அரசிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோள் ஆவணங்கள் அவசரமாக கையளிக்கப்பட்டது. பின்னர் சில சக்திகள் யாழ்.நீதிமன்றக் கட்டடத்தையும் வழக்கறிஞர்களையும், வாகனங்களையும் தாக்கியும் கல்லெறிந்தும் வன்முறைகளிலீடுபட்டதாக அறிந்தோம். பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்து கலகச் சூழலைக் கட்டுப்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டதாகவும் அறிந்த பொழுது வேதனையடைகின்றோம்.

கைது செய்யப்பட்ட ஈனச் செயல் புரிந்த கொலையாளிகளைத் தங்கள் கைகளில் தர வேண்டுமென்று வன்முறையில் ஈடுபடுவது அந்த மாணவிக்கு அத்தகைய ஈனச்செயல்களுக்கு நீதி கிடைக்காமற் போவதற்கே இச்செயல்கள் இட்டுச் செல்ல முயற்சிக்கப்படுகிறதா? என்ற கேள்வி எழுகின்றது. இந்த நிலையில் வன்முறைச் சம்பவங்களைக் கட்டுபடுத்த பொலிஸார் போதாதென்றும் இராணுவத்தை அழைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டதாகப் பொலிஸ்மா அதிபர் கருதுவதாக அறிந்து, எமது தலைவர் சம்பந்தன், "இராணுவத்தை ஈடுபடுத்த வேண்டாம்" எனக் கோரியுள்ளார். இது தொடர்பாக என்னுடன் தொடர்புகளை எற்படுத்தியுள்ளனர். நானும் இராணுவத்தை மீண்டும் மக்கள் மத்தியில் பாதுகாப்பு எனனும் பெயரில் அழைக்க வேண்டாமெனக் கேட்டுள்ளேன். (இ)

## கடத்திய இலங்கையரை விடுவிக்க கப்பம்கோரும் ஆயுததாரிகள்

நைஜீரியாவில் வைத்து கடத்திச் செல்லப்பட்டுள்ள இலங்கை பொதுமகனை விடுவிக்க பணயப்பணம் கோரப்பட்டுள்ளது.

நைஜீரியாவின் ஒன்டோ என்ற பிரதேசத்தில் வைத்து இந்த வாரத்தில் இலங்கையர் ஒருவர் ஆயுததாரிகளால் கடத்தப்பட்டிருந்தார். இதன்போது அவருக்கு பாதுகாப்புக்காக சென்ற பொலிஸார் ஒருவர் துப்பாக்கிதாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அத்துடன் இலங்கையர் பயணித்த வாகன சாரதியும் காயமடைந்தார். இந்தநிலையில் கடத்தப்பட்டவர், நைஜீரியாவின் இலங்கை தூதரக பணியாளரான கருணார ட்ன என அடையாளம் காணப்ப ட்டுள்ளார்.

இவர், இத்தாலிய நிறுவனம் ஒன்றுக்காக கடந்த 10 வருடங்களாக நைஜீரியாவில் தங்கி பணியாற்றி வருகிறார்.

இந்தநிலையில் கடத்தல்காரர்கள், கருணாரட்னவின் குடும்பத்தினருடன் தொடர்புகொண்ட தாக நைஜீரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்போது கருணாரட்னவை விடுவிக்கவேண்டுமானால் பெருந்தொகை பணத்தை தரவேண்டும் என்று கடத்தல்காரர்கள் கோரியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (3-5)

## பிரிவுத்துயர் பகிர்வு



### விரகத்திப்பிள்ளை நடராஜா

நயினாதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வவுனியா வேப்பங்குளத்தை வசிப்பிடமாகவும்கொண்ட வீரகத்திப் பிள்ளை நடராஜா கடந்த 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று வெள்ளிக்கிழமை நடைபெற்று பின்னர் பி.ப 2 மணியளவில் வவுனியா தடசணாங்குளம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### கந்தையா பரமலிங்கம்

தென்மராட்சி வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவிலடி மீசாலையைப் பிறப்பிடமாகவும் கோட்டம் ரவர் இல-41 சீ, 2/1 பாபர் வீதி ,கொழும்பு-13 ஐ வசிப்பிடமாகவும்கொண்ட கந்தையா பரமலிங்கம் நேற்று முன்தினம் கொழும்பில் காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று வெள்ளிக்கிழமை பி.ப.2 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### முருகேசு கந்தசாமி

வடமராட்சி கிழக்கு அம்பன்-குடத்தனையைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு கந்தசாமி கடந்த 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் மு.ப 10 மணியளவில் தும்பளை கோரியடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி பூபாலபிள்ளை சந்திரபூரணி

(ஓய்வு பெற்ற கணக்குப்பதிவாளர்-மாநகரசபை)

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் கருவேப்புலம் வீதி கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூபாலபிள்ளை சந்திரபூரணி நேற்று முன்தினம் 20.05.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நேற்று வியாழக்கிழமை பி.ப 02 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.



### திருமதி தர்மரட்ணம் மனோன்மணி

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் நெதர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மரட்ணம் மனோன்மணி கடந்த 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை 24ஆம் திகதி மு.ப.10 மணி தொடக்கம் பி.ப 12.30 மணிவரை Crematorium Venlo, Grote Blerickse Bergenweg 30, Venlo, Netherlands என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திக்கும் மாநிலத்திற்கும் டில்லியில் வலுக்கும் முறுகல்

## முதலமைச்சர் வழங்கிய நியமனங்களை இரத்துச் செய்தார் ஆளுநர்

(டில்லி)

**டில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரி வாலுக்கும் ஆளுநருக்கும் இடையிலான மோதல் உச்சக்கட்டத்தை அடைந்துள்ள நிலையில் முதலமைச்சரினால் வழங்க ப்பட்ட நியமனங்களை இரத்து செய்து ஆளுநர் நஜிப் ஜங் உத்தரவு பிறப்பித்து ள்ளதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.**

டில்லி மாநில தலைமைச் செய லரை நியமிப்பது தொடர்பாக, ஆளுநர் நஜிப் ஜங்கிற்கும், முதல் வர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கும் இடையே, மோதல் நிலவி வருகி றது.

இரு தரப்புமே, ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை சந்தித்து முறையிட்ட போதிலும், பிரச்சினை க்கு, இன்னும் தீர்வு ஏற்படவி ல்லை. ஆளுநர் மீது புகார் தெரிவி த்து, பிரதமர் நரேந்திர மோடிக்கு, நேற்று முன்தினம் கடிதம் எழுதிய கெஜ்ரிவால், "ஆளுநர் மூலம், டில் லியை ஆள, மத்திய அரசு முயற்சி க்கிறது. எங்களை சுதந்திரமாக செயற்பட அனுமதிக்க வேண்டும்" என கோரியிருந்தார்.

இந்நிலையில் டில்லி அரசில் பணியாற்றும் பல அதிகாரிகள், மத் திய அரசு பணிக்கு செல்ல போவதாக, தகவல்கள் வெளியானதை, அடுத்து, டில்லி மாநில அரசின் உயர் அதிகா ரிகள் கூட்டத்திற்கு, கெஜ்ரிவால் அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த கூட்டத்தில், அதிகாரிக ளுக்கு, கெஜ்ரிவால் தரப்பிலிருந்து, அறிவுரை வழங்கப்பட்டதாக தெரி கிறது.

இதற்கிடையே, ஆளுநருக்கும், முதல்வருக்கும்இடையிலான மோதல், நேற்று முன்தினம் அடுத்த கட்ட த்தை எட்டியது. "கெஜ்ரிவால் அரசு சார்பில் போடப்பட்ட உத்தரவுகள்அனை த்தும் செல்லாது" என ஆளுநர் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# மணப்பெண்ணுக்கு தாலி கட்டச் சென்ற சுவாமி



திருநெல்வே லியில் நடந்த திரு மணம் ஒன்றில் கலந்து கொண்டு தலைமை தாங்கிய சுப்பிரமணியன் சுவாமிமணப்பெண் ணிற்கு தாலி கட்டச் சென்றதால் பரப ரப்பு ஏற்பட்டுள்ளது.

நெல்லையில் திருமண விழா ஒன றிற்கு தலைமை ஏற்க பாரதிய ஜன தாக் கட்சியின் தலை வர்களில் ஒருவரான சுப்பிரமணி யன் சுவாமியை அழைத்திருந் தார்கள்.

அப்போது தாலியை மணமக னிடம் கொடுக்க சொல்லி அவரிடம் கொடுத்த போது, அவர் மணப்பெ ண்ணிற்கு தாலி கட்டச் சென்ற தால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அருகில் நின்றிருந்த சந்திர லேகா உள்ளிட்டவர்கள் அதிர்ந்து போய அவரைத் தடுத்து, அந்தத் தாலியை மணமகனிடம் கொடு க்கச் சொல்லி யதை அடுத்து அவர் மணமகனிடம தாலியை வழங்கியுள்ளார். (3-5)

பாரதச் செய்தி

# சீனாவை விஞ்சுகிறது இந்தியாவின் வளர்ச்சி

நடப்பு நிதியாண்டில் பொரு ளாதார வளர்ச்சியில் சீனாவை இந்தியா முந்தும் என ஐக்கிய நாடு கள் சபையின் அறிக்கை தெரிவி த்துள்ளது.

நடப்பு 2015 - 2016 நிதியாண் டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 7.6 சதவிகிதமாக இருக் கும் என்றும் அதேசமயம் சீனா வின் வளர்ச்சி 7 சதவிகிதமாக மட்டுமே இருக்கும் என்றும் ஐ.நா ஆய்வில் தெரியவந்துள்ளது.

இந்தியாவின் வளர்ச்சியானது தெற்காசிய பொருளாதார வளர்ச் சிக்கும் உந்து சக்தியாக விளங்கும் என்றும் ஐ.நா ஆய்வறிக்கை தெரி வித்துள்ளது.

உலகளவில் ஒட்டுமொத்தமாக பொருளாதார வளர்ச்சி இந்தா ண்டில் 2.8 சதவிகிதமாக மட்டுமே இருக்க வாய்ப்புள்ளதாக அந்த அறிக்கை தெரிவித்துள்ளது. (3-5)

# மும்பைத் தாக்குதல் சம்பவமானது கடவுளின் ஆசீர்வாதம்-அல்-கொய்தா

2008ஆம் ஆண்டு நவம்பவர் மாதம் 26ஆம் திகதி மும்பையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலானது கடவுளினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாகும் என்று அல்-கொய்தா குறிப்பிட்டுள்ளது.

சர்வதேச தீவிரவாதியான ஒசாமா பின்லேடனின் இல்லத்தில் இருந்து மீட்கப்பட்ட ஆவணங்களை அமெரி க்கா நேற்று முன்தினம் வெளியிட்டது.

இதில் இந்தியாவில் நடத்தப்பட்ட தாக்குதல்களுக்காக அல்-கொய்தா அமைப்பு பெருமையடைந்ததாக தெரிய வந்துள்ளது.

ஒசாமா பின்லேடன் 2011ஆம் ஆண்டு மே மாதம் பாகிஸ்தானின் அபோடாபாத் நகரில் அமெரிக்க படை களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்த நிலையில், ஒசாமாவின் அபோடாபாத் நகர இல்லத்தில் இரு ந்து கைப்பற்றப்பட்ட இரகசிய ஆவ ணங்களை அமெரிக்கா நேற்று முன்தினம் வெளியிட்டது.

150இற்கும் மேற்பட்டவர்கள் பலி யான மும்பை தாக்குதல் மற்றும் 20 10ஆம் ஆண்டு புனேயில் நடந்த தாக் குதல் உள்ளிட்ட விடயங்கள் அந்த ஆவ ணத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அத்துடன், உலகின் பல பாகங்க ளில் தங்கள் அமைப்புகளால் வெற் றிகரமான தாக்குல்கள் மேற்கொள் ளப்பட்டதாகவும் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5)

# மாணவியின் படுகொலைக்கு நீதிகோரி இன்று போராட்டம்

(கிளிநொச்சி)

புங்குடுதீவில் கூட்டு வன்புண ர்விற்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட மாணவி சி.வித்தியா வின் கொலைக்கு காரணமானவர்க ளுக்கு அதியுச்ச தண்டனை வழங் கக் கோரியும் குற்றவாளிகளை சட்ட த்தின் முன் நிறுத்த வலியுறுத்தியும் உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளை யாட்டுக் கழகம், உருத்திரபு ரம் வர்த் தக சங்கத்தினர் ஆகியோர் இணை ந்து இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30மணிக்கு உருத்திரபுரத் திலிரு ந்து வாகன பேரணியாக ஆரம்பி த்து கரடிப்போக்கு சந்தியை சென்ற டைந்து அங்கிருந்து ஊர்வ லமாக கிளிநொச்சி மாவட்ட செயலகத்தி ற்கு செல்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவேவர்த்தகர்கள் அனைவரும் கடைகளைப்பூட்டி பேரணியில் கலந்து கொள்ளுமாறு உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகம் வேண் டுகோள் விடுத்துள்ளது. (2-254)

# ஊர்வலமாக சென்ற மக்களின் பதாகைகளை பறித்தனர் பொலிஸார்

(குருமன்காடு)

வவுனியா பிரதான வீதிகளில் நேற்றைய நின்ற மக்களை பொலி ஸார் விரட்டியடித்ததுடன் சிலர் மீது தாக்குதலையும் மேற்கொண்டுள் ளனர். இதுதொடர்பில் தெரியவருவ தாவது, வவுனியா, முதலாம் குறுக் குத் தெருப் பகுதியில் நின்ற ஆட்டோ சாரதிகள் மற்றும் பொதுமக்களை அங்கிருந்து விரட்டியடித்த பொலி ஸார் வாகனங்களில் சென்றும் பின்னால் துரத்திச் சென்றும் சிலர் மீது தாக்குதல் மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.



இதேவேளை, வவுனியா பிரதேச செயலகத்திற்கு முன்னால் ஆர்ப்பா ட்டத்தில் ஈடுபட்ட மக்களில் பெண் கள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் மன்னார் வீதிவழியாக சென்று வவு னியா நகரம் நோக்கி அமைதியாக ஊர்வலமாக செல்ல முற்பட்ட வேளை குருமன்காடு பகுதியில் வைத்து அவர்களின் பதாகைகளை பறித்து எறிந்த பொலிஸார் அவர்களையும் விரட்டியடித்தனர். இதேவேளை, வவுனியா நீதிமன்றத்தைச் சூழ பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகா ப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (2-250)

# 'கண்டன அறிக்கையும் பிரேரணையும் தீர்வல்ல'

## வவுனியா விவசாயக் கல்லூரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

புங்குடுதீவு மாணவ கூட்டு வன் புணர்வின் பின்னர் படுகொலை செய் யப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்து நேற்றுக் காலை வவுனியா இலங்கை விவசாயக் கல் லூரி மாணவர் சமூகம் ஒன்றிணைந்து கல்லூரி முன்பாக கண் டன ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.



விவசாயக் கல்லூரி மாணவர் கள் ஒன்றிணைந்து, "சட்டம் மக்க ளினை பாதுகாப்பதற்கே குற்றவாளி களை தப்பிக்க விடுவதற்கல்ல, எம் சகோதரியைக் கொன்றவர்களை தாக்கிவிடு, பாடசாலை சீருடையில் கறைபேற்றிய கயவர்களை சட்டத் தின் முன் நிறுத்து, தப்பிக்க விடாதே நீதித்தாயே!, காக்கிச் சட்டையே! கறுப்பு சட்டையே காசுக்கு விலை போகாதே! கண்டன அறிக்கையும் பிரேரணைகளும் தீர்வல்ல... களத் திலே இறங்கு" ஆகிய சுலோகங் களை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி ஈடுபட்டிருந்தனர். (2-250)

# உயிருக்கு ஆபத்தான நிலையில் வீதியில் காணப்பட்ட மின்கம்பிகள் சீராக்கப்படவில்லை

## பொதுமக்கள் விசனம்

வவுனியா யாழ். வீதியில் சோயோ ஒழுங்கை பகுதியில் இரவு நேரம் மின்கம்பி அறுந்து வீடுகளின் முன்னால் வீழ்ந்த நிலையில் மின்சார சபைக்கு அறிவித்தல் வழங்கப்பட்டபோதிலும் மின்சார சபை கருத்தில் கொள்ளவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் இரவுவேளை மின்சாரக்கம்பிகள் அறுந்து வீடுக ளின் முன்னால் வீழ்ந்துள்ளது. சிறுவர்கள் அதிகமாக உள்ளபகுதி யாகையால் அப்பகுதி மக்கள் மின் சாரசபைக்கு சம்பவத்தை தெரியப்ப டுத்தி மின்கம்பிகளை மீள இணை த்து விடுமாறு கோரியுள்ளனர்.

எனினும் வவுனியா மின்சார சபையினர் வட மாகாண மின்சார சபைக்கு அறிவித்தலை வழங்கு மாறு தெரிவித்துள்ளனர்.

இதன்பிரகாரம் அப்பகுதி மக் கள் வட மாகாண மின்சார சபை க்கு அறிவித்தலை வழங்கியபோதி லும் சுமார் 4 மணி நேரம் கடந்தும் மின்சாரக்கம்பிகள் அகற்றப்படவி ல்லை.

இதன்பின்னர் மீண்டும் அப்ப குதி மக்கள் உயிராபத்து கருதிவட மாகாண மின்சார சபைக்கு விரை வாக மின்சாரக்கம்பிகளை அகற்று மாறு கோரியபோதிலும் 9 மணி நேரம் கழித்தும் மின்கம்பிகள் அக ற்றவில்லை.


இதேவேளை அப்பகுதி வீடுக ளுக்கும் மின் இணைப்புகள் துண் டிககப்பட்டிருந்தது எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க கூட்டுப்படைகள் அதிரடி 170ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள் பலி!

(பெய்ரூட்)—

**சிரியாவில் அமெரிக்க கூட்டுப் படைகள் கடந்த 48 மணிநேரம் மேற்கொண்ட அதிரடி தாக்குதல்களில் 170 ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர்.**



சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் தொடங்கி, 60 இற்கும் மேற்பட்ட நாடுகளை சேர்ந்த அமெரிக்க கூட்டுப்படைகள் தொடர்ந்து வான்தாக்குதல்கள் நடத்தி வருகின்றன. ஆனால் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளை நிர்மூலமாக்க முடியவில்லை. இருப்பினும் அமெரிக்க கூட்டுப்படைகள் தொடர்ந்து வான்தாக் குதல்களை தொடுத்து வருகின்றன.

இந்த நிலையில், சிரியாவில் உள்ள ஹசாகே மாகாணத்தில், குர்து இன படைகளுக்கு ஆதரவாக அமெரிக்கக் கூட்டுப்படை போர் விமானங்கள் களம் இறங்கின. அவை கடந்த 48 மணி நேரம் குண்டு மழை பொழிந்துள்ளன.

இந்த தாக்குதல் அந்தப் பகுதியில் பேரழிவை ஏற்படுத்தியுள்ளன. ஏறத்தாழ 170 ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் இந்த தாக்குதல்களில் கொல்லப்பட்டுள்ளனர்.


மொத்தம் 7 வான்தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக அமெரிக்க இராணுவ செய்திக்குறிப்பு கூறுகிறது.

இந்த தாக்குதல்கள் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகளின் தந்திர பிரிவுகளையும் குறி வைத்து நடத்தப்பட்டுள்ளன. இதில் 4 பிரிவுகள் சின்னாபின்னமாகி 7 வாகனங்கள் அழிக்கப்பட்டுள்ளன. 3 நிலைகள் நிர்மூலமாக்கப்பட்டுள்ளன. 2 கவச வாகனங்கள் நாசமாக்கப்பட்டுள்ளன. ஒரு கண்டெய்னரும் அழிக்கப்பட்டுள்ளது

சிரியாவில் 48 மணி நேரத்தில் 170 ஐ.எஸ். ஐ.எஸ்.தீவிரவாதிகள் கொன்று குவிக்கப்பட்டுள்ளதை அங்குள்ள மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பு அமைப்பு உறுதி செய்துள்ளது. (3-5)




## சிரியாவின் பல்மைரா நகரம் வீழ்ந்தது ஐ.எஸ்.ஐ.எஸ்.வசம்



உலகின் மிகப் பழைமையான பாரம்பரிய சிதிலமடைந்த கட்டடங்களைக் கொண்ட சிரியாவின் பல்மைரா நகரத்தை ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பு நேற்று முன்தினம் கைப்பற்றியுள்ளது.

ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளின் கடுமையான போருக்கு ஈடு கொடுக்க முடியாமல், சிரிய இராணுவம் அங்கிருந்து பின்வாங்கி விட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனால் யுனெஸ்கோவால் பாரம்பரிய சின்னங்களாக அறிவிக்கப்பட்டுள்ள ஏராளமான சின்னங்களை, ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் அழித்து விடும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (3-5)

## ஏமன் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தையே தீர்வு

ஏமன் பிரச்சினையை தீர்ப்பதற்கு பேச்சுவார்த்தையே சிறந்த வழி என்று ஜனாதிபதி ஹாதி தெரிவித்துள்ளார்.

ஏமன் அரசியல் இயக்கங்களுடனான மூன்று நாள் பேச்சுவார்த்தைக்குப் பின் நடந்த நிறைவு மாநாட்டில் உரையாற்றிய போதே ஹாதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு பேச்சுவார்த்தையே சிறந்த வழி என்றும், ஏமன் பிரச்சினை குறித்து ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை சரிவர செயற்படுத்துவதே தற்போதைய நிலையில் முக்கியம் வாய்ந்தது எனவும் அவர் கூறியுள்ளார்.

சவுதி அரேபியத் தலைநகரில் நடந்த மூன்று நாள் பேச்சுவார்த்தையின் முடிவில் ஏற்படுத்தப்பட்டுள்ள றியாத் பிரகடனத்தை முறையாக செயற்படுத்துவது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஏமனின் துணை ஜனாதிபதி, வளை குடா பாதுகாப்பு கவுன்சிலின் பொதுச்செயலர் மற்றும் ஏமனிற்கான ஐ.நா தூதர் உள்ளிட்டோரும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர். (3-5)

## அகதிகளை தற்காலிகமாக ஏற்பதற்கு மலேசியா - இந்தோனேசியா ஒப்புதல்

பிற நாடுகளுக்குப் புகலிடம் தேடி வந்து, அந்தமான் கடலில் தத்தளித்து வரும் சுமார் 7ஆயிரம் அகதிகளை தற்காலிகமாக ஏற்க மலேசியாவும், இந்தோனேசியாவும் ஒப்புதல் அளித்துள்ளன.

இதுகுறித்து மலேசிய வெளியுறவுத் துறை அமைச்சர் அனீஃபா அமன் நேற்று முன்தினம் கூறியதாவது,



அகதிகளுக்கு தற்காலிகமாக புகலிடம் அளிக்க மலேசியாவும், இந்தோனேசியாவும் சம்மதம் தெரிவித்துள்ளன.

இன்னும் ஓர் ஆண்டுக்குள் அவர்கள் சொந்த நாடுகளில் மீள் குடியமர்த்தப்படுவதற்கான ஏற்பாடுகளை சர்வதேச நாடுகள் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் அகதிகளை ஏற்க சம்மதித்துள்ளோம் என்றார் அவர்.

முன்னதாக, அகதிகள் கடத்தப்படும் விவகாரம் தொடர்பாக இந்தோனேசிய, மலேசிய வெளியுறவுத் துறை அமைச்சர்களிடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து, இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

புத்த மதத்தினரை பெரும்பான்மையாகக் கொண்ட மியன்மாரில், மதவாதிகளின் தாக்குதலுக்கு அஞ்சி ரோஹின்சியா முஸ்லிம்களும், பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடான வங்கதேசத்திலிருந்து ஏராளமானோரும் மலேசியா, தாய்லாந்து நாடுகளில் தஞ்சம் கேட்டு கடல் வழியாக சட்டவிரோத முறையில் பயணம் செய்து வருகின்றனர்.

அவர்களை கடத்திக் கொண்டு வரும் கும்பல்களுக்கு எதிராக அந்த நாடுகள் நடவடிக்கை எடுக்கத் தொடங்கியதையொட்டி, நடுக் கடலில் ஆயிரக்கணக்கான அகதிகளைத் தவிக்க விட்டு கடத்தல்காரர்கள் தப்பிச் சென்றனர்.

புற்றீசல் போல் அகதிகள் வருவதாகக் கூறி, அவர்களை ஏற்க மலேசியா, இந்தோனேசிய நாடுகள் மறுத்தன.

இந்த நிலையில், சர்வதேச நாடுகளின் நெருக்கடி காரணமாக, அவர்களை ஏற்க இரு நாடுகளும் சம்மதிதுள்ளதாகக் கூறப்படுகிறது. (3-5)

## தினசரி 6 கோடி பெறுகிறது ஐ.எஸ்.

ஆள் கடத்தல், வரி வசூல் ஆகியவற்றின் மூலம் மட்டும் இஸ்லாமிய தேச (ஐ.எஸ்.ஐ.எஸ்.) பயங்கரவாத அமைப்பு நாளொன்றுக்கு 10 இலட்சம் டொலர்கள் (சுமார் 6.38 கோடி ரூ.) வருவாய் ஈட்டுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து அமெரிக்கப் பத்திரிகையொன்றில் வெளியான தகவல்: ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள், தாங்கள் கைப்பற்றிய பகுதிகளில் உள்ள எண்ணெய்க் கிணறுகளிலுள்ள எண்ணெயை விற்று தங்களுக்குத் தேவையான பணத்தை ஈட்டி வருகின்றனர்.

சர்வதேச கச்சா எண்ணெய் விலை இறக்கத்தால் எண்ணெய் மூலம் கிடைக்கும் வருவாய் குறைந்தாலும், ஆள் கடத்தல், வரி வசூல் மூலம் தங்களது செலவுகளை அவர்கள் ஈடுசெய்து வருகின்றனர்.

ஆள் கடத்தல் மூலமும், வரி வசூல் மூலமும் நாளொன்றுக்கு 10 இலட்சம் டொலர்கள் அவர்களுக்குக் கிடைக்கிறது என்று அந்த பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாம்புகளைப் போல விவேகத்துடனும், புறாக்களைப் போல கபடமில்லாமலும் வாழுங்கள். – புனித பைபிள்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# இளைஞர்களை வழிப்படுத்தாத தமிழ் அரசியல் தலைமைகள்

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலை தொடர்பில் நடந்து வரும் ஆர்ப்பாட்டங்கள், கண்டனப் பேரணிகள் யாழ்.குடாநாடு என்ற எல்லை தாண்டி வடக்குக் கிழக்கு மாகாணங்களிலும் வேகமாக முன்னெடுக்கப்படுகிறது.

ஆர்ப்பாட்டம் என்பது சமூக நீதிக்கானது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்களின் கோரிக்கை வித்தியாவுக்கு நடந்த கொடுமைத்தனம் இனிமேல் எங்கும் இடம்பெறலாகாது. இதனை உறுதி செய்வதற்காக குற்றவாளிகருக்கு உடனடியாக மரணதண்டனை விதிக்கவேண்டும் என்பதாகும்.

எனவே இது தொடர்பில் அரசும் நீதிபரிபாலனமும் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். உரிய நடவடிக்கை எடுப்பதன் மூலமாகவே ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் போன்றவற்றை தடுக்கமுடியும்.

இதேநேரம் யாழ்ப்பாண நகர மையத்தில் நேற்று முன்தினம் 20ஆம் திகதி நடந்த ஆர்ப்பாட்டங்களின் போது இளைஞர்கள் சிலர் நடந்து கொண்ட முறை மிகப்பெரிய அதிர்ச்சியைத் தந்தது.

இளைஞர்களின் ஆர்ப்பாட்டமும் கண்டனப் பேரணிகளும் ஆரம்ப கட்டங்களில் மனதை உருக்கக் கூடியதாக இருந்தது என்பதை எவரும் மறுத்து விடமுடியாது. எனினும் நேரம் செல்லச் செல்ல ஆர்ப்பாட்டத்தில் செருகிக் கொண்ட இளைஞர்கள் சிலர் பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டனர்.

இத்தகையதொரு பொறுப்பற்ற செயல் என்பது எங்கள் தமிழ் மண்ணில் இளைஞர்களை வழிப்படுத்துவதற்கான செயற்றிட்டங்கள் இல்லை என்பதை உணர்த்தி நின்றது.

அதிலும் குறிப்பாக, அரசியல் ரீதியாக ஜனநாயகப் போராட்டங்கள் பற்றிய விளக்கமின்மை எங்கள் இளைஞர்களிடம் அதீதமாக இருந்தது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களில் ஒரு பகுதியினரிடம் இனம் புரியாத கோபம் காணப்பட்டது. இந்தக் கோபம் எதற்கானது என்பது தெரியவில்லை.

இவற்றை எல்லாம் பார்க்கும் போது தமிழ் அரசியல் தலைமைகள் தங்களின் அரசியல் பணியை செய்யவில்லை என்பது உறுதியாகிறது. தமிழ் அரசியல் கட்சி சார்ந்து இளைஞர் அணிகள் உருவாக்கம் பெற்றிருந்தால் எழுந்தமானமான கலகங்கள் ஏற்படுவதற்கு இடம்இருந்திருக்காது.

ஆக, தமிழ் அரசியல் தலைமைகள் எங்கள் இளைஞர்களை வழிப்படுத்துவதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்பது இங்கு தெளிவாகிறது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் போது பொதுச் சொத்துக்களை சேதப்படுத்தாத ஜனநாயகப் பண்பை கடைப்பிடிக்கவேண்டும். ஆனால் இங்கு வீதிகளில் ரயர் போட்டு எரிக்கப்பட்டன. இதனால் புதிதாக அமைக்கப்பட்ட வீதிகள் சேதம் அடைகின்ற வாய்ப்புகள் உண்டு என்பதை உணராமல் இருப்பது வேதனைக்குரியது.

எதுவாயினும் ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் தொடர்பில் இறுக்கமான போக்கை எவரும் மேற்கொள்ளக் கூடாது என்பது இங்கு கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

ஆர்ப்பாட்டத்தைக் குலைக்கும் நோக்கில் இளைஞர்கள் சிலர் யாழ்.நீதிமன்றத்தின் மீது தாக்குதல் நடத்தினராயினும் தாக்குதலில் எந்தவிதமான தொடர்பும் இல்லாத இளைஞர்கள் கைதாகக்கூடிய வாய்ப்புகள் நிறையவே இருந்தன என்பதால் இவர்கள் தொடர்பில் ஒரு சுமுகமான அணுகு முறையைப் பிரயோகிப்பது நல்லது.

# அக்கிரமங்களுக்கு எதிராக போராடுவதை வரவேற்கிறேன்

## மனோ கணேசன் தெரிவிப்பு

கொடிய இனவாதிகளால் எழுதப்பட்ட கிரிஷாந்தி, இசைப்பிரியா ஆகியோரின் கொடூர வரலாறுகளை எதிர்த்து போராடி களைத்து போய்விட்டு, இன்று உள்ளூர்வாசிகளால் புங்குடுதீவின் 18 வயது மாணவி சிவலோகநாதன் வித்தியா கடத்தப்பட்டு, பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு, மிகவும் கொடூரமாக படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை அறியும்போது ஒரு தமிழனாக வெட்கித் தலை கு னிகின்றேன். அதேவேளை இத்தகைய சமூக அக்கிரமங்களுக்கு எதிராக வடக்கில் இளைய தலைமுறை இன்று தெருவில் இறங்கி போராடுவதை வரவேற்கின்றேன் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவரும், தேசிய நிறைவேற்று சபை தலைவருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் சிங்கள, தமிழ் மொழிகளில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் தெரிவிக்கையில்,

இந்த கடத்தல் மற்றும் அதன் பிறகு நடந்ததாக சொல்லப்படும் சம்பவங்கள் எழுத்தில் எழுத முடியாத கொடூரமானவை. இந்த அக்கிரமக்காரர்களை மன்னிக்க முடியாது. இன்று ஒன்பது பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. கொழும்புக்கு தப்பி வந்த ஒருவர் வெள்ளவத்தை பொலிஸ நிலையத்தில் தடுத்து வைக்கப்பட் டுள்ளார். இனி இந்த வழக்கு கால தாமதம இல்லாமல் விரைவில் விசாரிக்கப்பட்டு, கொலையாளிகளுக்கு அதிகபட்ச உச்ச கட்ட தண்டனை வழங்கப்பட வேண்டும்.

கடந்த மகிந்த ஆட்சிகாலத்தில் தமிழ் மாகாணங்களில், குறிப்பாக வடக்கில் இளைஞர் மத்தியில் போதை வஸ்து, மதுபாவனை, பாலியல் நடவடிக்கைகள் ஆகியவை திட்டமிட்டு தூண்டி விடப்பட்டன. ஒரு இனத்தை அழித்திட, அந்த இனத்தின் மொழி, கலை, கலாசாரம், பண்பாடு, வர லாறு என்பவற்றை திட்டமிடப்பட்டு அழிப்பது என்ற உலகெங்கும் ஆதிக்கவாதிகளால் கடைப்பிடிக்கப்படும் அந்த கொள்கை இலங்கையிலும் கடைப் பிடிக்கப்பட்டது. அதை மகிந்த கூட்டம், கொழும்பில் அலரி மாளிகையில் திட்டமிட்டு, வடக்குக்கு கொண்டு சென்று அங்கே தன் அடியாட்கள் மூலமாக அமுல் செய்தது.

இன்று மகிந்த ஆட்சி இல்லை. மைத்திரி ஆட்சி வந்து விட்டது. ஆனாலும், இன்னமும் மகிந்த மீண்டும் வருவார் என எண்ணி வடக்கின் பொலிஸ் மற்றும் அதிகார வட்டாரம் மெத்தனமாக இருக்கின்றதோ என்ற சந்தேகம் வருகிறது. இது முதல் சம்பவம் அல்ல. கடந்த சில காலமாகவே இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்து ஆங்காங்கே தமிழர்கள் மத்தியில் நடக்கின்றன. குறிப்பாக பாடசாலை செல்லும் தமிழ் மாணவிகள் குறி வைக்கப்படுகிறார்கள்.

இன்று இந்த அராஜகங்களை எதிர்த்து நமது இளைஞர்கள் நேரடியாக தெருவில் இறங்கி போராட முன்வந்துள்ளார்கள். இந்த எதிர்ப்பு இயக்கம் இது போன்ற நிகழ்வுகள் இனி நிகழா வண்ணம் தடைபோடும் என நம்புகிறேன். எனினும் கொடிய இனவாதிகளால் எழுதப்பட்ட கிரிஷாந்தி, இசைப்பிரியா ஆகியோரின் கொடூர வரலாறுகளை எதிர்த்து போராடி களைத்து போயவிட்ட நிலையில், இன்று உள்ளூர் வாசிகளால் இந்த மாணவி கடத்தப்பட்டு, வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத முறையில் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு, மிகவும் கொடூரமாக படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை அறியும்போது ஒரு தமிழனாக நிச்சயமாக வெட்கி தலை குனிகிறேன். இதன்மூலம் எமது இனத்தை திட்டமிட்டு அழிக்க முயலும் இனவாதிகளை எதிர்க்கும் நமது தார்மீக சக்தி பலவீனமடைகிறது என்ற செய்தியை போராடும் இளைஞர்கள் முன்னெடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# சைவசமய அறிவுப்போட்டி

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்தும் சைவமய அறிவுப் போட்டி மற்றும் கலாசார போட்டிகள் யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

இதில் நாளை 23-ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கோலப் போட்டி மற்றும் மாலை கட்டுதலும்,

நாளை மறுதினம் 24-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சைவசமய அறிவுப் போட்டி தரம் 4,5,8 மற்றும் 9 இற்கு காலை 9 மணிக்கும், தரம் 6,7,10,11 இற்கு 11 மணிக்கும், பண்ணிசைப்போட்டி எதிர் வரும் 26-ம் திகதி செவ்வாய்க்கிழமை பிரிவு 01,02 இற்கும் 27-ம் திகதி புதன் கிழமை மாலை 3 மணிக்கு பிரிவு 3,4 இற்கும், பேச்சுப் போட்டி எதிர்வரும் 30-ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கும் இடம்பெறவுள்ளன. ஒரு போட்டியாளர் சைவசமய அறிவுப் போட்டியிலும், ஏனைய போட்டிகளில், ஏதாவது இரண்டில் மட்டும் பங்குபற்ற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## இஸ்லாம் ஆன்மிக சிந்தனை

### தர்மம் மனிதனின் கடமை

★ பிறப்பிலிருந்து இறப்பு வரையில் நல்லறிவை நாடிச் செல்லுங்கள்.

★ அறிவைத் தேடி அடைந்தவர்கள் இரு பரிசுகளைப் பெறுகின்றார்கள். ஒன்று அறிவை நாடியதற்காக மற்றொன்று அதை அடைந்ததற்காக.

★ நண்பர்களுக்கும், அறிமுகமில்லாதவர்களுக்கும் ஸலாம் சொல்லுங்கள்.

★ உங்கள் செயல்கள் உங்களிடமே திருப்பி அனுப்பப்படும். அப்போது நீங்கள் பெறுகின்ற தண்டனை, நீங்களே வரவழைத்துக் கொண்டதாகும்.

★ உங்களை நீங்களே பெருமைப் படுத்திக் கொள்ள வேண்டாம்.

★ உங்களை விடச் செல்வத்திலும், அழகிலும் சிறந்தவர்களைக் காணும்போது, அவற்றில் உங்களை விடத் தாழ்ந்தவர்களையும் எண்ணிப் பாருங்கள்.

★ அறிவைத் தேடுகின்ற முயற்சியைத் தடுத்து நிறுத்துவது தீயொழுக்கமாகும்.

★ அறியாமையை விடக் கொடிய வறுமை கிடையாது.

★ தர்மம் செய்வது ஒவ்வொரு மனிதனின் கடமையாகும்.

# வித்தியாவிற்காக நீதிகோரி சிங்கள மக்களும் போராட்டம்

புங்குடுதீவு மாணவி வித்தியாவிற்காக முழு தமிழினமும் கொந்தளித்துக் கொண்டிருக்கும் நிலையில், இந்த கொடுமைக்கெதிராக இனம், மதம், மொழி கடந்து சிங்கள மக்களும் கிளர்ந்தெழுந்துள்ளனர். நேற்று புத்தளத்தில் திடீரென புத்தளமக்கள் நீதிகோரி போராட்டம் நடத்தினார்கள்.

புத்தளம் நகரில் அமைதியான முறையில் இந்த போராட்டத்தை முன்னெடுத்தனர். இதில் தமிழ், சிங்கள மக்கள் பலர் கலந்து கொண்டிருந்தனர். இந்த போராட்ட களத்தில் தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் பலரும் குழுமியிருந்ததை அவதானிக்க முடிந்தது. (இ-5)

# சந்தேக நபர்களில் இருவர் சான்று பெற்ற பாடசாலையில்

யாழ்.நீதிமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலவரத்தில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 129 பேரில் 2 பேரை சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் சேர்க்குமாறு யாழ்ப்பாண நீதிமன்ற நீதிபதி பொ.சிவகுமார் உத்தர விட்டுள்ளார்.

மேற்படி சம்பவத்தில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களில் 2பேர் 15 மற்றும் 16 வயதினை உடையவர்க்ள் என்ற காரணத்தால் இவர்களை விளக்கமறியலில் வைக்காது சான்றுபெற்ற பாடசாலையில் சேர்க்க உத்தரவிடப்பட்டுள்ளது. (இ-9)

# ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

## பிராரப்த கர்மாவும் சஞ்சித கர்மாவும்



சில கர்மங்களை மாற்றலாம். சிலவற்றை மாற்ற முடியாது.

நீங்கள் இனிப்பு வகை தயாரிக்கும் போது சீனியோ நெய்யோ குறைவாக இருந்தால் இன்னும் சற்றுச் சேர்த்துக் கொள்ளலாம். அதில் வேறு ஏதாவது பொருள் கூடிப் போனால் சரிப்படுத்திவிடலாம். ஆனால் அதைச் சமைத்தபிறகு திரும்ப பழைய நிலைக்கு மாற்ற முடியாது.

பால் இனிப்பான தயிராகவோ, புளிப்பான தயிராகவோ மாறலாம். புளிப்பான தயிரை இனிப்பான தயிராக மாற்ற முடியும். ஆனால் இவற்றுள் எதையுமே பாலாகத் திரும்ப மாற்ற முடியாது.

சஞ்சித கர்மம் என்பதை ஆன்மீகப் பயிற்சிகளால் மாற்ற முடியும். சரிப்படுத்த முடியும். பிராரப்த கர்மம் என்பதை மாற்ற முடியாது. எதிர்மறையான எல்லாக் கர்மங்களின் விதைகளும் முளை விடுவதற்கு முன்பாகவே அவற்றைச் சத்சங்கம் எரித்துவிடுகிறது.

குருவுடன் இருப்பது என்பது குழுவாகச் சிலர்ஒன்று சேர்ந்து ஞானத்தைப் போற்றிக் கொண்டாடுவதையும் குறிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிப் போட்டிக்கு செல்லப்போவது யார்? சென்னை- பெங்களூர் இன்று பலப்பரீட்சை



ஐபிஎல் தொடரின் 2 ஆவது தகுதிச் சுற்றுப் போட்டியில் சென்னை- பெங்களூர் அணிகள் இன்று மோதுகின்றன.

இந்தப் போட்டி சென்னை அணித் தலைவர் டோனியின் சொந்த ஊரான ராஞ்சியில் நடப்பதால் ரசிகர்களிடையே அதிக எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

முதல் தகுதிச்சுற்றில் சென்னை அணி மும்பையை எதிர்கொண்டது. இதில் சிறப்பான ஆட்டத்தை சென்னை அணி வெளிப்படுத்தினாலும், எதிர்பாராத விதமாக தோல்வியைத் தழுவியது.

இருப்பினும் சென்னை அணிக்கு மற்றொரு வாய்ப்பிருக்கிறது. இந்த வாய்ப்பை தவறவிடாமல் பெங்களூரை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேற சென்னை அணி முனைப்புடன் இருக்கிறது.

சென்னை அணியை பொறுத்தவரை மும்பை அணிக்கு எதிரான கடைசி போட்டியில் பந்துவீச்சில் சொதப்பியது. இதனால் மும்பை அணி இமாலய ஓட்டங்களை குவித்து சென்னை அணிக்கு நெருக்கடி கொடுத்தது.

இதை சரி செய்யும் பட்சத்தில் வெற்றி வாய்ப்பு சென்னை அணிக்கு இருக்கிறது. மேலும் சொந்த ஊரில் டோனி அசத்தினால் சிறப்பாக இருக்கும். அதே போல ரெய்னா தனது அதிரடி ஆட்டத்தை காட்ட வேண்டும்.

பெங்களூர் அணியை பொறுத்தவரை துடுப்பாட்ட வரிசை சிறப்பாக இருக்கிறது. விராட் கோலி, கிறிஸ் கெய்ல், டிவில்லியர்ஸ், மந்தீப் சிங் ஆகியோர்கள் சென்னை அணியை புரட்டியெடுக்க வாய்ப்பிருக்கிறது.

யுவராஜ்க்கு அடுத்தபடியாக அதிக ஏலத்துக்கு எடுக்கப்பட்ட தினேஷ் கார்த்திக் தொடர்ந்து சொதப்பி வருகிறார்.

இருப்பினும் இது அந்த அணியை பாதிக்கவில்லை.

பந்துவீச்சிலும் பெங்களூர் அணி சிறப்பாக இருப்பது கூடுதல் பலம். இதனால் சென்னை அணிக்கு பெங்களூர் சவாலாக இருக்கும்.

கோலி தலைமையிலான பெங்களூர் அணியும், டோனி தலைமையிலான சென்னை அணியும் மோதிக கொள்ளும் இந்த ஆட்டத்தை பார்க்க ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர். (க)

## மனைவியை பிரிந்து இருக்க முடியலயே உருகும் புதுமாப்பிள்ளை சுரேஸ் ரெய்னா

Suresh Raina

Can't wait to see u my love



சென்னை அணியின் புதுமாப்பிள்ளை ரெய்னா, தனது மனைவி பிரியங்கா சவுத்ரியை பிரிந்து இருக்க முடியவில்லை என டுவிட்டரில் தெரிவித்துள்ளார். தற்போது ஐ.பி.எல் தொடரில் சென்னை அணிக்காக விளையாடிவரும் இந்திய வீரர் ரெய்னாவுக்கு கடந்த மாதம் ஏப்ரல் 3ஆம் திகதி திருமணம் நடந்தது.

திருமணமான கையோடு புது மாப்பிள்ளை ரெய்னா, ஐ.பி.எல் போட்டிக்கு விளையாட வந்துவிட்டார்.

இந்நிலையில் மனைவியின் பிரிவை தாங்க முடியாமல் நேற்று முன்தினம் பிரியங்கா சவுத்ரி படத்தை டுவிட்டரில் பதிவேற்றி "Cant wait to see u my love" என்று கூறியுள்ளார்.

இதைத் தொடர்ந்து ரெய்னா என்னமா ரொமான்ஸ் பண்ணுகிறார் என்று ஒருவர் கருத்து தெரிவிக்க, ரசிகை ஒருவர் நான் இன்னும் அழுது கொண்டிருக்கிறேன ரெய்னா, என சரமாரியாக தங்களது கருத்துக்களை ரசிகர்கள் தெரிவித்து வருகின்றனர. (க)

## கிரிக்கெட் விளையாடுவது புதிய வாழ்வின் தொடக்கம்

### மொகமது ஆமிர்



இங்கிலாந்துக்கு எதிரான தொடரின் போது ஸ்பாட்-பிக்சிங்கில் ஈடுபட்டதால் கடந்த 2010ஆம் ஆண்டில் இருந்து சர்வதேச போட்டியில் விளையாடாத பாகிஸ்தானின் வேகப்பந்து வீச்சாளரின் தடைக்காலம் இந்த வருடத்தின் இறுதியில் முடிவடைகிறது. அதன்பின் சர்வதேச அணியில் இடம்பிடிப்பது புதிய வாழ்க்கையை தொடக்கமாகும் என்று தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மொகமது ஆமீர் கூறுகையில், "இங்கிலாந்து எதிராக ஸ்பாட்-பிக்சில் ஈடுபட்ட விவாகரத்தில் தடைபெற்ற பின்னர் பல்வேறு கட்டங்களில் கிரிக்கெட்டில் இருந்து விலகி விடலாமா? என்று நினைத்தேன், ஆனால், உள்ளூர் போட்டிகளில் ரசிகர்கள் கொடுத்த அதீத ஆதரவால் மீண்டும் பாகிஸ்தான் அணிக்காக விளையாட வேண்டும் என்று என்னை ஊக்குவித்தது.

மீண்டும் கிரிக்கெட் விளையாடுவது எனது புதிய வாழ்வின் தொடக்கம் என்பதை நான் கட்டாயம் ஒத்துக்கொள்ள வேண்டும். சர்வதேச அணியில் வாய்ப்பு பெற நான் அதிக அளவு முயற்சி செய்வேன். பாகிஸ்தான் அணிக்காக விளையாட தயாராக இருக்கிறேன். பாகிஸ்தான் அணிக்கு திரும்பிய பிறகு ரசிகர்கள் கொடுக்கும் ஆதரவை பார்ப்பதற்காக காத்துக்கொண்டிருக்கிறேன். அது உண்மையிலேயே என்னை ஊக்குவிப்பதாக இருக்கும். இவ்வாறு அவர் கூறினார். தடைபெற்ற காலத்தின்போது ஆமீருக்கு 18 வயதுதான். அப்போது உலகின் தலைசிறந்த வேகப்பந்து வீச்சாளராக வளர்ந்து வந்த அவர் 14 டெஸ்ட் போட்டிகளில் 51 விக்கெட்டுகள் வீழ்த்தியிருந்தார். (க)

SPORTS விளையாட்டுச் செய்திகள்

## ஆஸி. பட்மின்டன் சாய்னா பங்கேற்பு



அவுஸ்திரேலியாவில் எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை அவுஸ்திரேலிய ஓபன் சுப்பர்சீரிஸ் பட்மின்டன் போட்டி நடைபெறுகிறது. இதில் இந்திய வீராங்கனைகள் சாய்னா, பி.வி. சிந்து உட்பட பலர் கலந்து கொள்கிறார்கள்.

இரண்டாம் தர வரிசையில் இருக்கும் சாய்னா, உலகச் சம்பியன் பட்மின்டன் போட்டியில் ஸ்பெயினைச் சேர்ந்த கரோலினா மரினை வீழ்த்தினார்.

இதன் மூலம் உலகச் சம்பியன் பட்டத்தை வெல்ல வழிவகுத்தது. இந்த முறை சாய்னா யாரை எதிர்த்து விளையாடுவார் என்று இது வரை அறிவிக்கப்படவில்லை.

11ஆம் நிலை வீராங்கனை பி.வி. சிந்து முன்னாள் உலகச் சம்பியன், சீனாவைச் சேர்ந்த யிஹன் வாங்கை எதிர்கொள்கிறார். இதனால் முதல் சுற்று சிந்துவுக்கு கடும் சவாலாக இருக்கும்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் 4ஆம் நிலை வீரரான கிடாம்பி ஸ்ரீகாந்த், தனிஸ் ஹான்ஸ் கிரிஸ்டியனை எதிர்கொள்கிறார்.

பிரணாய் சீனாவில் டியான் ஹூவெய்-ஐ எதிர்கொள்கிறார். காஷ்யப் சீனா வில்ன வாங் ஷெங் மிண்ங்கை எதிர்கொள்கிறார். (க)

## இந்திய அணிக்கு திரும்ப தகுதியானவர் ஹர்பஜன்

### கவாஸ்கர்



இந்திய டெஸ்ட் அணியில் 2 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் ஹர்பஜனசிங் இடம்பிடித்து இருப்பதற்கு முன்னாள் கப்டன் கவாஸ்கர் வரவேற்பு அளித்துள்ளார். இது குறித்து கவாஸ்கர் கருத்து தெரிவிக்கையில்.

'சீனியர். ஜூனியர் என்று பார்க்காமல் நடப்பு பார்மில் இருக்கும் வீரர்களுக்கு இந்திய அணியில் இடம் கிடைக்கும் என்பதை ஹர்பஜன் சிங் தேர்வின் மூலம் தேர்வாளர்கள் பறைசாற்றி இருக்கிறார்கள்.

சிறப்பாக செயற்படும் நபருக்கு அணியில் இடம் உண்டு என்று நிரூபித்து இருக்கிறார்கள். இந்திய அணியில் இடம் பிடிக்க ஹர்பஜன் சிங் தகுதியானவர். டெஸ்ட் மற்றும் ஒருநாள் சர்வதேச போட்டிகளில் மொத்தம் 700 விக்கெட்டுகளுக்கு மேல் வீழ்த்தி இருக்கும் ஹர்பஜன்சிங் தனது திறமையை நிரூபித்து காட்ட வேண்டிய அவசியமில்லை. விக்கெட்டுகள் வீழ்த்துவது மட்டுமின்றி ஹர்பஜன்சிங்கின் பந்து வீச்சும் நல்ல நிலையில் உள்ளது' என்றார். (க)

## தனது ஆட்டநாயகன் விருதைக்கூட மன்தீப்புக்கு வழங்கிய வில்லியர்ஸ்

தனக்கு வழங்கப்பட்ட ஆட்டநாயகன் விருதை மன்தீப்புக்கு வழங்கினார் டிவில்லியர்ஸ். ராஜஸ்தான் அணிக்கெதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியில் பெங்களூர் அணி 2 விக்கெட்டுக்கு 46 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்தபோது ஜோடி சேர்ந்த டிவில்லியர்ஸ் மன்தீப்சிங் அதிரடியாக விளையாடினர். அவர்கள் இருவரும் 113 ஓட்டங்கள் சேர்த்தனர். இதனால் பெங்களூர் 180 ஓட்டங்கள் குவித்தது.

டிவில்லியர்ஸ் 66 ஓட்டங்களும் (38 பந்து, 4 பவுண்டரி, 4 சிக்சர்), மன்தீப்சிங் 54 ஓட்டங்களும் (34 பந்து, 7 பவுண்டரி, 2 சிக்சர்) எடுத்தனர். ஆட்டநாயகன் விருது டிவில்லியர்சுக்கு வழங்கப்பட்டது. அந்த விருதை அவர் மன்தீப்சிங்குக்கு வழங்கினார்.

இதுகுறித்து அவர் கூறுகையில்.



மன்தீப்சிங் ஆட்டம் ஆட்டநாயகன் விருதுக்கு உரியது. அந்த விருது அவருக்கு தான் செல்ல வேண்டும். அடுத்த போட்டியில் சென்னையை எதிர்கொள்கிறோம். அவர்களுக்கு எதிராக எப்படி விளையாட வேண்டும் என்பதை அறிவோம் என்றார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில்...

எனினும் வவுனியா வர்த்தகர் சங்கத்தின் அழைப்பின் பேரில் நேற்று வியாழனன்று வவுனியாவில் கடையடைப்பு மேற்கொள்ளப்பட்டிருந்ததனால் நகர வீதிகள் வெறிச்சோடி இருந்தன. ஆயினும் அரச பேருந்துகள் சேவையில் ஈடுபட்டிருந்ததைக் காண முடிந்தது.

கடையடைப்பு குறித்து நேற்றுமுன்தினம் புதன்கிழமை வர்த்தகர் சங்கத்தின் சார்பில் ஒலிபெருக்கிகளில் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. இப்படியானதொரு வேண்டுகோளை விடுப்பதற்கு பொலிஸாரின் முன் அனுமதியைப்பெறவில்லை என்கிற குற்றச்சாட்டின் பேரில் வவுனியா வர்த்தகர் சங்கத் தலைவர் டி.கே.ராஜலிங்கம் கைது செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாத காரணத்தினால் பாடசாலைகள் மாணவர்களின்றி வெறிச்சோடிக் கிடந்தன. அரச செயலகம், பிரதேச செயலகம், அஞ்சல் அலுவலகம், விவசாயக் கல்லூரி, இராசேந்திரன்குளம் ஆடைத்தொழிற்சாலை என்பவற்றின் எதிரில் அரச ஊழியர்கள், மாணவர்கள் ஆடைத் தொழிற்சாலை பணியாளர்கள் மற்றும் பொது மக்கள் வீதியோரத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அரச செயலகம் மற்றும் பிரதேச செயலக அரச ஊழியர்கள் அரச செயலகத்தில் இருந்து பிரதேச செயலகம் வரையில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியிருந்தனர்.

பொலிஸார் பெரும் எண்ணிக்கையில் குண்டாந்தடிகள் தடிகளுடன் காவல் கடமையில் நகர வீதிகளின் பல இடங்களிலும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். வேடிக்கை பார்ப்பதற்காக அங்காங்கே வீதிகளில் கூடியிருந்தவர்களை பொலிஸார் கலைத்து துரத்தினர். சிலர் தாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

திருநாவற்குளம், பூந்தோட்டம், வைரவப் புளியங்குளம், பண்டாரிகுளம் ஆகிய இடங்களில் வீதிகளில் டயர்கள் போட்டு எரிக்கப்பட்டிருந்தன. திருநாவற்குளத்தில் டயர்கள் எரிக்கப்பட்டதை படமெடுத்த இரண்டு செய்தியாளர்களை பொலிஸார் தடுத்து வைத்து, பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்று வாக்குமூலம் பதிவு செய்து கொண்டு விடுவித்தனர். இவர்களிடம் செய்தியாளர்களுக்குரிய அடையாள அட்டைகள் இல்லாத நிலையிலேயே அவர்கள் பிடித்துச் செல்லப்பட்டதாக பொலிஸார் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இவர்கள் பிடித்துச் செல்லப்பட்டதை அறிந்து பொலிஸார் நிலையத்திற்குச் சென்ற வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், பொலிஸார் பிடித்து வைத்திருப்பவர்கள் செய்தியாளர்கள் தான் என்பதை உறுதிப்படுத்தியதாக தெரிவித்தார்.

வவுனியா நீதிமன்றப் பகுதியிலும் பொலிஸார் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

நகரின் பல இடங்களிலும் மாணவி வித்தியாவின் மரணத்தைக் கண்டித்து கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. அவருடைய உருவப்படத்துடன் கூடிய பதாகைகளும் காணப்பட்டன. (எ-11)

# வழமைக்குத்...

எடுத்து தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்தது. மாணவர் சமூகம் ஒருபுறம், மறுபுறம் பல்கலைக்கழகம், வர்த்தகர்கள், பொது அமைப்புக்கள் மற்றும் கழகங்கள் என அனைவரும் திரண்டு மாணவியின் கொலைக்கு நீதி கேட்டு போராட்டங்களில் குதித்தனர்.

பொலிஸாரின் எதிர்ப்புக்களின் மத்தியிலும் நீதிக்கான போராட்டங்கள் தொடர்ந்தன.

இந்நிலையில் சந்தேக நபர்களின் விபரங்கள் வெளிவந்த நிலையில் கடந்த 19, 20 ஆம் திகதிகளில் மாபெரும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இப்போராட்டங்களில் இறங்கிய மக்கள் கொலையாளிகளுக்கு உச்சக் கட்டத்தண்டனை கோரி கடைகளை அடைத்தும் போக்குவரத்துக்களை நிறுத்தியும் மாணவர்கள் பாடசாலைகளை மூடியும் தமது கோபத்தை வெளிப்படுத்தினர்.

இதனால் யாழ்.குடாநாடு குறிப்பாக வட மாகாணம் முழுவதும் இயல்பு நிலை பறிக்கப்பட்டது தொடர்ந்து கொலையாளிகளின் விசாரணைகளில் முன்னேற்றம் காணப்படவே மக்கள் எதிர்ப்பு போராட்டங்களை கைவிட்டனர். எனினும் சில இடங்களில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நேற்றைய களநிலைவரப்படி யாழ்.குடாநாட்டில் அனைத்து வர்த்தக நிறுவனங்களும் நேற்று திறக்கப்பட்டன. போக்குவரத்துக்கள் மேற்கொள்ளப்பட்டன. பாடசாலைகளில் மாணவர்களின் வருகை வழமைபோன்று காணப்பட்டது.

இதேபோன்று ஆர்ப்பாட்டப் பேரணிகள் பணிப்புறக்கணிப்பு கடையடைப்பு என எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய நகரப்பகுதிகளிலும் நேற்று நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளது. (எ-4)

# சட்டத்தரணிகள்...

யல் உள்ள சட்டத்தரணிகள் நூலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட முன்னாள் நீதிபதியும், சட்டத்தரணியுமான விக்னராஜா கருத்து வெளியிடும் போதே மேற்படி அறிவிப்பினை விடுத்துள்ளார்.

கடந்த புதன் கிழமை யாழ்.நீதிமன்ற வளாகத்தை முற்றுகையிட்ட கும்பல் வன்முறை வெறியாட்டத்தில் ஈடுபட்டு நீதிமன்ற நடவடிக்கைகளுக்கும் நீதிமன்றத்திற்கு வருகைதந்த பொது மக்கள், சட்டத்தரணிகள், நீதிமன்ற உத்தியோகத்தர்களுக்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்தும் விதமாக நடந்தது நீதிமன்றக் கட்டத் தொகுதிக்கு சேதம் ஏற்படுத்தியதை மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாண பிரதேசத்தில நீதி நிர்வாகத்திற்கு விடுக்கப்பட்டுள்ள பாரிய அச்சுறுத்தல் என்றே கொள்ளப்பட வேண்டும். இத்தகைய சம்பவங்கள் சட்டம் ஒழுங்கை சீர்குலைப்பதோடு சமூகத்தின் இயல்பு வாழ்க்கையினையும் ஸ்தம்பிக்க வைத்து ஆபத்தைக் கொண்டுவந்துள்ளன.சம்பவங்கள் கண்டிக்கும முகமாக இன்று வெள்ளிக்கிழமை வடமாகாண நீதிமன்றங்களில் ஆஜராகும் சட்டத்தரணிகள் அனைவரும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுமாறு அழைப்பபு விடுகின்றோம்.

இப்பணிப்புறக்கணிப்பிற்கு யாழ்ப்பாணம், மல்லாகம், சாவகச்சேரி, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய நீதிமன்றங்களில் ஆஜராகும் அனைத்து சட்டத்தரணிகளும் ஆதரவு வழங்குமாறு கோருகின்றோம்.

அத்துடன் சட்டத்தரணிகளின் புறக்கணிப்பால் பொது மக்களுக்கு ஏற்படக் கூடிய தவிர்க்க முடியாத அசௌகரியங்களுக்கு வருந்துகின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இச்சந்திப்பில்சட்டத்தரணிகளான என்.ஸ்ரீகாந்தா, மு.ரெமீடியஸ், கே.சுகாஸ், சர்மினி விக்னேஸ்வரன் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (எ-4)

# சுவிஸ் குமாருக்கு...

சூத்திரதாரி என சந்தேகிக்கப்படும் சுவிஸ் குமார் புங்குடுதீவில் இருந்து யாழ்ப்பாணத்துக்குத் தப்பிச் செல்ல முற்பட்ட போது வேலணைத் துறைப்பகுதியில் இரவுவேளை இளைஞர்களால் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டார்.

இதனையடுத்து புங்குடுதீவில் இருந்து வந்த அவரது குடும்பத்தினருடன் வந்த சிலர் அவரை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைப்பதாக கூறி அழைத்துச் சென்று தப்பிக்க விட்டனர். அதன் பின் சுவிஸ்குமார் சட்டவிரிவுரையாளர் வி.ரி. தமிழ்மாறனின் உதவியுடன் கொழும்புக்குத் தப்பிச் சென்றார்.

இந்நிலையில் வெள்ளவத்தை மக்களின் முயற்சியில் வெள்ளவத்தை பொலிஸாரால கைது செய்யப்பட்டு நேற்று யாழ்.நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார். இவரை எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை இவர் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படுவார் என்ற அறிவித்தன்படி நீதிமன்றிற்கு முன்பாக பெருமளவானோர் கூடி அதனைத் தொடர்ந்து அசம்பாவிதச் சம்பவங்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (எ-4.9)

# வன்முறையை...

பட்டவர்களை ஆஜர்படுத்தியிருந்த நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவத்தில் நீதவான் என்ற வகையில் என்னால் அவதானிக்கப்பட்டவை என்னவெனில் நீதிமன்றுக்கு மேலும் அச்சுறுத்தல் வரக்கூடிய வகையில் அமைந்துள்ளது.

இச் சம்பவம் நடைபெறுவதற்கு முன்னரே வட பிராந்திய சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் ஜெயசிங்கவிற்கு தொலைபேசி மூலம தொடர்பு கொண்டு நீதிமன்றுக்கு பாதுகாப்பு வழங்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தேன். அவர் எனது வேண்டுகோளுக்கு இணங்கி எவ்வாறு செயற்பட்டார் என்பது தொடர்பில் விசாரணை நடைபெற்று வருகின்றது. அத்துடன் அவர் சம்பவ இடத்துக்கு வரவில்லை எனபதும் குறிப்பிடத்தக்க விடயம்.

வட பகுதியில் உள்ள நீதிமன்றங்கள் சட்ட ஒழுங்குகளை செயற்படுத்து தொடர்பில் பொலிஸாரின் அக்கறை போதுமானதாக இல்லை என்றே தெரிகிறது. நீதித்துறைக்கு அச்சுறுத்தல் ஏற்படும் நிலைக்கு இடமளிக்காது அதை பாதுகாக்கும் பொறுப்பை பொலிஸார் மேற் கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-9)

# கைதான...

டமை என்ற குற்றச்சாட்டின் கீழ் 33 பேரும் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர். இவர்களை எதிர்வரும் மாதம் முதலாம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

4ஆவது கட்டமாக யாழ்.நகர் பகுதியில் இருந்த பொலிஸ் காவலரண், வீதி சமிஞ்ஞை விளக்குகள் , இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துகள் ஆகியவற்றின் மீது தாக்குதல் மேற்கொண்டு சேதங்களை ஏற்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் 14 பேரும் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் மாதம் முதலாம் திகதிவரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

குறித்த வழக்குக்கு சார்பாக 20க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் மன்றில் ஆஜராகி இச்சம்பவம் மிகவும் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று என்றும் நீதிமன்ற நுழைவாயில் மட்டுமன்றி கடமையில் இருந்த பொலிஸார் மீதும் பலர் தாக்குதல் மேற்கொண்டிருந்தமையும் நீதிபதியின் கவனத்துக்கு கொண்டுவருவதாக அவர்கள் தெரிவித்தனர்.

மேலும் மன்றில் சந்தேக நபர்கள் தமக்கு பிணை வழக்கும் படி கோரியிருந்தனர். அதற்கு நீதவான் பிணை வழங்கும் அதிகாரம் இந்த வழக்கில் தனக்கு இல்லை என்றும் பொலிஸார் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் நீதவான் பணித்தார்.(எ-4,9)

# சமாதானத்தை...

கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் போதிய சாட்சியங்கள் இல்லாமல் சட்டபீட விரிவுரையாளர் தமிழ்மாறனை நீதிமன்றில் எக்காரணம் கொண்டும் ஆஜர்ப்படுத்த முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வித்தியாவின் கொலை சம்பவத்தோடு தொடர்புடைய நபர் என்ற சந்தேகத்தில் மக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்ட சுவிஸ் குமார் என அழைக்கப்படும் மகாலிங்கம் சசிக்குமார் என்பவரை தப்பிக்க வழி செய்தார் என மக்களால் குற்றச்சாட்டு முன்வைக்கப்படும் நிலையில் தப்பிக்க வழி செய்த தமிழ்மாறனை புங்குடுதீவில் வைத்து சுற்றிவளைத்த பொது மக்கள் அவரை தாக்க முயற்சித்தனர். இதன போதுதமிழ்மாறனை சுற்றி விசேட அதிரடி படையினர் பாதுகாப்பும் வழங்கியிருந்தனர். இதனால்தமிழமாறன் மக்களின் முற்றுகைக்குள் சுமார் நான்கு மணி நேரம் வரையில் வைக்கப்பட்டிருந்தார். அவரை தம்மிடம் ஒப்படைக்குமாறு மகள் போராட்டத்தை தொடர்ந்தனர்.

இந்நிலையில் குறித்த விரிவுரையாளரினையும் அவர் தப்பிக்க வைத்ததாக கூறப்படும் சுவிஸ் குமாரினையும் யாழ்.நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதாக எழுத்து மூலமாக உறுதியளித்திருந்தார். இவ்வுறுதியளிப்பை மக்கள் ஆரம்பத்தில் ஏற்றுக் கொள்ளாத போதிலும பின்னர் அதனை ஏற்றுக்கொண்டு தமிழ் மாறனை தமது முற்றுகைக்குள் இருந்து விடுவித்திருந்தனர். இந்நிலையில் சிரேஷ்ட பொலிஸ்மா அத்தியட்சகரின் உறுதியளிப்பு நேற்றைய தினம் நிறைவேற்றப்படவில்லை. அது அடுத்து வரும் நாட்களிலேயே நிறை வேற்றப்படுமா? என்பது குறித்து பொலிஸ்மா அதிபரிடம் ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட போது, ஒருவர் தவறு செய்தார் என்றால் சாட்சிகள் இருக்க வேண்டும் அவ்வாறு இருந்தால் மட்டுமே எங்களரல் கைது செய்ய முடியும். அந்த வகையில் சட்டவிரிவுரையாளர் தொடர்பில் சாட்சிகள் எம்மிடம் இல்லை. அவ்வாறு இருந்தால் எமக்கு வழங்கினால் அவரையும் நாம் கைது செய்வோம். அசாதாரண சூழல இருந்தால் அதனை சமாதானமான சூழலாக மாற்ற வேண்டியது பொலிஸாரின் கடமை. அந்த சந்தர்ப்பங்களில் மேற்கூறப்பட்ட சில விடயங்களை பொலிஸாராகிய நாம் மக்களின் நலன்களை கருத்திற் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய தேவை பொலிஸாராகிய எமக்கு உள்ளது.

சூழலைப் பொறுத்து அவ்வாறு நடவடிக்கைகளை மேற்கொண்டால் மட்டுமே அசாதாரண சூழ்நிலையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியும். எனவே புங்குடுதீவில் நிலவிய அன்றைய அசாதாரண சூழலை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்கு மேற்கூறிய உறுதியளிப்பு நடவடிக்கையினை மேற்கொண்டேன்.

ஆனால் சட்ட விரிவுரையாளர் மன்றில் முற்படுத்தப்பட மாட்டார் எனறும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் சிறுமியின் படுகொலையுடன் தொடர்புடையவர்கள் தொடர்பிலோ அல்லது அவர்களுக்கு உதவினர் என்ற பெயரிலோ யாராவது செயற்பட்டால் அதனை எமக்கு சாட்சியங்களுடன் தெரியப்படுத்துங்கள்.

அவர்களைக் கைது செய்வதுடன் மேலதிக நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்ள தயாராகவுள்ளோம் என்றும் இதில் சட்ட பீட விரிவுரையாளரும் சம்பந்தப்பட்டிருந்தால் அதனை சாட்சியங்களுடன் நிரூபித்தால் அவரையும் நாம் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்ப படுத்த தயாராக உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-4)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி சுதாமதி சிவானந்தமூர்த்தி அவர்களின் அன்பு மாமனார்

**கணபதிப்பிள்ளை ஏரம்பமூர்த்தி**

(நியூசிலாந்து)

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**நீர்வேலி சி.சி.த.க பாடசாலை**

(541)

## Obituary and Appreciation

### Mrs.Pushparanee (Queenie) Thambyrajah



Mrs.Pushparanee (Queenie) Thambyrajah (nee Abraham) Passed away in Colombo on 21st May 2015.

She was a much loved, devoted and dedicated teacher at Jaffna College, Vaddukoddai for 30 years. She was associated with Ja ffna College from her School days up to her retirement on 28th February, 1991. She served as its Primary School Supervisor and handled its activities very efficiently. She was noted for her smartness and motherly approach. towards the students.

She leaves behind her loving husband lesley Thambyrajah (former Accountant, Jaffna College) and Children Romela Nevins (UK), Jeshura Abraham (Australia) and shirela Canagarajah (U.S.A)

The Funeral service will be held at the A.F.Raymond Parlour, Borella on Saturday 23rd May, at 3.00PM.

6, Ratnakara Place,
Dehiwela.
Tel:0115040191

Principal, Teachers and
Students, Jaffna College

(543)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதான...

தரவிடப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் மன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது அவர்கள் மீது உரிமையுடைய பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளை வித்தமை, பொலிஸார்மீது தாக்குதல் மேற்கொண்டு காயங்களை ஏற்படுத்தியமை, சட்ட விரோதமான கூட்டங்களை கூட்டியமை பொலிஸாரை கடமை செய்ய விடாது இடையூறு விளைவித்தமை மற்றும் கைது செய்யப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைத்திருக்கப்பட்ட வேளை தம்மையும தம்மைச் சார்ந்தவர்களையும் விடுவிப்பதற்கு முயறசிகளை மேற்கொண்டமை போன்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

இதேவேளை இக்குற்றச்சாட்டுக்கள் அனைத்திற்கும் 4 பிரிவுகளாக கைது செய்யப்பட்டவர்கள் பிரிக்கப்பட்டு மன்றில் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர்.

இதன்படி உரிமையுடை பொது இடத்திற்கு அத்துமீறி நுழைந்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை சட்டவிரோதமான கூட்டத்தை கூட்டி பொலிஸார் மீது கல், தடிகளால் தாக்குதல் மேற்கொண்டமை, அவர்களை கடமைகள் செய்யவிடாது இடையூறு விளைவித்தமை போன்ற குற்றச்சாட்டின் கீழ் 43 பேர் நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டிருந்தனர்.

இவர்களை எதிர் வரும் 6 ஆம் மாதம் 3 திகதிவரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார். அடுத்த கட்டமாக சட்டவிரோதமான கூட்டத்தினை கூட்டி கலகத்தினை ஏற்படுத்தியமை, உறுப்பினர்களாக இருந்து கொண்டு கைது செய்யப்பட்டவர்களை வெளியில் கொண்டுவர முயற்சிகளை மேற்கொண்டமை, நகரப் பகுதிகளில் போக்குவரத்திற்கு தடையாக ரயர்களை கொளுத்தியமை போன்ற குற்றத்தின் கீழ் ஏனையவர்களில் 40 பேரும் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களை எதிர் வரும் மாதம் 4 ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டிருந்தார். 3 ஆவது கட்டமாக சட்டவிரோதமான முறையில் ஒன்று கூடி பொலிஸாருக்கு காயங்கள் ஏற்படுத்தும் நோக்கில் தாக்குதல் மேற்கொண்

23ஆம் பக்கம் பார்க்க....

15 வருடங்களுக்கு மேற்பட்ட விசா சேவை நிபுணத்துவ அனுபவம் கொண்ட கொழும்பு சட்ட வல்லுநர்கள் ஊடாக...
எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்...
STUDENT VISA – SPOUSE VISA – DEPENDANT VISA – WORK VISA – SKILLED MIGRATION – VISIT VISA
கனடா Express Entry Visa
தொழில்வாய்ப்புடன் குடியுரிமை (PR)
Degree/Diplomaவுடன் குறைந்தது ஒரு வருட தொழில் அனுபவம் உள்ளவர்கள் மட்டும்
Student VISA
UK, Australia, Spain, New Zealand, Canada Switzerland & Malaysia
FREE Assessment Send your CV to info@sikaram.lk
மேலதிக விபரங்களையும் ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றியும் அறிந்துகொள்ள
www.sikaram.lk
Sikaram (Pvt) Ltd.
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0777 32 4004, 021 222 00 11
(C-1024)

WEC சட்டரீதியான வீசா ஆலோசனை மையம்
இலவச கல்விக்கருத்தரங்கு
ஐரோப்பிய நாடுகளில்
உயர் கல்விகற்க மாணவர்களே
உங்களிற்கு ஒரு மகத்தான வாய்ப்பு.
IELTS வேண்டவே வேண்டாம்.
G.C.E O/L 6 பாட தகுதியே போதுமானது.
இடம்: நெல்லியடி விசா ஆலோசனை மைய கேட்போர் கூடம்.
காலம்: 23.05.2015, 24.05.2015 (saturday,Sunday)
நேரம்: 10am-3pm
City & Guilds APPROVED CENTRE-UK
0779265447
சேவை நேரம்: 9am-7pm வரை
(C-1016)
மேல்மாகாண பிரபல ஆசிரியரின் வழிகாட்டலில் IELTS,IELTS Life skills, City&Guilds A1,B1, Deutsch வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
சங்கத்தானை, சாவகச்சேரி (இந்துக்கல்லூரிக்கு அருகே) 021 7200 989
பருத்தித்துறை வீதி, நெல்லியடி (முகின்ஸ் Hospitel அருகே) 021 7201 929

English for you
மாணவர்கள், மற்றும் தொழில் புரிவோருக்கான English Personal Class
(538)
தொடர்புகளுக்கு : 077 6169 470

விற்பனைக்கு
கரணவாய் குஞ்சர்கடைச் சந்தியிலிருந்து உடுப்பிட்டி செல்லும் குறுக்கு வீதியில் 200 மீற்றர் தூரத்தில் வீடு, கிணறு அடங்கிய 22 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (C-1028)
தொடர்பு : 0758418431

உடனடி வேலைவாய்ப்பு
30 ஆண்டுகளாக இயங்கிவரும் எமது D.M.I நிறுவனத்தில் புதிய கிளைகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய இடங்களில் ஆரம்பிக்க இருப்பதால் பதவி வெற்றிடங்கள் உள்ளன.
O/L, A/L முடித்தவர்கள் உடனே அழையுங்கள்.
வயதெல்லை 18-35
No. 28, 3-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
T.P.: 0771908997, 0770771377, 0779660885
(544)

A/L பொருளியல்
வினா-விடை 4
(542)
• பணம் வங்கி விலை மட்டம் • வங்கியாளர் பரீட்சைக்கும் ஏற்றது
• உயர் சித்திபெற இலகு வழிகாட்டி
ரூபாய் : 200
வே.கருணாகரன் ஆசிரியர் : பொருளியற் கல்லூரி
பூபாலசிங்கம் புத்தகசாலை / அன்னை புத்தகசாலை

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் ஒரே சர்வதேச நிறுவனம்.
உலகம் முழுவதும் 1040+ கிளைகள்.
INTERNATIONAL DIPLOMAS.
ஆசிரியர்கள்: யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்)
வகுப்புகளுக்கு உடன் அழையுங்கள்
(531)
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

BA (கலைமாணி) பேராதனை பல்கலைக்கழகம் (வெளிவாரி)
கடந்த காலங்களில் நடைமுறையில் உள்ள G.A.Q தான் புதிய நடைமுறையின் கீழ் B.A முதலாம் ஆண்டு என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனை மாணவர்களின் கவனத்திற்கு அறியத் தருகின்றோம்.
• A/L ல் கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆகும்.
• A/L ல் புதிய, பழைய பாடத்திட்டத்தின் கீழ் பரீட்சை எடுத்த மாணவர்கள் அனைவரும் பதிவினை மேற்கொள்ள முடியும்.
• இப்பட்ட நெறியின் கால எல்லை மூன்று ஆண்டுகளாகும்
• பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
• பதிவு முடிவு திகதி 30.06.2015
• விரிவுரைகள் ஆரம்பம் 23.05.2015 காலை 8.00 மணி
• வட மாகாணத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே நிறுவனம் புதிய உயர் கல்லூரி ஆகும்.
குறிப்பு : கடந்த காலத்தில் G.A.Q பதிவினை மேற்கொள்வதற்காக ஆவணங்களை ஒப்படைத்த மாணவர்கள் அனைவரும் பதிவினை மேற்கொள்ள முடியும்.
• விரிவுரைகளில் பங்கேற்கும் வெளிமாவட்ட மாணவர்கட்கான தங்குமிட வசதி இலவசம்.
விபரங்கட்கு S.அருள்நங்கை (நிர்வாகி) புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. : 021 222 8148, 021 568 9477, 077 801 9187, 077 662 1856 (C-1029)

கரம்பொன், அன்னை வேளாங்கண்ணி மாதா யாஸ்திரை தலதிருவிழா

இன்று 22.05.2015 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு, திருச்செபமாலையும், தொடர்ந்து அன்னையின் திருவுருவம் தாங்கிய கொடி ஏற்றப்பட்டு நவநாள் வழிபாடுகள் ஆரம்பமாகின்றது.
22-ம் திகதியிலிருந்து தினமும் மாலை 5.00 மணிக்கு திருச்செபமாலையும் தொடர்ந்து திருப்பலியும் இடம்பெறும். 30.05.2015 சனிககிழமை நற்கருணை விழாவும், 31.05.2015 ஞாயிற்றுக்கிழமை திருவிழாத் திருப்பலி காலை 6.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி அன்னையின் திருச்சொருப பவனியுடன் திருவிழா இனிதே நிறைவடையும்.
அன்னையின் ஆசீர்பெற அன்போடு அழைக்கின்றோம்.
பங்குத்தந்தையும், பங்கு மக்களும்.
(C-1034) A.C.D Jaffna.

வெளிவந்து விற்பனையாகிறது !
நாடளாவரீதியில் 12 முன்னணி ஆசிரியர்களின் ஆக்கத்தில்
யாழ் எக்ஸ்பிரஸ்
தரம் 1, தரம் 2, தரம் 3, தரம் 4, தரம் 5 வரை மாணவர்களுக்கு
இரண்டாம் தவணை
தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம் ஆகிய பாடங்களின் 12 வினாத்தாள்கள்
12 மாதிரி வினாத்தாள்கள் விடையுடன்
விற்பனையாளர்கள், பாடசாலைகள் தொடர்பு கொள்ளவும்.
வெளியீடு :
யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன்
இல. 10-1/1 ( Trust Complex Sea Street) முதலாம் மாடி, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு 13. தொ.பே : 077 625[illegible]
விலை :
தரம் 1, 2 - 140/-
தரம் 3, 4, 5 - 150/-
(C-1027)

இணுவில் அறிவாலயம் 10-ம் ஆண்டு நிறைவு விழா அழைப்பு
காலம் : 23.05.2015 சனிக்கிழமை மாலை 4.00 மணி
இடம் : அறிவாலயம் கேட்போர் கூடம் (இணுவில் கந்தசாமி கோவிலடி)
தலைவர் - திரு.அ.குகதாசன்
(தலைவர்-அறிவாலயம், ஓய்வு பெற்ற பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி)
பிரதம விருந்தினர்
நா.வேதநாயகன் அவர்கள் (அரச அதிபர் - யாழ் மாவட்டம்)
சிறப்பு விருந்தினர்கள்
A.V.R.குகவரதன் அவர்கள் (லண்டன்),
திரு.சி.கருணாமூர்த்தி அவர்கள் (லண்டன்), திரு.வை.தனகேசவன் (லண்டன்)
சிறப்புவிருந்தினர்
செல்வி ஞானலோசினி சிவஞானம் அவர்கள் (சட்டத்தரணி)
Dr.மூ.பஞ்சலிங்கம் அவர்கள்
6 மணிக்கு : சிறப்புரை மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி.S.இந்திரா அம்மையார் (தமிழ்நாடு, இந்தியா)
விழா சிறப்புற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
நிர்வாகம் : இணுவில் அறிவாலயம்
(530)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.05.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org